திருக்கோயில்களில் தொழில் சமுதாய உறவுகள்

TNSDA
09687

முனைவர் ராஜசேகரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

திருக்கோயில்களில் தொழில் சமுதாய உறவுகள்

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
9687
MADRAS-28.

முனைவர். சு. ராஜசேகரன்
தேர்வுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை
மாநிலக் கல்லூரி
சென்னை-5

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை- 600 113

டாக்டர் செ. அரங்கநாயகம் அறக்கட்டளைச்
சொற்பொழிவு—6
3,4-10-94

Dr. C. Arankanayagam Endowment Lecture No 6.

Bibliographical Data

Title	:	tirukoyilkalil tolil camudaya uravukal
Auther	:	Dr. S. Rajasekaran Dept. of Tamil, Madras.
Publisher+Copy right	:	International Institute of Tamil Studies, T T.T.I. P.o., Tharamani, Madras-600113.
Publication Number	:	233
Language	:	Tamil
Date of Publication	:	December 1995
Edition	:	First
Paper used	:	15/2 kg. D/Demy
Size of the book	:	22×15cm
Printing type used	:	10 point
Number of pages	:	viii+132
Number of copies	:	1200
Price	:	Rs. 25/-
Printers	:	Sri Gomathy Achagam, Madhavaram, Madras-60
Binding	:	Card board
Artist	:	Sathya
Subject	:	Tamil Culture

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு
நிறுவனம் பொறுப்பல்ல.

வெள்ளி விழா வெளியீடு

டாக்டர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600113

அணிந்துரை

ஆழ்ந்த சிந்தனைகளைத் தன்னுள் தாங்கி நிற்கும் பழமொழிகள், மனிதர் தம் பட்டறிவில் பிறந்தவை. 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற மொழியும் இவற்றுள் ஒன்று. சமய வளர்ச்சி, பக்தியுணர்வு இவை மட்டுமே இப்பழமொழி சுட்டும் குடியிருப்பு தோறும் கோயில் வேண்டும் என்ற விருப்பிற்குரிய காரணங்கள் அல்ல. பிறவும் பல உள என்ற கருத்தில் தோன்றியதே இம்மொழி. கல்வி நிறுவனமாகவும், கலைச் சாலையாகவும், மருத்துவ நிலையமாகவும், வேலைவாய்ப்புத் தரும் அமைப்பாகவும் கோயில்கள் விளங்கியிருந்தமை குறிப்பிடற்குரிய சில எனவே தனியனித மேம்பாடும் சமுதாய மேம்பாடும் கருதிய நிலையில் தமிழகத்தில் கோயில்கள் வளர்ச்சி பெற்று வந்துள்ளன என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இத்தகைய கோயிலின் வரலாற்றை வரலாற்று நோக்கில் தருகின்றார் சு. ராஜசேகரன். 'திருக்கோயில்களில் தொழில் சமுதாய உறவுகள்' என்ற பொருளில் 'டாக்டர் செ. அரங்கநாயகம் அறக்கட்டளையின்' சார்பில் நிகழ்த்திய இச்சொற்பொழிவுகள், தமிழர் கோயில் - வரலாற்றுக்கு ஒரு முன்னோடி கோயில்களின் தோற்றம், அவற்றின் வளர்ச்சி, கோயில்—சமுதாய உறவுகள், கோயில் தொழில் உறவுகள் போன்றவற்றைப் பல்வேறு மூலங்களின் அடிப்படையில் தொகுத்து, ஆராய்ந்து சிறப்புறத் தந்துள்ளார். பல புதிய செய்திகளும் இந்நூலுள் நமக்குக் கிடைக்கின்றன. இத்தகைய அரியதொரு நூலைத் தந்த முனைவர் சு. ராஜசேகரன் பாராட்டுக்குரியவர். இது போன்று பல நூல்களை அவர் தமிழுலகிற்கு அளிக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

நிறுவனத்தில் இவ்வறக்கட்டளையை நிறுவிய தமிழன்பர்கள் நன்றிக்குரியோர்.

நிறுவனத்தின் அனைத்துச் சிறப்பு நிகழ்வுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் மாண்புமிகு கல்வி அமைச்சர் (நிறுவனத் தலைவர்) அவர்களுக்கு நன்றி. எங்கள் பணிகள் அனைத்திற்கும் சிறப்பான முறையில் துணை நிற்கும் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலர் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவை அறக்கட்டளைப் பொறுப்பாளராக இருந்து ஏற்பாடு செய்து சிறந்த முறையில் நடத்திய டாக்டர் ச. சிவகாமி அவர்களுக்கு நன்றி. சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த கோமதி அச்சகத்தினர்க்கு எங்கள் நன்றி.

அன்புடன்,

இயக்குநர்

முன்னுரை

சங்க காலத்திலிருந்து திருக்கோயில்கள் தமிழர் வாழ்க்கையில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்று விளங்குகின்றன. திருக்கோயில்கள் வழிபடும் இடங்களாக மட்டுமல்லாமல் வாழ்க்கைக்கு உதவும் நிறுவனங்களாகவும் விளங்குகின்றன. திருக்கோயில் பற்றி ஆய்வு செய்பவர்கள் பெரும்பாலும் அது தோன்றிய வரலாறு, அதன் அமைப்பு, அங்கு நடைபெறும் சடங்குகள் என்ற அளவிலேயே தங்கள் ஆய்வை வரையறுத்துக் கொள்கிறார்கள் மேலும், சில ஆய்வாளர்கள் ஒவ்வொரு குறிப்பிட்ட காலப் பகுதியை எடுத்துக் கொண்டு அக்காலக் கோயில்களைப் பற்றி ஆய்வு செய்கின்றார்கள். கோயில்களுக்குச் சமுதாயத்தோடு உள்ள பிணைப்பை முனைவர் கே. கே. பிள்ளை, சுசீந்திரம் கோயில் என்னும் ஆங்கில நூலில் 1946ஆம் ஆண்டிலேயே ஓரளவு வெளிப்படுத்தியுள்ளார். ஆர். என். நந்தி அவர்கள், தக்காணத்திலுள்ள சமய நிறுவனங்களும், வழிபாட்டு முறைகளும் என்னும் தலைப்பில் 1973ஆம் ஆண்டில் வெளியிட்ட ஆங்கில நூலில் திருக்கோயில்கள் எவ்வாறு சமுதாய நிறுவனங்களாக விளங்குகின்றன என்பதை விரிவாக விளக்கியுள்ளார். முனைவர் நாகப்பா நாச்சியப்பன் 1989இல் எழுதி வெளியிட்ட திருப்பரங்குன்றம் கோயில் வேற் கோட்டம் என்னும் நூலும், முனைவர் பு. பா. உமாமகேசுவரி 1990இல் எழுதி வெளியிட்ட நெல்லையப்பர் கோயில் என்னும் நூலும் ஓரளவு சமூகப் பொருளியல் நோக்கில் அமைந்துள்ளன.

அண்மையில் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையைச் சேர்ந்த முனைவர் டி. தயாளன் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ள தொடக்கக்காலத் தமிழ்நாட்டுக் கோயில்கள் (கி. பி. 550-925) என்னும் நூலில் சமூகப் பொருளியல் வாழ்வில் கோயில்களின் பங்கு பற்றி விளக்கமாக எழுதியுள்ளார். ஆனால், அவர் கோயில் தொடர்பான தொழில்களை விளக்கி எழுதவில்லை.

இரு நாள்கள் நிகழ்ச்சி இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவில் திருக்கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும், திருக்கோயில்களும் சமுதாய உறவுகளும், திருக்கோயில்களும் தொழில் உறவுகளும் என்னும் மூன்று தலைப்புகளில் செய்திகள் கூறப்பட்டன. முதலிரண்டு தலைப்புகளில் சங்க காலம் முதற்கொண்டு இக்காலம் வரையுள்ள கோயில்கள் பற்றியும், அக்கோயில்களின் நிருவாகப் பற்றியும், சமுதாயத் தொடர்பு பற்றியும் விளக்கபபட்டுள்ளது. மூன்றாவது தலைப்பில் இக்காலத்துக் கோயில் தொடர்பான தொழில்கள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

இந்தச் சொற்பொழிவில் கூறப்பட்டுள்ள செய்திகள். இலக்கியங்கள், வரலாற்று நூல்கள், கல்வெட்டுகள், கள ஆய்வு பேட்டிகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆராய்ந்து கூறப்பட்டவையாகும்.

டாக்டர் செ அரங்கநாயகம் அறக்கட்டளைச் சொற்பொழிவாற்ற, என்னை அழைத்துப் பெருமைப்படுத்திய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அறக்கட்டளைக் குழுவிற்கும் அறக்கட்டளைச் சொற்பொழிவு நூலாக, வெளிவருவதற்குப் பெரிதும் காரணமாக இருந்த. இயக்குநர், முனைவர் ச. சு. இராமர் இளங்கோ அவர்களுக்கும், முனைவர் அன்னிதாமசு அவர்களுக்கும், அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கும் என் நன்றி.

அரிய நூல்களைத் தந்து. நெறிப்படுத்தி எப்போதும் என்னை ஊக்குவித்துக் கொண்டே இருக்கும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறை இணைப் பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கு நன்றி.

ஆய்வுப் பணிகளுக்கு அன்போடு அனுமதி வழங்கி வரும் மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மா. ரா. தமிழரசி அவர்களுக்கு நன்றி.

திருக்கோயில் தொடர்பான தொழில்கள் இவை இவை என்று எனக்குக் கோடிட்டுக்காட்டி, ஓர் ஆய்வுச் சுருக்கத்தையே அளித்த பெரியவரும், சைதாப்பேட்டை அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் திருத்தொண்டாற்றி

வருபவரும் எல்லோராலும் சிவா என்று அன்போடு அழைக்கப் படுபவருமான திரு மு. கச்சியப்ப பிள்ளை அவர்களுக்கு என் நன்றி.

மேலும், திருக்கோயில் தொடர்பான தொழில்கள் குறித்த தகவல்களைத் தந்த பழனி சித்தனாதன் பரிமள விலாஸ் விபூதி ஸ்டோர் உரிமையாளர்களில் ஒருவரான திரு கு. சிவனேசன் அவர்களுக்கும் மாமல்லபுரம் சிற்பக் கல்லூரி வார்ப்புக் கலைப் பேராசிரியர் சோ. பூபதி ஸ்தபதி அவர்களுக்கும், சிற்பி ச. நித்தியானந்த ஆசாரி, அவர்களுக்கும், சிற்பி மு. ஆதிமூலம், டி. டி. எஸ். ஏ. அவர்களுக்கும், கவசம் செய்யும் கலையில் வல்ல மயிலாடுதுறை திரு ச. பழனி ஆச்சாரி அவர்களுக்கும், திரு மழிசை நுண்சிற்ப வேலை வல்லுநர் திரு வை. காளாஸ்திரி ஆச்சாரி அவர்களுக்கும், தேர்ச் சிற்பி திரு மு. தாண்டவராய ஆச்சாரி அவர்களுக்கும், மண் சுதை, சிமெண்ட், தாள் பொம்மை செய்யும் சிற்பி திருவதிகை எம். நாகலிங்கம் அவர் களுக்கும், திருமயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் பிரசாதக்கடை ஏலதாரர் திருப்பெருந்துறை சிவ ஆத்மநாதன் அவர்களுக்கும், அர்ச்சகர் காஞ்சிபுரம் திரு அ. மோகனசுந்தர குருக்கள் அவர்களுக்கும், பரிசாரகர் சீர்காழி திரு டி. சுவாமி நாதன் அவர்களுக்கும் என் நன்றி உரித்து.

சு. ராஜசேகரன்

பொருளடக்கம்

திருக்கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும் ... 1

திருக்கோயில்களும் சமுதாய உறவுகளும் ... 24

திருக்கோயில்களில் தொழில் உறவுகள் ... 83

தொகுப்புரை ... 129

திருக்கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும்

முன்னுரை

மனிதன் காட்டுமிராண்டியாக இருந்த கற்காலத்திலிருந்தே கூடி வாழத் தொடங்கினான். அதற்குக் காரணம் அச்சம்தான். தனியாக இருக்கும்போது மேகக்கூட்டங்களிடையேயிருந்து எழுந்த மின்னலையும் இடிமுழக்கத்தையும் கண்டான்; கேட்டான்; அஞ்சினான். அதுபோலவே வனவிலங்குகளைக் கண்டபோதும் காட்டுத்தீயைக் கண்டபோதும் இருளைக் கண்டபோதும் அஞ்சினான். தன்னைக்காட்டிலும் வலிமை மிகுந்தவனைக் கண்டும் அஞ்சினான். இந்த அச்ச உணர்வு நீங்க மற்ற மனிதர்களோடு ஒன்று சேர்ந்தான். கூட்டமாக இருந்தபோது பயம் நீங்கியதை அறிந்தவுடன் கூடிவாழும் வாழ்க்கையை மேற்கொண்டான். அச்சம் வரும்போது வேறுவழி இல்லாமல் கண்களை மூடிக்கொண்டான். தரையில் புகலிடம் தேடினான். குப்புற மண்ணில் விழுந்து முகம் புதைத்தான். இந்தப் பழக்கம் பிற்காலத்தில் வணக்கமாகவும், சரணாகதியாகவும் மாறியது. அச்ச உணர்வு காரணமாகவே பணிவும் ஏற்பட்டது. இந்த உணர்வு நம்மிடையே இருந்து நீக்க முடியாத ஒன்றாக ஆகிவிட்டது. அதனால்தான் வள்ளுவரும் ''அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்'' என்றும்,[1] ''செறுநரைக் காணின் சுமக்க''[2] என்றும் கூறியுள்ளார்.

அச்ச உணர்வு

அச்ச உணர்வுதான் கடவுள் நம்பிக்கைக்கும் வழிபாட்டிற்கும் அடிப்படையாக அமைந்தது. சூரியன், சந்திரன், இடி, மின்னல், மழை, நெருப்பு, காற்று ஆகிய இயற்கையின் சக்தி

---

1. திருக்குறள், திருக்குறள் அறநிலைய வெளியீடு, சென்னை, 1954, குறள் 428.
2. திருக்குறள், திருக்குறள் அறநிலைய வெளியீடு, சென்னை, 1954, குறள். 488.

களைக் கண்டு மனிதன் அஞ்சி வணங்கினான். கோடை வெய்யிலிலிருந்து காப்பாற்றிக் கனிகளையும் தந்து உதவிய மரங்களை வணங்கத் தொடங்கினான். பாம்பையும் யானையையும் கண்டு பயந்து வணங்கினான்.

தன்னுடன் கூடி வாழ்ந்த மற்றொரு மனிதன் இறந்த போதும் அஞ்சினான். அவனைப் புதைத்த இடத்தில் அடையாளக் கல் வைத்து வணங்கினான். பிற்காலத்தில் அதுவே நடுகல் வழிபாடாகவும் தென்புலத்தார் வழிபாடாகவும் கடவுள் வழிபாடாகவும் மாறியது.[3]

மனிதன் படிப்படியாகத் தன் பகுத்தறிவைப் பயன்படுத்தி முன்னேறினான். நெருப்பையும் உலோகத்தையும் பற்றி அறிந்து கொண்டான். மலையில் பிறந்து, காட்டில் இறங்கி நாட்டில் வாழத் தொடங்கியது மனித சமுதாயம். இதனையே தமிழ் இலக்கியப் பண்பாடும் குறிஞ்சி, முல்லை, மருதம் என்று சொல்லிப் போற்றியது. ஆறறங்கரைகளில் மனித சமுதாயம் வாழத்தொடங்கியபோது பயிர்த்தொழிலை மேற்கொண்டது.[4] இப்படிப்பட்ட நிலையில்தான் கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூறு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகம் இருந்தது.

அந்நியப் படையெடுப்புகளுக்கு ஆளாகாமல் இருந்த காலத்தில் தமிழ்ச் சமுதாயம் எந்தவிதமான அயலாரின் பண்பாட்டுத் தாக்குதலும் இல்லாமல் தனித்திருந்தது. மக்கள் ஒரே இனமாக வாழ்ந்து கொண்டிருந்த காலம், பெண் ஆதிக்க காலம். மக்களிடையே ஆண் பெண் பாகுபாட்டைத் தவிர, வருணாசிரமச் சாதிப் பாகுபாடுகள் இல்லாதிருந்த காலம், மக்கள் எல்லோரும் இணைந்து வயலிலே பாடுபட்டு வாழ்ந்திருந்த காலம்.

கவர்ச்சிக்கும் இனவிருத்திக்கும் பெண் காரணமாக இருந்தாள். அதனால் பெண் காரணமாக ஆண்களுக்கிடையே

---

3. திருக்குறள், திருக்குறள் அறநிலைய வெளியீடு, சென்னை. 1954, குறள் 43.
4. Henry Whitehead, The Village Gods of South India, Asian Educational Services, New Delhi, Reprint, 1983, p. 17.

சண்டை ஏற்பட்டது. பெண் நினைத்ததைச் சாதித்தாள். அதனால் பெண் சக்தியாகக் கருதப்பட்டாள். சமுதாயத் தலைமை ஏற்றாள். ஆடவர் அவளுக்கு அஞ்சி நடந்தனர். அந்த அச்சம் பின்னர்ப் பெண் தெய்வ வழிபாட்டுக்கு அடிப் படையாக அமைந்தது.

கடவுளை வழிபடக் காரணம்

மிகப் பழங்காலத்தில் அச்சத்தின் காரணமாகவும் பாது காப்பு காரணமாகவும் தேவை காரணமாகவும் கடவுள் வழிபாடு தோன்றியது எனலாம். அதனால்தான் பின்னாளில் தோன்றிய எல்லாச் சமயங்களும் கடவுளர் திருமேனிகளும் கடவுள் தன்மை பெற்ற மனிதர்களும், 'அஞ்சாதீர்கள்! பாரத்தை என்னிடம் சுமக்கவிடுங்கள். நான் உங்களுக்கு அடைக்கலம் அளிக்கின்றேன். கவலையற்று இருங்கள்; காப்பாற்றுகின்றேன்; நீங்கள் கேட்பதை அளிக்கின்றேன்' என்று கூறுகிறார்கள். காக்க காக்க என்று கவிஞர்களும் கவசம் பாடத் தொடங்கினர்.[5] தெய்வத்திரு உருவங்களும் 'அஞ்சாதே! என்னிடம் ஆயுதங்கள் இருக்கின்றன. என்னிடம் அடைக்கலம் புகுந்தால் உன்னைக் காப்பாற்றுகிறேன். உனக்குத் தேவை யானதை அளிக்கின்றேன்' என்று கரங்களில் ஆயுதங்கள் ஏந்தி அபய ஹஸ்தத்தையும், வரத ஹஸ்தத்தையும் காட்டி அருள் செய்கின்றன.

இந்த அடிப்படையில் கடவுளர்களும், கடவுளர்களுக்காகக் கோயில்களும், கோயில்களுக்காகச் சமயங்களும் ஏற்பட்டன. பின்னர்ச் சமயங்கள் தங்களைக் காத்துக்கொள்ளக் கோயில் களைக் கட்டத் தொடங்கின. கோயில்கள் தோன்றியதன் காரணமாகக் கடவுளரும் நிலைத்த இடத்தைப் பெற்று விட்டனர்.

பரம்பொருள்

உள்ளுணர்வும் பகுத்தறிவும் கொண்ட மனிதர் நாகரிகம் பெறப்பெற உலக இயக்கத்தையும் படைப்பையும் மனித வாழ்வையும், அவனைச் சூழ்ந்த உலக வாழ்வையும் ஒருங்கு சேர்த்து இயக்கும் மேலான பரம்பொருள் உண்டென்பதை

5. தேவராஜ சுவாமிகள், கந்த சஷ்டி கவசம்.

உறுதியாக நம்பினர். அதனைப் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்ய முற்பட்டனர். அதன் விளைவாக, அம்மேலான பரம் பொருள் அன்பால் ஆட்டிவிக்கப்படுகிறதென்றும், மனிதனுடைய சிந்தனைக்கு அப்பாற்பட்டதென்றும், அப்பரம் பொருளே யாவற்றையும் இயக்குகின்றது என்பதையும் உய்த்தறிந்தனர். அப்பரம்பொருளையே கடவுள்—இயவுள்—இறை எனப் பொதுப் பெயரிட்டு அழைத்தனர்.[6]

வழிபடு முறை

மிகப் பழங்காலத்தில் தமிழருடைய வழிபாட்டிலே 'வெறியாட்டு' முதன்மையிடத்தைப் பெற்றிருந்தது. இவ்வழி பாடுகளில் பூசாரிகள் இல்லை வழிபடுவோர் இறைவன் தம்மிலே வந்து வெளிப்படுவான் என்னும் நம்பிக்கையுடன் கூத்தாடினர்.[7] இதற்குப் பிறகு போரில் இறந்த வீரருக்கு நடுகல் வைத்து வழிபடும் வழக்கம் தோன்றியது.[8] நெய்தல் இனமக்கள் சுறாவின் கொம்பைக் கடல் தெய்வத்தின் அடையாளமாக வைத்து வணங்கினர்.[9]

'மனிதன் தன்னுடைய தேவைகளின்போது தெய்வத்தை நாடுகின்றான். தெய்வத்தோடு தொடர்பு கொள்வதற்குக் கண்ணால் காணக்கூடிய ஒன்று தேவைப்படுகிறது. அப்போது அவனுக்கு உதவுவது கடவுள் சின்னங்கள்; உருவங்கள்; வழிபடும் இடங்கள்' என்று சுவாமி ஹர்ஷானந்தா கூறுகிறார்.[10]

---

6. சு. ராஜசேகரன், திருமயிலைத் திருத்தலம், ராஜலட்சுமி பதிப்பகம், முதல் பதிப்பு, சென்னை, 1989, ப. 231.
7. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு (சங்க காலம்), பாரிப் புத்தகப் பண்ணை, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1971; ப. 119.
8. திருக்குறள், குறள். 771.
9. உ. வே. சாமிநாதையர் (பதிப்பு), பத்துப்பாட்டு மூலமும் உரையும், 'பட்டினப்பாலை' ஐந்தாம் பதிப்பு, சென்னை, 1956, பக் 86-93.
10. Swami Harshananda, All about Hindu Temples, Sri Ramakrishna Ashramam, Second Edition, Mysore 1981, p. 1.

மனிதன் முதலில் இயற்கைப் பொருள்களை, அதாவது மரம், கல் போன்றவற்றையும் மரம், கல் போன்றவற்றிலே இயற்கையாகவே உருவம் அமைந்திருந்த சுயம்புகளையும் வணங்கினான்.

கடவுளர் திருஉருவங்கள்

மனிதன் கடவுளுக்கு உருவம் செய்ய முனைந்தான். அக்கால மனிதனால் எளிமையாகச் செய்ய முடிந்தது மண்ணைப் பிசைவதுதான். களிமண்ணைப் பிசைந்து அவன் முதன்முதலில் செய்யத் தொடங்கிய உருவம்தான் பின்னாளில் சிவலிங்கமெனப் பெயர் பெற்றது. இதனை அரு உருவம் என்பர். மனிதன் பொம்மை செய்ய முனைந்தபோது ஏற்பட்ட முதல் நிலைதான் சிவலிங்கம். அதற்கு அடுத்ததாக மண்ணிலே செய்து உருவமாக அமைந்தது யானையின் முகம். இதுவே பின்னாளில் விநாயகருக்குத் திரு உருவமாக அமைந்தது. மூன்றாவது நிலையே தன்னை ஒத்த உருவங்களைக் கலைப் பாங்கோடு இறை உருக்களைப் படைத்தது ஆகும். இவ்வாறு உருவ வழிபாடு தோன்றியது.

தங்கள் பயிர்த்தொழில் நல்லபடியாக நடக்க வேண்டியும், நோய்த் (அம்மை) துன்பங்களிலிருந்து காக்க வேண்டியும், பெண் உருவில் தெய்வத்தைப் படைத்துக் கிராமங்களிலே வழிபடத் தொடங்கினர்.

பயிர்த்தொழில் செய்து வாழ்ந்து வந்த தமிழ்ச் சமுதாயத்தில் தன் புத்தியைப் பயன்படுத்திப் பண்டமாற்று செய்து பொருளைச் சேர்த்துச் சில பேர் வணிகர்களாக மாறினர். புத்தியையும் கத்தியையும் சேர்த்துப் பயன்படுத்தியவர்கள் அரசர்களாக ஆனார்கள். மற்றவர்கள் வேளாளர்களாக அப்படியே இருந்தார்கள். உழைப்பையே உயிராகக் கருதி வாழ்ந்த இனம் மூன்றாகப் பிரிந்தது. இந்தப் பிரிவு பொருளாதார அடிப்படையில் ஏற்பட்டது. இந்த முப்பிரிவினருமே கிராமத் தேவதைகளுக்குப் பூசை செய்யும் உரிமையைப் பெற்றிருந்தனர்.[11]

முதலில் வட இந்தியாவில் படையெடுத்துப் பரவிய ஆரியர் மெல்ல மெல்லத் தமிழகத்திற்கும் வந்து சேர்ந்தனர். ஆரியர்

---

11. The Village Gods of South India, p. 18.

வேத வழிபாட்டு முறையும் தமிழர் வழிபாட்டு முறையும் ஒன்றாகக் கலந்தன. சமுதாயப் பிரிவுகளும் நான்காயின. சடங்குகளைச் செய்யும் அந்தணர் முதலிடத்தைப் பெற்றனர். அரசர் இரண்டாம் இடத்தை அடைந்தனர். வணிகர் மூன்றாம் இடத்தைப் பிடித்தனர். வேளாளருக்கு நான்காவது இடம் கிடைத்தது.

கோயில் உருவாக்கம்

சங்கக் காலத்திற்கு முன் வெட்டவெளியில் இருந்த மரங்களை வணங்கினர். ஆவிகள், கடவுளர் உறையும் இடமாக மரங்கள் கருதப்பட்டன.[12] பின்னர் இந்த மரங்களைச் சுற்றி ஆலயங்கள் எழுந்தன. ஆரியர் வருகைக்குப் பின் மரங்களின் கீழே கடவுளர் உருவங்கள் வைத்து வழிபடப்பட்டன. சான்றாகத் திருமயிலையில் புன்னைமரத்தையும் திருக்குற்றாலத்தில் குறும் பலா மரத்தையும் கூறலாம். இந்த மரபு வழிபாடே திருக்கோயில்களில் பின்னர்த் தல விருட்சங்களாக மாறின.

அடுத்த நிலையாக நடுகல் வழிபாட்டைக் கூறலாம். தமிழ் இலக்கியங்களில் நடுகல் வழிபாடு வீர வழிபாட்டைக் குறித்தாலும் அதற்கும் முற்பட்ட காலத்தில் இறந்த மகளிரைப் புதைத்த இடத்தில் அடையாளச் சின்னங்கள் வைத்து வழிபடுவதே வழக்கில் இருந்தது.[13] இத்தெய்வங்களை கிராமத் தேவதைகள் எனப்பட்டன. முதலில் அடையாளக் கல் வைத்து வணங்கினர். பின்னர் ஓலைகளால் கூரைகளை வேய்ந்தனர். சான்றாக, மயிலை முண்டகக்கண்ணியம்மன் கோயிலைக் கூறலாம். ஆரியர் வருகைக்குப் பிறகு கிராமத் தேவதைகளுக்கும் கட்டிடம் அமைத்து உள்ளே உருவச்சிலைகள் வைத்து வழிபடத்

12. K. K. Pillai, The Sucindram Temple, Kalakshetra Publications, Adyar, Madras, First Edition, 1953, p. 112.

13. N. Venkata Ramanayya, An Essay on the Origin of the South Indian Temple, Methodist Publishing House, Madras, 1930, p. 33.

தொடங்கினர். சிலப்பதிகாரத்தில் வழக்குரைகாதையில் வாயிலோன் வாயிலாகக் கிராமத் தேவதைகள் குறிக்கப் பெறுகின்றன.[14]

மரம், கல்லையடுத்து மண்ணால் பொம்மைகள் செய்து வைத்து வணங்கும் வழக்கம் ஏறபட்டது மேற்கூரை இல்லாமல் கையில் கத்தி ஏந்தி அமர்ந்த நிலையில் வீரனுடைய உருவத்தையும் யானை குதிரை ஆகிய விலங்குகளின் உருவங்களையும் பச்சை மண்ணால் செய்து வண்ணம் பூசி வணங்கும் வழக்கம் கிராமங்களில் இருந்தது. அத்தகைய கடவுளர் உருவங்கள் மழை வெய்யிலால் அதிக காலம் பாதிக்கப்பட்டதால் மிகப் பழங்காலத்து உருவச் சிலைகள் நமக்குக் கிடைக்கவில்லை இந்த வழிபாட்டை பின்னர் அய்யனார் வழிபாடாக மாறியது. மிகப் பழைய அய்யனார் உருவச்சிலை செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள சுணாம்பேட்டில் உள்ளது. அச்சிலை கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவன ஆவணங்கள் குறிக்கின்றன.[15] அய்யனார் வழிபாட்டைத் தொடர்ந்து சுண்ணாம்பினாலான சுதை உருவங்களை வணங்கும் வழக்கம் ஏற்பட்டது. ஆரியர் தொடர்பால் உண்டான கோயில் வழிபாட்டில், சுண்ணாம்பையும் மணலையும் சேர்த்து அரைத்துக் கரும்புச்சாறு, வெல்லச்சாறு, நெல்லிக்கனிச்சாறு ஆகியவற்றைக் கலந்த கலவையினுள்ளே மரம் செங்கல் வைத்துப் பூசி மெழுகிச் செய்யப்பட்ட சுதைச் சிற்பங்கள் பயன்படுத்தப்பட்டன.[16] சான்றாக சென்னைத் திருவல்லிக்கேணியிலுள்ள பார்த்தசாரதி பெருமாள் திருவுருவத்தைக் கூறலாம்.

கோயில்கள்

திருக்கோயில்கள் கட்டப்படுவதற்கு முன் மன்னன் வாழிடமே, கோயில் எனப்பட்டது. 'மாலை வெண்குடை

14. சிலப்பதிகாரம், உ. வே. சாமிநாதையர் பதிப்பு, 1953.
15. The Hindu, August, 7, 1994.
16. இரா. நாகசாமி, மா. சந்திரமூர்த்தி, தமிழகக் கோயிற் கலைகள், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1976, பக். 78-80.

மன்னவன் கோயிலும்'[17] என்று சிலப்பதிகாரத்தில் காணப்படு கிறது. முதலில் அரசர் வாழிடத்திலேயே இறைவனுக்கு மாடங் கள் அமைக்கப்பட்டன. பின்னர்க் கால வளர்ச்சியினாலும் பல நாகரிகத் தாக்கங்களாலும் வழிபடு தெய்வங்களுக்குத் திருக் கோயில்கள் மன்னர்களாலேயே எடுக்கப்பட்டன. அரசர்களும் அரசக் குடும்பத்தினரும் வணங்குவதற்காகவே கோயில்கள் கட்டப்பட்டன. சான்றாக மாமல்லபுரத்தில் கடற்கரை ஓரமாக ராஜசிம்மன் கட்டியுள்ள தலசயனப்பெருமாள் கோயிலைக் கூறலாம்.

பெரும்பாலான கோயில்கள் வனங்களிலும் மலை உச்சிகளி லும் ஆற்றங்கரை ஓரங்களிலும் தோன்றி வளர்ந்தன. நாடு வளம் பெற்றபோது கோயில்கள் நகரங்களின் உள்ளே பெரும் வாயில்களோடு கட்டப்பட்டன.

சேரன் செங்குட்டுவன் காலத்திற்குப் பிறகு, சோழநாட்டில் ஆட்சி புரிந்த கோச்செங்கணான் என்னும் சோழ மன்னன் 70 கோயில்கள் கட்டினான் என்பதைத் திருமங்கையாழ்வார் தம் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார்.[18] இவ்வாறு தமிழகம் முழுவ தும் முப்பெரும் தெய்வங்களாகத் திகழும் சிவன், திருமால், செவ்வேள் ஆகியோருக்குத் தனித்தனிக் கோயில்கள் எழுந்தன.

சங்ககாலத்திற்குப் பிறகு கி. பி. 6ஆம் நூற்றாண்டு வரையில் களப்பிரர் ஆண்டனர். அவர்கள் காலத்திய தமிழகத் தின் வரலாற்றைப் பற்றி அதிகம் அறிய இயலவில்லை.

பல்லவரும் பாண்டியரும் ஆண்ட காலத்தில் அவர்கள் தந்த ஆதரவினால் கோயில் கட்டும் கலை வளர்ச்சியடைந்தது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் நடத்திய பக்தி இயக்கங் களினால் தமிழகத்தில் கோயில்கள் நிறைந்த அளவில் தோன்றின.

நமக்கு இன்று கிடைத்துள்ள தேவாரப் பதிகங்களின்படி சம்பந்தர் 219 தலங்களுக்கும் அப்பர் 215 தலங்களுக்கும்

17. சிலப்பதிகாரம், கழகவெளியீடு, சென்னை. 1969. இந்திர விழவூரெடுத்தகாதை, 169-178.

18. இரா. நாகசாமி, கல்லும் சொல்லும், சேகர் பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 1977, ப. 62.

சுந்தரர் 83 தலங்களுக்கும் சென்று பாடி இருக்கின்றனர் என்பது தெரிய வருகின்றது. இவர்கள் செய்த தலயாத்திரை தமிழ்நாட்டில் திருக்கோயில்களின் எண்ணிக்கையையும் அங்குச் சென்று வழிபடுவோரின் எண்ணிக்கையையும் அதிகரிக்கச் செய்தது. இன்றும் அத்தலங்கள் பாடல் பெற்ற தலங்கள் என்று புகழப்பெறுகின்றன. தமிழகத்தில் தெய்வ வழிபாடுகள் பலவற்றுள்ளும் சிவ வழிபாடு மிகுந்திருப்பதற்குத் தேவார முதலிகளின் பாடல்களும் ஒரு வகையில் காரணமாக அமைகின்றன.

கோயில் வகைகள்

திருநாவுக்கரசர் காலத்தில் மாடக்கோயில் என்ற அமைப்புடைய கோயில்கள் இருந்தன. இப்பெருங்கோயில்கள் அன்றிக் கரக்கோயில், ஞாழல் கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என வழங்கும் கோயில்களும் தமிழகமெங்கும் பரவியிருந்தன. இதனைத் திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம் உணர்த்துகிறது.[19]

தூங்கானை மாடம், பூங்கோயில் என்னும் கோயில் வகைகளும் இருந்தன. திருக்கோயில் என்னும் சொல்லும், தளி என்னும் சொல்லும் பொதுவாகக் கோயில்களை உணர்த்தின. சங்க இலக்கியங்களில் கோயில், நகரம், கோட்டம், இல் என்னும் சொற்கள் கோயிலை உணர்த்தின. பொது இடத்தில் மக்கள் வழிபடுவதற்காகக் கூரையில்லாமல் மரங்களின் கீழே தெய்வத் திருவுருவங்கள் இருந்த இடம் பொதியில், மன்றம் என்று அழைக்கப்பட்டன. கூரை வேயப்பெற்ற கோயில் அம்பலம் எனப்பட்டது. இதனைச் சிதம்பரம் கோயில் 'சிற்றம்பலம்' என்று குறிக்கப்படுவதிலிருந்து அறியலாம்.[20]

உயர்ந்த மேடைகளில் அமைக்கப்பெற்ற, பெருங்கோயில்களை மாடக்கோயில் என்றனர். யானையின் தும்பிக்கை போலப் படிக்கட்டுகள் அமைந்த கோயிலைக் கரக்கோயில் என்றும், உறங்குகின்ற யானையின் பின்புறத் தோற்றத்தைப் போன்றிருந்த கோயிலைத் தூங்கானை மாடம் என்றும்

19. திருநாவுக்கரசர், தேவாரம், 6-71-8.
20. சு. ராஜசேகரன், திருமயிலைத் திருத்தலம், ப. 234.

என்றழைத்தனர். பழைய கோயிலைப் புதுப்பிக்கும்போது எடுத்த கோயிலையும், புதிதாகக் கட்டப்பட்ட கோயிலையும், அளவில் சிறிய கோயிலையும் குறிக்கும் சொல்லாக இளங் கோயில் என்பது அமைந்தது. ஆலக்கோயில், ஞாழல் கோயில் என்பவை அந்தந்த மரங்களின் கீழ் அமைந்த கோயில்களைக் குறித்தன. கொகுடிக்கோயில் என்பது, ஒருவகை முல்லைக் கொடி இருந்த இடத்தில் கட்டப்பட்ட கோயிலைக் குறித்தது. மணிக்கோயில் என்பது இன்ன முறையில் கட்டப்பட்டது என்று தெரியவில்லை. ஆனால், ஆழ்வார் பாசுரங்களில் 'திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே' என்னும் தொடர் காணப்படுகின்றது. நம்பியாண்டார் நம்பியின் கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில் 'தில்லை தன்னுள்... செற்றரு மாமணிக் கோயில்' என்ற தொடர் வருகிறது. இவற்றால் திருநறையூரிலும் (நாச்சியார்கோயில்) சிதம்பரத்திலுமுள்ள கோயில்கள் மணிக்கோயில்களாக இருத்தல் வேண்டும் என்று ஜே. எம். சோமசுந்தரம் கூறுகிறார்.[21] ஆனால், டி. தயாளன் புத்தர்கோயில் விமானங்களைப் போன்று இருக்கும் கோயில்கள் மணிக்கோயில்கள் என்று கூறுகின்றார்.[22]

குடைவரைக் கோயில்கள்

தமிழ்நாட்டில் பல்லவர் ஆட்சியின்போது கோயில் கட்டும் முறையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. இதுவரை தமிழ்நாட்டில் வணங்கப்படுவதற்கு மட்டுமே உரியதாக இருந்த கருங்கல், பல்லவர் காலத்தில் கோயில் கட்டுவதற்குரிய ஒரு பொரு ளாகவும் மாற்றப்பட்டது. இம்மாற்றம் முதல் மகேந்திர வர்மன் காலத்தில் நிகழ்ந்தது. மண்டகப்பட்டு என்னும் ஊரிலுள்ள குடைவரைக் கோயிலில் உள்ள கல்வெட்டு, 'செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் இலை இல்லாமல் மும்மூர்த்திகட்கு விசித்திர சித்தன் (மகேந்திரவர்மன்)

---

21. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, சோழர் கோயிற் பணிகள், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், நான்காம் பதிப்பு, சென்னை, 1950, ப. 7.

22. D. Dayalan, Early Temple of Tamilnadu, Harman, Publishing House, First Edition, New Delhi, 1992, p. 18.

அமைத்த கோயில் இது' என்று கூறுகின்றது.[23] இவன் காலத்தில் பல குடைவரைக் கோயில்கள் தோன்றின. மலையைக் குடைந்து ஓர் அறை மட்டுமே அமைக்கப்பட்டது. அவ்வறை, மண்டப அமைப்பில் தூண்களோடு காணப்படுகிறது. இது கருப்பக்கிருகம் என்று அழைக்கப்பட்டது.

ஆனால், இவற்றில் கடவுளர் சிலைகள் காணப்படவில்லை. சில குடைவரைக் கோயில்களில் உட்பக்கச் சுவரில் ஓவியம் வரைந்திருந்ததற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன என்றும், சில கோயில்களின் உட்புறச் சுவரின் கீழ்ப் பகுதியில், சுதைச் சிற்பங்களைப் பொருத்துவதற்கான அமைப்பு உள்ளது என்றும், கருங்கல்லால் ஆன சிலைகளை வைக்காததற்குக் காரணம் தமிழ்நாட்டு மரபுக்கு மாறாகச் சிலை வைத்தால் எதிர்ப்பு ஏற்படும் என்று மகேந்திரவர்மன் கருதிக் கருங்கல்லால் ஆன ஆரியக் கடவுளர் விக்கிரகங்களை வைக்காமல் விட்டுவிட்டான் என்றும், ஆனால், விக்கிரகங்கள் வைப்பதற்கான முயற்சியை முதல் பரமேசுவர வர்மனுக்கு விட்டுவிட்டான் என்றும் டி. தயாளன் கூறுகிறார்.[24] இது பொருந்தாத கூற்றாகும். சேரன் செங்குட்டுவன் காலத்திலேயே கண்ணகிக்குக் கருங்கல்லால் ஆன சிலை செதுக்கப்பட்டுக் கோயில் கட்டி வழிபாடு செய்த செய்தியைச் சிலப்பதிகாரம் கூறுகிறது பல்லவர் குடைந்த குடைவரைக் கோயில்களிலும் ஒற்றைக் கல்லில் செய்யப்பட்ட ரதம் போன்ற அமைப்புகளிலும், முக்கியமாக மாமல்லபுரத்தில் உள்ளவற்றில், மக்கள் வழிபட்டார்கள் என்பதற்கோ, நிவந்தங்கள் அளிக்கப்பட்டன என்பதற்கோ சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை. பல்லவர் தங்கள் கலையுணர்வை வெளிப்படுத்துவதற்காக மேற்கொண்ட முயற்சிகளே மாமல்லபுரத்துக் குடைவரைக் கோயில்கள் எனலாம். அவை கோயில்களாக இல்லாமல் கலைக்கூடங்களாகவே விளங்கின எனலாம். பிற்காலத்து வந்த சோழர்களும், நாயக்க மன்னர்களும் கூட அக்கோயில்களில் சிலைகளை நிறுவி, வழிபாடுகள் செய்ய முயலவில்லை என்பதாலும், அவை கலைக்கூடங்களே என்பது பெறப்படும்.

23. மா. இராசமாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு, கழகம், மறுபதிப்பு, செப்டம்பர், 1977, சென்னை, ப. 299.

24. D. Dayalan, Early Temples of Tamilnadu, p. 19.

மகேந்திரவர்மனுடைய அடிச்சுவட்டில் முதல் நரசிம்ம வர்மன், இரண்டாம் மகேந்திர வர்மன், முதல் பரமேசுவர வர்மன், ராஜசிம்மன் போன்ற பல்லவ மன்னர்கள் குடை வரைக் கோயில்களை அமைத்தனர். அக்கோயில்களுக்குள்ளே கடவுளரின் புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டிய மன்னர்களும், பாண்டி நாட்டில் குடைவரைக் கோயில்களை அமைத்தனர். மலையாடிக்குறிச்சி என்னும் ஊரில் உள்ள குடைவரைக் கோயிலில் உள்ள கல்வெட்டு, அக்கோயிலைக் 'கல் திருக் கோயில்' என்றே குறிப்பிடுகின்றது.[25]

கற்றளிகள்

இரண்டாம் நரசிம்ம வர்மனான இராஜசிம்மன் காலத்தில், கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுகிற முறை தோன்றியது. இதற்குக் கற்றளி என்று பெயர். இந்த முறை ஏற்பட்ட பிறகு கோயில்கள் கட்டுவதில் ஒரு வேகம் ஏற்பட்டது. மலைகள் இல்லாத இடங்களிலும் கருங்கற் கோயில்கள் மிகுந்த அளவில் கட்டப்பட்டன. கோயில்களுக்குள் சிலைகள் வைக்கப்பட்டன. அவற்றுக்குச் சடங்குகளும் விழாக் களும் செய்யத் தொடங்கினர். பல்லவ மல்லன் என்று அழைக்கப்பட்ட இரண்டாம் நந்தி வர்மன் காலத்தில், கோயில் கட்டும் இயக்கம் உச்ச நிலையை அடைந்தது. தொண்டை நாட்டில் பெருமளவில் கோயில்கள் கட்டப்பட்டன. நந்தி வர்மன், மூன்றாம் நந்தி வர்மன் ஆகியோரும் கோயில்களைக் கட்டும் பணியைச் செய்தனர். மூன்றாம் நந்திவர்மனுக்குப் பிறகு பல்லவர் பலம் குன்றியதால் கோயில் கட்டும் பணியும் குறைந்தது.

பல்லவர் ஆட்சியின் தொடக்கக் காலத்தில் கருப்பக்கிருகம் மட்டும் உள்ள கோயில்களும் பிறகு கருப்பக் கிருகத்தோடு அர்த்த மண்டபமும் சேர்ந்த கோயில்களும், பின் மகா மண்டபம், பிரகாரம், திருச்சுற்று மதில் ஆகியவற்றுடனும் கோயில்கள் கட்டப்பட்டன.

---

25. Ibid., p. 21.

கூரம் சிவன் கோயில், திருக்கழுக்குன்றம் மலையிலுள்ள வேதகிரீஸ்வரர் கோயில், காஞ்சிக் கயிலாசநாதர் கோயில், ஏகாம்பரரேசுவரர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில், உத்திரமேரூர் சுந்தரவரதப் பெருமாள் கோயில், திருச்சி மலைக்கோயில், திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதிப் பெருமாள் கோயில் போன்றவை பல்லவர் கட்டிய கோயில்களில் சிறந்தவையாகும்.

பல்லவர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் கருங்கல்லோடு செங்கல், சுண்ணாம்பு, மரம் ஆகியவற்றையும் சேர்த்துக் கட்டுகிற மரபு உண்டாயிற்று.

பல்லவர் காலத்தை அடுத்துத் தமிழகத்தில் சிறந்து விளங்கிய விஜயாலய சோழன் காலத்தில் கோயில் கட்டும் கலை மேலும் வளர்ச்சியடைந்தது. கருப்பக்கிருகம், அதன் மேலே விமானம், அர்த்த மண்டபம், அஷ்டபரிவாராலயம், பிரகாரம், சிறுவாயில் கோபுரம் ஆகியவற்றோடு கோயில்கள் அமையத் தொடங்கின. பல பழைய செங்கற்கோயில்கள் கற்றளிகளாக மாற்றப்பட்டன. முதலாம் இராஜராஜன் காலத்தில் கோயில் கட்டிடக் கலை மிகவும் உச்சநிலையை அடைந்தது. கி. பி. 10ஆம் நூற்றாண்டில் திருக்கோயில்கள் அளவில் பெரியதாகவும், சிற்பங்கள் நிறைந்ததாகவும், விக்கிரகங்கள் நிறைந்ததாகவும் விளங்கின.

தமிழ்நாட்டில் கோயில் கட்டிடக் கலை வளர்ச்சி அடைந்ததால், அதற்குரிய விதிகளைக் கூறும் ஆகம நூல்களும், வாஸ்து சாஸ்திரங்களும் தோன்றின. ஆகமம் என்றால், தொன்றுதொட்டு வரும் அறிவு என்று பொருள். இறை வழிபாடு, மந்திரம் மூர்த்தி, ஆலய அமைப்பு ஆகியவை பற்றி விளக்குவதே ஆகமம்.

கோயில் கட்டுவதற்கு மனை தேர்ந்தெடுப்பது, நிலத்தைச் சமன் செய்வது, கட்டிடங்கள் எழுப்புவதற்குக் கீழே கோடுகள் வரைவது முதலிய அனைத்தும் இந்நூல்களில் குறிக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்புகளுக்குப் பயன்படுத்தும் அளவு கோல் முதலியனவும் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதையும்

இந்த நூல்கள் கூறுகின்றன.[26] இவற்றோடு சிற்பங்கள் எப்படிச் செய்யவேண்டும் என்பதை விளக்கும் சிற்ப சாஸ்திரங் களும் தோன்றின. இக்கலைகளில் வல்லவர்களாக இருந்த தமிழர்கள், அந்தச் சாத்திரங்களை ஏனோ வட மொழிச் சுலோகங்களில் எழுதி வைத்தனர். இப்போது தமிழ்நாட்டில் காணக் கிடைக்கும் சிற்ப நூல்களில் உள்ள சுலோகங்களை வட மொழியாளர் எழுதவில்லை. வடமொழி அறிந்த தமிழ்க் கலைஞர்களே எழுதியுள்ளனர் என்று வடமொழிப்பேராசிரியர் கூறுகிறார்.[27]

இந்தியாவில் கோயில் கட்டிடங்கள், நாகரம், வேசரம், திராவிடம் என்னும் முறைகளில் கட்டப்பெறுகின்றன. திராவிடம் என்கிற பாணியில்தான் தமிழகக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.[28]

பல்லவர் காலத்தில் தமிழ்நாட்டில் குடைவரைக் கோயில் களும் அதையடுத்துப் பிற்காலச் சோழராட்சியின் தொடக்கக் காலத்தில் கருப்பகிருகங்களின் மீது பெரிய விமானங்களும், பிற்காலச் சோழராட்சியின் இறுதியில் பெரிய வாயிற்கோபுரங் களும் விஜயநகர அரசர் காலத்தில் பெரும் மண்டபங்களும், அதையடுத்துப் பதினாறாம் நூற்றாண்டில் மிகப் பெரிய நீண்ட பிரகாரங்களும் (இருபக்கம் மேடை அமைய இடையில் நடைபாதை) கட்டுவது என்னும் முறையில் கோயில் கட்டிடக் கலை வளர்ச்சி பெற்றது.[29]

---

26. இரா. நாகசாமி, கல்லும் சொல்லும், ப. 156.
27. மாநிலக் கல்லூரி வடமொழிப் பேராசிரியர் தியாகராஜ னின் கருத்து.
28. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், தமிழ்க் கோயில் கள், தமிழர் பண்பாடு, எம். ஆர். சுப்பிரமணிய பிள்ளை பப்ளிஷர்ஸ், திருநெல்வேலி, முதல் பதிப்பு, 1961 பக். 11-12.
29. Heritage of the Tamil, Temple Arts, International Institute of Tamil Studies, Madras, First Edition, 1985, p. xiii.

பல்லவர் மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்கவாடி, நாமக்கல், திருவல்லிக்கேணி முதலிய ஊர்களில் விஷ்ணு கோயில்களும் சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவனூர், திருக்கழுக்குன்றம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருமயம் முதலிய இடங்களில் சிவன் கோயில்களும், மண்டகப் பட்டில் திருமூர்த்தி கோயிலும் எழுப்பினர். இவை ஒற்றைக் கற்களிலும், மலைப்பாறைகளைக் குடைந்தும் செய்யப் பட்டவை. இராஜ சிம்மன் காலத்தில் மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலும், காஞ்சி கயிலாசநாதர் கோயிலும், இரண்டாம் பரமேசுவர வர்மன் எடுத்த வைகுந்தப் பெருமாள் கோயிலும், கற்களை ஒன்றன் மேல் ஒன்று அடுக்கிச் சாந்து பூசிக் கட்டப் பெற்றன.

பிற்காலச் சோழர் காலம்

விஜயாலய சோழர் பிற்காலச் சோழ பேரரசை கி பி. ⁰ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோற்றுவித்தான். அக்காலம் தொடங்கிப் பதினொன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை, சோழர்கள் ஆட்சிக்காலததில் கட்டப்பெற்ற கோயில்களின் அமைப்பு ஏறக்குறைய ஒரே தன்மையை உடையனவாயிருக்கின்றன. அடி முதல் முடிவரை கற்களாலாகிய கோயில்களாகவே அவை கட்டப்பட்டிருந்தன கோயில்கள் பெரும்பாலும் கிழக்கு நோக்கியே அமைக்கப்பட்டன. கருவறை சதுரவடிவில் கட்டப்பட்டது. அதன்முன் அந்தராளமும், முகமண்டபம் என்ற அர்த்த மண்டபமும் இருந்தன. சில கோயில்கள் முன் மண்டபமாகிய மகா மண்டபத்தையும் உடையனவாக இருந்தன. இவ்வாறு முக்கியமான மூன்று அங்கங்களைச் சோழர் காலக் கோயில்கள் கொண்டிருந்தன. கிழக்கிலும், வடக்கிலும் தெற்கிலுமாக மூன்று திருவாயில்கள் அமைக்கப் பட்டன. கருப்பக்கிருகத்துக்கு எதிரே நந்திப் பெருமானுக்குப் பீடமாகிய மேடையிருந்தது. கருப்பக்கிருகத்துக்கு மேல் உயரமாக விமானம் என்ற அமைப்பு கட்டப்பட்டது. சிவபெருமான் வசிக்கும் கயிலாயத்தை நினைவில் கொண்டு, விமானங்களை மேரு என்றும், கைலாசம் என்றும், திருமலையென்றும் பெயர் சூட்டி அழைத்தனர். மூலத்தானத்து வெளிப்புறச் சுவர்களில் மாடங்கள் ஏற்பட்டு அங்கே பரிவாரத் தெய்வங்கள்

இடம் பெற்றன. கோயிலைச் சுற்றித் திருச்சுற்றாலை என்னும் வெளிப்பிரகாரம் அமைந்தது. பிரகாரமாக வலம்வரும் முறையில் தென் கிழக்கில் சூரியன், தென்மேற்கில் கணேசர், சப்த கன்னிகையர், மேற்கில் சுப்பிரமணியர், வடமேற்கில் ஜேஷ்டர், வடக்கே சண்டேசுவரர், வடகிழக்கில் சந்திரனும் இடம் பெற்றிருந்தனர். இத்திருச் சுற்றாலயங்கள் கோயிலைச் சுற்றி வளைந்த திருமதிலை ஒட்டியும், சில தனித்தும் பொருந்தி இருந்தன. திருமதிலின் திருவாயில்கள், அழகிய கோபுரத்துடன், பொதுவாகக் கிழக்கிலும், சில இடங்களில் மேற்கிலும் அமைந்திருந்தன. கோயிலைச் சுற்றிலும் உள்ளிட்ட இடங்களிலும் நந்தவனம் அமைக்கப்பட்டிருந்தது. பிற்காலச் சோழர் காலத்தில் பொதுவாகக் கோயில்களின் அமைப்பு, நீர் வளம் சூழ்ந்த பூம்பொழில், கோயிலுக்கு முன்னர்த் திருக்குள மாகிய நீர்த்துறை என ஓர் இலக்கணத்தைப் பெற்றிருந்தது என்று ஜே. எம். சோமசுந்தரம் கூறுகிறார்.[30]

பல்லவர் காலம்

பல்லவர் காலத்தில் அம்பிகைக்குத் தனிக்கோயில் ஏற்பட வில்லை. அம்பிகையைக் கொற்றவை, துர்க்கை, நிசும்பசூதனி, பிடாரி எனச் சிறு தெய்வமாக வணங்கி வந்தனர். ஆனால், இறைவன் சந்நிதியிலேயே தேவி போக சக்தி அம்மன் எனத் தனி இடம் பெற்றிருந்தாள். இராசராசன் இத்தேவியை உமா பரமேச்வரி என்றழைத்தான். 11ஆம் நூற்றாண்டில் காஞ்சியில் காமாட்சியம்மனுக்குத் திருக்காமக் கோட்டம் என்ற பெயரால் தனிக்கோயில் ஏற்பட்ட பின்னரே, திருக்கோயில்களில் அம்பிகைக்குத் தனிச் சந்நிதி சுவாமி கோயிலின் வடபாகத்தில் ஏற்படுத்தினர்.[31] பின்னர்ச் சைவ, வைணவக் கோயில்களின் நாயன்மாரும் ஆழ்வார்களும் சுற்றாலயங்களில் இடம் பெற்றனர். கிராம தேவதைகளான காளியும் துர்க்கையும், பிடாரியும் திருக்கோயில்களில் இடம் பெற்றனர். இவ்வாறு சோழர் காலத்துக் கோயில்களில் பெண் தெய்வங்களும், அடியார்களும் இடம் பெற்றனர்.

---

30. ஜே. சோமசுந்தரம் பிள்ளை, சோழர் கோயிற் பணிகள், பக். 11-12.
31. ஜே. சோமசுந்தரம் பிள்ளை, சோழர் கோயிற் பணிகள் பக். 15.

பிற்காலச் சோழர்கள் விஜயாலய சோழீச்சுரம், ஆதித்தேச்சுரம், இராசாதித்தேச்சுரம், அரிஞ்சயேச்சுரம், தஞ்சை ராஜராஜேச்வரம், கங்கை கொண்ட சோழீச்சுரம், சூரியனார் கோயில், நாராசுரம் கோயில் மற்றும் பல கோயில்களையும் கட்டினர்.

சோழர் காலத்தில் கோயில் கட்டும் முறையில் முக்கியமான மாறுதல்கள் இடம் பெற்றன.

1. கிராமத் தேவதைக்குக் கோயில் எடுக்கும் முறை தோன்றியது. விஜயாலயன் தஞ்சையில் நிசும்பசூதனி கோயில் கட்டினான்.

2. கோயில் பிரகாரத்தைச் சுற்றிப் பரிவாரத் தெய்வங்கள் அமைக்கப்பட்டன.

3. அம்மனுக்குத் தனிச் சந்நிதி ஏற்பட்டது. கி.பி. 11ஆம் நூற்றாண்டில் காஞ்சியில் காமாட்சி அம்மனுக்குத் தனிச் சந்நிதி அமைக்கப்பட்டது.

4. சூரியனுக்குக் கோயில் கட்டப்பட்டது. முதல் குலோத்துங்கன் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டது.

5. நாயன்மார், ஆழ்வார் ஆகிய அடியவர்கள் கோயிலில் இடம் பெற்றனர்.

6. நடுகல் வழிபாடு மீண்டும் வந்தது. சோழ அரசர்கள் இறந்தபோது, அவர்களைப் புதைத்த இடத்தில் கோயில்கள் எழுப்பினர். அக்கோயில்கள் பள்ளிப்படைக் கோயில்கள் எனப்பட்டன. ஆதித்த சோழன் இறந்த இடத்தில் ஆதித்தேச்சுரம், இராஜாதித்தன் இறந்த இடத்தில் இராஜாதித்தேச்சுரம், அரிஞ்சயன் இறந்த இடத்தில் அரிஞ்சயேச்சுரம் என்னும் கோயில்கள் கட்டப்பட்டன.

மதுரை நாயக்கர் காலம் (கி.பி. 1529 - 1736)

மதுரை நாயக்கர் காலத்தில் தமிழ் நாட்டில் மதுரை வீரன் வழிபாடு தோன்றி வளர்ந்து பரவியது. பாண்டி நாட்டில் தொல்லை கொடுத்துவந்த கள்ளர்களை ஒழித்து மக்களுடைய துன்பத்தை மதுரைவீரன் போக்கினான். அதனால் மக்கள்

அவனைத் தெய்வமாகவே வணங்கினார்கள். அவனுக்குப் பல இடங்களில் சிறிய கோயில்களைக் கட்டினர்.

நாயக்கர் காலத்தில்தான், சக்தி வழிபாடு அதிகரித்தது. மீனாட்சி அம்மனுக்குத் தனிச் சிறப்பளிக்கப்பட்டது.

விஜயநகர ஆட்சியிலும், நாயக்கர் ஆட்சியிலும் (1350—1600) தமிழகக் கோயில் கட்டிடக் கலையில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. பெரிய கோபுரங்களும், ஆயிரங்கால் மண்டபங்களும், மற்ற மண்டபங்களும் தோன்றின. கருங்கல் சிற்பங்கள், சுதைச் சிற்பங்கள் செய்யும் கலையும், நுட்பமான சிற்பத திறனும் வளர்ந்தன. சங்கீதத் தூண்கள் கோயில்களில் நிறுவப்பட்டன. பெரிய அளவில் கோயில் சிற்பங்கள் அமைந்தன.

கிருஷ்ணதேவராயர் சிதம்பரம் நடராஜர் கோயிலில் 140 அடி உயரததிற்கு வடக்குக் கோபுரத்தையும், காஞ்சி ஏகாம்பர நாதர் கோயிலில் 188 அடி உயரத்திற்குத் தெற்குக் கோபுரத்தையும், திருக்காளத்தியில் கோபுரங்களும் கட்டினார். வேலூர்க் கோயிலில் கலியாண மண்டபம் திராவிட முறையில் கட்டப்பட்டது. காஞ்சி வரதராஜர் கோயிலின் சில பாகங்கள் விஜயநகர வேந்தர்களால் கட்டப்பட்டன. சிதம்பரம் நடராஜர் கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில்களில் ஆயிரக்கால் மண்டபங்கள் கட்டப்பட்டன.

விசுவநாத நாயக்கரும் திருமலை நாயக்கரும் சிற்பக்கலை வளரப் பெரிதும் காரணமாக இருந்தார்கள். மதுரை மீனாட்சி அம்மன் கோயில், விசுவநாதர் காலததில் (1560) திட்டமிடப்பட்டு, தொடங்கப்பட்டுக் கோயில் திருப்பணி முழுமையடைய 120 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன.

முதல் கிருஷ்ணப்ப நாயக்கர் (1564-1572) காலத்தில் பெரிய தேர்கள் செய்யும் முறையும், அகன்ற மாடவீதிகள் அமைக்கும் முறையும், பெரிய தெப்பக் குளங்கள் அமைக்கும் முறை, கோயிலை ஒட்டி அக்கிரகாரங்கள் அமைக்கும் முறை என்னும் முறையும் தோன்றின. திருநெல்வேலியில் கிருஷ்ணபுரம் என்னும் புதிய நகரை அமைத்து, திருவேங்கட நாதர் கோயிலை இம்முறையில் கட்டினார்.[32]

32. அ. கி. பரந்தாமனார், மதுரை நாயக்கர் வரலாறு, பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1960, ப. 118.

இடிந்த கோயில்களைப் பழுது பார்த்தல், புதுப்பித்தல் ஆகிய பணிகளையும் நாயக்க மன்னர்கள் செய்தனர். நாயக்க மன்னர்கள் எல்லோரும் மீனாட்சியம்மன் கோயிலில் திருப்பணி செய்திருக்கிறார்கள்.

மதுரையில் திருமலை நாயக்கர் (1623-1659) வண்டியூரில் வெட்டுவித்த மாரியம்மன் தெப்பக்குளம் நடுவில் மைய மண்டபத்தை உடையதாகும். இக்குளத்தில் மீனாட்சி சுந்தரேசுவரருக்குத் தன்னுடைய பிறந்த நாளான தைப்பூச நாளில் திருமலை நாயக்கர் தெப்ப விழா நடத்தினார்.

விஜயரங்க சொக்கநாத நாயக்கர் (1706-1732) கோயில் கட்டிடப் பணியில் மிகுந்த அக்கறை காட்டினார். நாயக்கர் கால ஆட்சியின் தொடக்கத்தில் பெரிய மண்டபங்கள் கட்டும் முறை தோன்றியது அவர்களுடைய ஆட்சியின் இறுதியில் நீண்ட பிரகாரங்கள் (இருபக்கம் மேடை அமைய இடையில் வழி) அமைக்கும் புதிய முறை ஏற்பட்டது. நாயக்க மன்னர்கள் வைணவர்களாக இருந்தபோதிலும், மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலும், தில்லை நடராஜர் கோயிலிலும் பல திருப்பணிகளைச் செய்தனர்.

நாயக்கர் ஆட்சிக் காலத்தின் இறுதியில் தமிழ் நாட்டில் கோயில்களில் விக்கிரகங்களும், புடைப்புச் சிற்பங்களும், சித்திரங்களும், சாளக்கிராமங்களும், யந்திரங்களும் வைத்து வணங்கப்பட்டன.

கோயில் அமைப்பு

இறைவனுடைய உருவத்தை, ஒரு வாயில் உடைய மூலஸ்தானத்தில் பிரதிட்டை செய்தனர். இந்த இடம் சிறியதாயிருக்கும். அதையடுத்து இரண்டு வாயில்கள் உள்ள அர்த்த மண்டபம் இருக்கும். இங்கு அர்ச்சகர் நின்று தீபாராதனை புரிவார். இதற்கு வெளியே இருபுறமும் துவாரபாலகர் எனப்படும் வாயிற் காவலர் நிற்பர். அடுத்து மகாமண்டபம் எனப்படும் பெரிய பகுதி இருக்கும். இங்கிருந்துதான் பக்தர்கள் இறைவனைத் தரிசிப்பர். சிவலிங்கத்திற்கு எதிரில் நந்தி இருக்கும். மூலத்தான வாயிலின் வலப்பக்கத்தில் விநாயகரும், இடப்பக்கத்தில் சுப்பிரமணியரும் கோவில் கொண்டிருப்பர். கருப்பக்கிருகத்தைச் சுற்றிவரும் உட்பிரகாரத்தில் உள்ள கோஷ்டங்களில் தென்பக்கம் தட்சிணாமூர்த்தியும் மேல்பக்கம்

லிங்கோத்பவரும், வலப்பக்கம் துர்க்கையும் எதிரே சண்டேசுவரரும் இடம் பெறுவர். வெளிப்பிரகாரத்தில் கொடிமரம், பலிபீடம், பெரிய நந்தி ஆகியவை இருக்கும். மூலத்தானததின் மீது விமானம் கட்டப்பட்டிருக்கும். அதன் உச்சியில் பொற்கலசங்கள் பொருத்தப்பட்டிருக்கும். வெளியே வாயிலில் கதைச் சிற்பங்கள் நிறைந்த வானளாவிய கோபுரம் இருக்கும். அதை இணைத்தாற் போலத் திருச்சுற்றுமதில் இருக்கும். மதில்சுவர் மேலே நந்தி, சிவகணங்கள் இடம் பெற்றிருக்கும். உள்ளேயும் வெளியேயும் திருக்குளம் இருக்கும். தலவிருட்சம் கோயிலின் உள்ளே இருக்கும். நாயக்கர் காலத்தில் சிவாலயங்கள் இந்த முறையில் அமைந்திருந்தன.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலம்

மேலை நாடுகளிலிருந்து முதலில் வாணிகம் செய்ய வந்த போர்த்துக்கீசியர் சமயக் காழ்ப்புடையவர்களாக இருந்ததால், தமிழகத்தின் கடற்கரையோரமாக இருந்த பல கோயில்களை இடித்து விட்டனர்.[33] அடுத்து வந்த ஆங்கிலேயரும் கிறித்தவர்களாக இருந்ததால் கோயில்கள் புதிதாக அதிக அளவில் கட்டப்படவில்லை. இடிக்கப்பட்ட கோயில்களின் இடிபாடுகளைக் கொண்டு புதிய கோயில்கள் கட்டப்பட்டன. சான்றாக, மயிலைக் கபாலீசுவரர் கோயிலைக் கூறலாம். இங்குக் கோயில் கட்டப் பயன்படுத்தப்பட்ட கற்கள், பழைய கபாலீசுவரர் கோயிலிலிருந்தும், திருவான்மியூர் கோயிலிலிருந்தும் திரிசூலம் கோயிலிலிருந்தும் கொண்டு வரப்பட்டவையாகும். இதனை அக்கற்களில் இருக்கிற கல்வெட்டுகளே உணர்த்தும்.[34]

---

33. பம்மல் சம்பந்த முதலியார், திருமயிலைக் கோயிலைப் பற்றிய சரித்திர வரலாறு திருமயிலைத் தலபுராணம், சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, சென்னை. 1948. பக். 20-21.

34. இரா நாகசாமி (பதிப்பு). சென்னை மாநகர்க் கல்வெட்டுகள், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, முதற்பதிப்பு, 1970. தொடர் எண்கள் 1967/83, 1967/85, 1967/90, 1967/105,

மயிலாப்பூர்க் கபாலீசுவரர் கோயிலை நயினியப்பன் மகன் முத்தியப்பன் என்னும் ஒரு செல்வரே கட்டினார் என்பதைத் திருமயிலை உலா எடுத்துரைக்கின்றது [35]

ஆகவே, நாயக்க மன்னர்களுக்குப் பிறகு கோயில்கள் கட்டும் பணியைச் செல்வர்கள் மேற்கொண்டனர். பல செல்வர்களும் பொது மக்களும் கூடிப் பொருள் திரட்டிக் கோயில் கட்டியுள்ளனர் அந்த வகையில் கட்டப்பட்ட கோயில்கள் அதிகச் சிற்ப வேலைப்பாடுகள் இல்லாமல், கருங்கல் தூண்களோடும் தளவரிசைகளோடும் காணப்படுகின்றன. துறவியரும் கோயில் கட்டும் பணியை மேற்கொண்டனர். சிதம்பர சுவாமிகள் என்னும் துறவியார், திருப்போரூரில் முருகனுக்குச்சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த கோயிலைக் கட்டினார். தனிப்பட்ட சாதியைச் சேர்ந்த மக்களும் கோயில்களைக் கட்டினர். சான்றாகச் செங்குந்த இனத்தவர் சென்னை சைதாப்பேட்டையில் காரணீசுவரர் கோயில், சுப்பிரமணிய சுவாமி கோயில், மயிலாப்பூரில் வெள்ளீசுவரர் கோயில் ஆகிய கோயில்களைக் கட்டியுள்ளனர். சென்னைக் கந்தகோட்டத்தில் கந்தசுவாமி கோயில் என்னும் பெயரில் முருகனுக்குச் செட்டியார் இனத்தினர் கோயில் எடுத்துள்ளனர்.[36]

நாயக்கர் காலத்தில் மிக விசாலமான பரப்பில் பல ஏக்கர் அளவில் கோயில்கள் கட்டப்பட்டன. ஆங்கிலேயர் காலத்தில் படிப்படியாகக் கோயில்களின் பரப்பளவு குறையலாயிற்று. ஐந்துமனை பரப்பளவிலிருந்து ஒருமனை பரப்பளவு எல்லை வரை கோயில்கள் கட்டப்பட்டன. (ஒருமனை—2400 சதுர அடி).

இக்காலம்

இந்தியா விடுதலை அடைந்த பிறகு கோயில்களின் மீது மக்களுக்கு மீண்டும் அக்கறை ஏற்பட்டது. செல்வர்கள் பல கோயில்களில் திருப்பணி செய்து கும்பாபிடேகம் செய்யும்

---

35. மு. கோ. ராமன் (பதிப்பு), திருமயிலை உலா, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983, ப. 62.
36. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள், தொடர் எண். 1967/227.

பழக்கத்தைத் தொடங்கி வைத்தனர். அதனால் அழியும் நிலையில் இருந்த பல கோயில்கள் பழுது பார்க்கப்பட்டன. திருமுருக கிருபானந்த வாரியார் காலட்சேபங்கள் செய்து, செல்வரிடமிருந்தும் மக்களிடமிருந்தும் பெருப் பொருள் திரட்டிப் பல திருக்கோயில்களுக்குக் கோபுரம் கட்டுதல், குளத்திற்குப் படிக்கட்டு அமைத்தல், குப்பாபிடேகம் செய்தல் போன்ற அருட்பணிகளை மேற்கொண்டார்.

கேரள நாட்டுக் கோயில் கட்டிட அமைப்பு இக்காலக் கட்டத்தில், தமிழ் நாட்டில் இடம் பெற்றது. ராஜா அண்ணா மலைபுரம் ஐயப்பன் கோயில், மகாலிங்கபுரம் ஐயப்பன் கோயில் ஆகியவறறைக் கூறலாம்.

வட நாட்டுக் கோயில் கட்டிட அமைப்பில் மயிலாப்பூர், அண்ணாநகர், கிண்டி ஆகிய இடங்களில் உள்ள ஷீரடி சாயிபாபா கோயில்கள் கட்டப்பட்டன. இங்குள்ள உருவச் சிலைகள் பளிங்குக் கற்களால் ஆனவையாகும்.

இக்காலத்தில் கோயில்கள் சிறிய பரப்பளவில் கட்டப்படு கின்றன. மூல விக்கிரகங்கள் மட்டுமே கருங்கல்லினால் செய்யப்படுகின்றன. கட்டிடங்கள், சிமெண்ட், மணல், கருங்கல் ஜல்லி ஆகியவற்றால் கட்டப்படுகின்றன.

நகரங்கள் உருவாகும்போது, கட்டாயம் கோயிலுக்கு இடம் ஒதுக்க வேண்டும் என்பதற்காகத் தெருக்குத்து இடங் களில் வீடு கட்டக்கூடாது என்ற எண்ணத்தை மக்களிடையே பரவவிட்டனர். அதனால் தான் நாயக்கர் ஆட்சிக் காலத் திலும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் கோயில் கட்ட இடம் கிடைத்தது. கி.பி. 18, 19ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட கோயில்களில் பெரும்பாலானவை தெருக்குத்து இடங்களில் கட்டப்பட்டவையேயாகும். சென்னை மாநகரி லுள்ள பல கோயில்கள் இவ்வாறே அமைந்துள்ளன. தொழிற் சாலை வளாகத்திற்குள்ளும் (பரங்கிமலை, போரூர் சாலையி லுள்ள கோயில்கள்) வங்கி வளாகத்திற்குள்ளும் (ஆழ்வார் பேட்டைத் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவளவங்கி வளாகத் தில் ஆஞ்சநேயர்கோயில்) மருத்துவமனை வளாகத்திற்குள்ளும் (வி.எச்.எஸ். மருத்துவமனை, அடையாறு) கோயில்கள் இக் காலத்தில் கட்டப்படுகின்றன.

புதிதாகத் தோன்றுகின்ற குடியிருப்புப் பகுதிகளிலும் நகரங்களிலும் இப்போது கோயில்கள் கட்டப்படுகின்றன. இடப் பற்றாக்குறையால் நடைபாதைகளிலும் கோயில்கள் கட்டப்படுகின்றன மயிலாப்பூர், லஸ் முனையில் உள்ள நலசக்தி விநாயகர் கோயில் நடைபாதையில்தான் கட்டப்பட்டுள்ளது. நடைபாதைக் கோயில்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. சங்க காலத்தைப் போன்று கருப்பக்கிருகம் மட்டுமே உள்ள கோயில்களே இப்போது கட்டப்படுகின்றன. இதற்கு நிலத்தின் விலை உயர்வே காரணமாகும்.

இக்காலத்தில் விநாயகர், அம்மன், ஆஞ்சநேயர் ஆகிய தெய்வங்களுக்கே அதிகமாகக் கோயில்கள் கட்டப்படுகின்றன. நடைபாதையிலுள்ள கோயில்கள் அனைத்தும் ஒன்று விநாயகர் கோயிலாக இருக்கும். அல்லது அம்மன் கோயிலாக இருக்கும். முருகன் கோயில் நடைபாதைகளில் கட்டப்படுவதில்லை. மந்தைவெளி அங்காடி எதிரில் நடைபாதையில் மணி கண்டன் கோயில் ஒன்றுள்ளது.

இக்காலத்தில் தனியராலும் (செல்வர்கள்) தனிப்பட்ட சாதியினராலும் அறக்கட்டளைகள் சார்பிலும் பொது மக்களாலும் கோயில்கள் கட்டப்படுகின்றன.

சமயச் சார்பற்ற அரசு என்பதால் தமிழக அரசு கோயில் களைக் கட்டுவதில்லை. ஆனால் கோயில்களுக்கு நிவாரண நிதியும், மான்யங்களும் அளிக்கின்றது.

பொதுவாக இன்று தமிழகத்திலுள்ள கோயில்களை அரசரும், செல்வரும், வேளாளரும், மற்றச் சாதியினரும், துறவியரும், பெண்டிரும், அறக்கட்டளை நிறுவியவருமே கட்டியுள்ளனர்.

திருக்கோயில்களும் சமுதாய உறவுகளும்

முன்னுரை

மிகப் பழங்காலத்தில், தமிழ் நாட்டில் மக்கள் இயற்கைப் பொருள்களை இறைவனாகக் கருதி வழிபட்டபோது, தனி மனிதன் கடவுளை வழிபடுதல் என்னும் நிலை மட்டுமே இருந்தது. கூட்டு வழிபாடு இல்லை. கருப்பக்கிருகம் மட்டும் உள்ள அளவில் கோயில்கள் கட்டப்பட்ட காலத்திலும் சமுதாய உறவு முறைகள் கோயில்களோடு அதிகமாக இல்லை. கோயில், அர்த்த மண்டபம் மகா மண்டபம், பரிவார ஆலயங்கள், திருச்சுற்று மதில் என்று பரப்பளவில் விரிந்த நிலையில் கட்டப்பட்டபோது சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரும் கோயில்களோடு தொடர்புடையவர்களாக ஆனார்கள்.

கொடையும் நிருவாகமும்

அரசர்கள் தங்கள் அரண்மனையைப் போன்று கடவுளருக்குக் கோயில்கள் கட்டினர். கோயிலில் வழிபாடுகள் தங்கு தடையின்றி நடைபெற நிலங்களை அரசன் கோயில்களுக்கும், அந்தணர்களுக்கும் தானமளித்தான். வணிகர்கள் கோயிலுக்கு நன்கொடைகளை நல்கினர். கோயிலில் சடங்குகள் பெருகிய போது அவற்றைச் செய்ய சமுதாயத்தின் எல்லாப் பிரிவினருடைய உதவியும் தேவைப்பட்டது. அந்தணர்கள் வழிபாட்டுச் சடங்குகளைச் செய்தனர். மற்ற மக்கள் கோயில் தொடர்பான தொழில்களைச் செய்தனர். கோயிலைத் தூய்மை செய்தல், மலர் தொடுத்தல், உழவாரப் பணி செய்தல், போற்றிப் பாடல்களைப் பாடுதல், இசைக் கருவிகளை முழக்குதல், விளக்கேற்றுதல், மடைப்பள்ளியில் இறைவனுக்குப் படைப்பதற்கான உணவினைச் சமைத்தல் போன்ற பணிகளைச் செய்தனர். இறைவனுக்குச் செய்யும் பணியைத் திருத்தொண்டு என்றனர். கோயிலுக்கான நிலந்தங்கள் நிறைய ஏற்பட்டபோது அவற்றை நிருவாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

உலாவும் உறவும்

முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் தோன்றிய திரு மயிலை உலா என்னும் நூலில், மயிலாப்பூரில் கபாலீசுவரர் ஆனித் திருவிழாவின்போது உமையம்மையுடன் தேர் ஏறிப் பரிவாரங்கள் புடை சூழ, மாடவீதி உலா வரும்போது, கோயிலோடு தொடர்புடைய மக்கள் உடன் வந்தார்கள் என்று குறிக்கப்படுகின்றது, ஐந்நூற்றுக்கு மேற்பட்ட மகாவிரதியர் (காபாலிகர்), நான்மறை கற்ற அந்தணர்கள், சிவனடியார்கள், முத்தமிழ் வல்ல புலவர்கள், சிவனையே எப்போதும் நினைக்கும் யோகியர், மூவர் தேவாரம் ஓதும் ஓதுவா மூர்த்திகள், பல வேண்டுதல்களைச் செய்யும் அடியவர்கள், சுடர்த்தீபம் ஏற்றுபவர், அறிஞர்கள், கொம்பு ஊதும் வயிரவி யோரும், சிவபக்தி மிக்க வேளாளச் செல்வர்களும், கோயில் பணிகளை மேற்பார்வையிடும் கண்காணியாரும், அரம்பையர் போல் ஆடல் செய்யும் தேவர் அடியாரும், சிவபெருமான் சூரனை அழிப்பதற்கு முருகனுக்கு உதவி புரியப் படைத்த வீரவாகுத் தேவர் பரம்பரையினரான கைக்கோளராகிய செங்குந்தப் பெருமக்களும் சைவ சமயத்தைச் சார்ந்த பக்தர் களும் ஆகியோர் வெள்ளமென நெருங்கிப் புடை சூழவும் பேரிகை, தடப்பறை, தண்ணுமை, சங்கு, இடக்கை, வங்கியம், சல்லிகை, மத்தளி, தூரியம் போன்ற இசைக் கருவிகளை முழக்குகிறவர்கள் அக்கருவிகளை முழக்கவும் வீணை, கின்னரி, வேய்ங்குழல், நல்யாழ் இசைப்புலவர்கள் இசைக்கவும், பாடல் பாடுகிறவர்கள் பண்ணமைத்துப் பாடவும் கோயிலைக் கட்டிய நயினியப்பன் மகன் முத்தியப்பன் செங்கோல் எடுத்து வரக் கபாலீசர் பவனி வந்தார் என்று கூறப்படுகிறது.[1]

இப்பகுதியில் கபாலீசர் கோயிலோடு தொடர்புடைய சமுதாயம் முழுமையும் குறிக்கப்படுகின்றது.

ஊர்ச்சபை

கோயில்களுக்கு அரசர்களால் நிலங்களும், செல்வர்களால் பொன் வெள்ளி ஆபரணங்களும், பொதுமக்களால், கோயி லுக்கு விளக்கெரிக்கப் பொற்காசுகளும் ஆடுகளும் அளிக்கப் பட்டன. ஆகவே, கோயில்களுக்குச் சொத்தும், வருவாயும்

1. மு. கோ. ராமன் (பதிப்பு), திருமயிலை உலா, 1983, கண்ணிகள் 189—205.

அதிக அளவில் சேர்ந்தன. அந்தச் சொத்துகளைக் கவனிக்கவும், வருவாயைச் சரியான வழியில் செலவு செய்யவும், கோயில் காரியங்களைக் கண்காணிக்கவும் நிருவாகிகள் நியமிக்கப்பட்டனர்.

கோயில் நிருவாகத்தில் முறைகேடுகள் நிகழ்ந்தபோது மட்டுமே அரசர்கள் தலையிட்டனர் மற்ற நேரங்களில் ஊர்ச் சபை அந்தப் பணியை மேற்கொண்டது.

சமுதாய நிறுவனம்

கோயிலின் வரவு செலவுத் திட்டத்தாலும், கோயில் சில நேரங்களில் வங்கியாகச் செயல்பட்டதாலும் கோயில் பணியாளர்கள், வேலை வாய்ப்புகள் காரணமாகவும், கல்விப் பணியைக் கோயில்கள் செய்த காரணத்தினாலும், அழகுக் கலைகள் தொழிற் கலைகள் காரணமாகவும் திருக்கோயில்களோடு சமுதாய உறவுகள் நல்ல முறையில், நெருங்கிய நிலையில் இருந்தது. நீதிமன்றங்களாகவும், அறச்சாலைகளாகவும், தொண்டு மன்றங்களாகவும் கோயில்கள் விளங்கிச் சமுதாயத்தோடு தொடர்பு கொண்டன.

சங்கக் காலத்திலும், பல்லவர் காலத் தொடக்கத்திலும், வழிபாட்டிற்கு மட்டுமே உரியதாக இருந்த கோயில்கள், பின்னர்ச் சமுதாயத்திற்கு உதவும் நிறுவனங்களாக மாறின. போர்க் காலங்களில் பாதுகாப்பு அரணாகவும், உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கும் களஞ்சியங்களாகவும்கூடக் கோயில்கள் விளங்கிச் சமுதாய மக்களுக்கு உதவி புரிந்தன.

குடைவரைக் கோயில்களும், கல் தளிகளும் கட்டப்பட்ட பல்லவர் காலத்திலே கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் பொறிக்கப்பட்டதால்தான் கோயில்களுக்குச் சமுதாயத்தோடு இருந்த உறவுகளை அறிய இயலுகின்றது.

கோயிலும் மக்கள் வாழ்க்கையும்

மனிதன் குழந்தையாகப் பிறந்ததிலிருந்து, வாழ்வில் உயர்வு பெற்று, இறுதியில் இயற்கை எய்தும் வரை கோயிலோடு பின்னிப் பிணைந்த வாழ்க்கையை மேற்கொள்கிறான்.

குழந்தைகளுக்குச் சோறு ஊட்டல் என்னும் செயல் முதன் முதலாகக் கோயிலில்தான் செய்யப்படுகிறது. இன்றும் கேரளாவில் இச்சடங்கு கடைப்பிடிக்கப்படுகின்றது. குருவாயூர்

கிருஷ்ணன் கோயிலில் குழந்தைகளுக்குச் சோறு ஊட்டல் சிறப்பானது என்று கருதப்படுகின்றது. குழந்தைப் பருவத்திலே தலைமுடி மழித்துக் காது குத்தும் சடங்கும் கோயில்களிலே செய்யப்படுகின்றது. வளர்ந்து ஆளானதும், திருமணமும் கோயிலிலேதான் நடக்கின்றது. சமுதாயத்தில் செல்வாக்கான நிலையில் இருந்தால் பூரண கும்பம், பரிவட்டம் கட்டுதல் ஆகிய கோயில் மரியாதைகளும் கிடைக்கின்றன. வாழ்க்கைப் போராட்டத்தில் ஏற்படும் தொல்லைகளிலிருந்து தீர்வு காணவும், நோய் வந்தால் அதிலிருந்து நீங்க, நோன்பிருந்து காணிக்கை செலுத்துவதும் மக்கள் பழக்கமாக உள்ளது. இயற்கை எய்திய பின்பும் கோயிலிலிருந்து மரியாதையாகப் பரிவட்டம், கும்பநீர் கிடைக்கின்றது.

கோயில்களில் பூசை செய்யும் உரிமை

மிகப் பழங்கால முதற்கொண்டு தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழரே பூசை செய்து வந்தனர். கிராமக் கோயில்களில் பூசை செய்பவர் பூசாரி எனப்பட்டார்.[2] பெரிய கோயில்களில் பண்டார இனத்தைச் சேர்ந்த தமிழர்கள் பூசை செய்து வந்தனர். இவர்கள் வீர சைவப் பிரிவைச் சேர்ந்தவர்கள். ஆரியர் வருகைக்குப் பிறகு கோயில்களுக்குச் சொத்தும் வருவாயும் அதிகரித்தபோது பண்டாரங்கள் பூசை செய்யும் உரிமையை இழந்தனர். ராஜ ராஜன் காலத்திலேயே வட நாட்டு அந்தணர்கள் கோயில் சடங்குகளைச் செய்யத் தமிழ் நாட்டில் குடியேற்றப்பட்டனர்.[3]

பழனி முருகன் கோயிலில் திருமலை நாயக்கர் காலத்திற்கு முன் வரை 64 பண்டாரங்கள் எனப்படுபவரே பூசைகள், தீபாராதனைகள் செய்து வந்தனர். அவர்களுள் 40 பேர் உபய திருமஞ்சன பண்டாரம் எனப்பட்டனர். அவர்கள் அடிவாரத்திலிருந்து பழனிமலை முருகனுடைய திருமஞ்சனம், அபிஷேகம் போன்றவற்றிற்குத் தேவையான தண்ணீரைக் கொண்டு வருகின்ற பணியைச் செய்து வந்தனர். மீதி 24 பேர் அயன் திருமஞ்சன பண்டாரம் எனப்பட்டனர். இவர்கள் கோயிலில் ஆறு காலப் பூசைகள், கட்டளைதாரர்களுக்காகப் பூசை செய்தல்,

---

2. The village gods of south India, P. 18.
3. சோழர்கோயிற் பணிகள், ப. 63.

அர்ச்சனை, அபிடேகங்கள் செய்தல், காலப் பூசை செய்தல், பட்டைச் சாதம் செய்து பொது மக்களுக்கு அளிக்கின்ற பணி ஆகியவற்றைச செய்து வந்தனர். இவர்களுக்குப் பக்தர்கள் அளிக்கும் காணிக்கையே வருவாயாக இருந்தது. பட்டைச் சாதம், பஞ்சாமிர்தம் இவற்றை விற்பதால் கிடைக்கும் தொகையும் வருவாயாக அமைந்தது. திருமலை நாயக்கரின் தளபதியான தளவாய் இராமப்பையர் முதன் முதலாகப் பழனி ஆண்டவரை வணங்க வந்தபோது, பிராமணரல்லாத பண்டாரங்களின் கையில் இருந்து பிரசாதம் வாங்க மறுத்து விட்டார். அவர் தெலுங்குப் பிராமண இனத்தைச் சேர்ந் தவர். அவர் உடனடியாக அந்தணர்களை வரவழைத்து அவர்களை அருச்சகர்களாக நியமித்து, அவர்கள் அர்ச்சனை செய்து கொடுத்த பிரசாதத்தையே வாங்கினார். அது முதற் கொண்டு பழனி முருகன் கோயிலில் அந்தணர் பூசை செய்யும் உரிமையைப் பெற்றனர்.[4] இது போலவே எல்லாக் கோயில் களிலும் ஆரியக் கடவுள்களான சிவனும், விஷ்ணுவும் இடம் பெற்றபோது அந்தணர்கள், அருச்சகராகும் உரிமை பெற்றனர். பின்னர் அது அவர்களுக்கே உரியதாக மாறியது.

பிரமதேயங்கள்

கோயில்களில் பூசை தவறாமல் நிகழ வேண்டும் என்று பல்லவ, சோழ, பாண்டி மன்னர்கள் நினைத்தனர். அதற்காக நிலம் தானமளிக்கும்போது அதை அந்தணர்களுக்கு அளித் தனர். அதுவே பிரமதேயம் என்றும், சதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்பட்டது. இவை கல்வெட்டுக்களினால் புலனாகின்றன. பிரமதேயக் கிராமங்கள் அந்தணருக்கு உரிமை யாக்கப்பட்டாலும் அங்கு மற்ற சமுதாயப் பிரிவினரும் வாழ்ந்து வந்தனர். அந்தணர், வேளாளரைக் கொண்டு பயிர் செய்வித்தனர். அதில் வரும் வருவாயைக் கொண்டு கோயில் பணிகள் தொடர்பான சடங்குகள், திருவிழாக்கள், சமய வாழ்க்கை நடத்த செலவுகளைச் செய்தனர். ஒரு பகுதி யைத் தங்களுக்குரிய ஊதியமாகவும் எடுத்துக் கொண்டனர். குறைந்தது நான்கு காலப் பூசையாவது செய்யப்பட்டதால்

---

4. தகவல்—பழனி சித்தனாதன் அன்ட் சன், உரிமை யாளர் கு. சிவனேசன், கள ஆய்வுத் தாள், 30 5.94.

5. The Sucindram Temple, P. 2+2

அவர்கள் கோயிலின் முழுநேர ஊழியர்களானார்கள். பிராமணர்கள் அடங்கிய கிராமச் சபை, கோயிலின் நிருவாகத்தை மேற்கொண்டது.[5]

கோயிலுக்குரிய பணிகளைச் செய்ய குயவர், நாவிதர், பொற்கொல்லர், உழவர், தேவதாசிகள், நட்டுவனார், குழல் ஊதுபவர் பறையடிப்பவர்கள், இடையர், சங்கூதுபவராகிய உவச்சர், கணக்குத் தணிக்கையாளர் முதலிய கோயிற் பணியாளர்கள் பணி புரிந்து வந்தனர்.[6]

திருக்கோயில்களுக்கு இறையிலியாக விடப்பட்ட நிலங்கள் தேவதானம் எனப்பட்டன. மறையவர்களுக்கு விடப்பட்டவை பிரமதேயம், பட்ட விருத்தி எனப்பட்டன. கி. பி. 9 ஆம் நூற்றாண்டிலேயே சுசீந்தரம் கிராமம், பிரமதேயமாக பாண்டியனால் அந்தணர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மூல பருடசபை என்ற சபை, கோயில் விவகாரங்களைக் கவனித்து வந்தது.[7]

பிரமதேயத்தை நிருவாகம் செய்ய மகாசபை ஒன்றிருந்தது. வயது வந்த ஆடவர் அனைவரும் உறுப்பினராக இருந்தனர். மகாசபை கூடுவது பறையறைந்து தெரிவிக்கப்பட்டது. கோயில் மண்டபங்களில் மகாசபைக் கூட்டம் நடந்தது.[8] பொதுக் காரியங்களைக் கவனிப்பதற்குக் கணப் பெருமக்கள், கணவாரியப் பெருமக்கள் என்ற கூட்டங்கள் இருந்தன. ஸ்ரீகாரியம் அல்லது கோயில் வாரியம் என்பது கோயில்களில் காரியங்களைக் கண்காணித்து வந்தது.[9]

மகாசபை

மகாசபை கோயிற் பணிகளையே முக்கியமாகச் செய்தது. கோயில் நிருவாகம், மேற்பார்வை ஆகியவற்றை மேற்கொண்டது. கோயிலில் அர்ச்சகர்கள், மற்றப் பணியாளர்களை நியமித்தல், நிவநதங்களைக் கண்காணித்தல் ஆகிய பணிகளையும் செய்தது. சட்டம், நீதி ஆகியவையும் சபையின் பொறுப்பிலேயே இருந்தன. மகாசபையின் நிருவாகத்தில் பிரமதேயங்கள் இருந்தன. பெரிய நில உரிமையாளராக

6. Ibid., P. 248.
7. Ibid , P. 144.
8. Ibid., P. 253.
9. சோழர் கோயிற் பணிகள், பக்.162—163

மகாசபை திகழ்ந்தது. நிலங்களைப் பிரித்துக் கொடுத்தும் குத்தகைக்கு விட்டும் வேளாண்மைத் தொழிலைச் செய்தது. அதில் வரும் வருவாயே முக்கியமான வருவாயாக இருந்தது. வீடு, வீட்டுமனைகளை, கோயிலில் பணிபுரிபவர்களுக்குப் பிரித்துத் தருதல், நிலம் விற்றல், வாங்கல், அடமானம் ஆகிய வற்றையும் கவனித்தது. பிரமதேயப் பகுதியில் அடங்கிய நீர் நிலைகளையும் கவனித்தது. சாலைகள் தெருக்கள் அமைத்தல், பராமரித்தல் போன்ற பணிகளையும் மகாசபை செய்து வந்தது. இப்படிக் கோயில்களுக்கும் சமுதாயத்திற்கும் ஒரு நெருக்கமான தொடர்பும், மகாசபையின் ஆட்சியும் கி. பி. 9ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டு வரையில் தமிழ்நாட்டில் இருந்தது.[10]

நால்வகை நிறுவனம்

கோயில் நிருவாகத்தை 1. அரசர், அரசருடைய பிரதிநிதிகள். 2. சபை, ஊர் நகரம் எனவழங்கப்பட்ட கிராம நிருவாக சபைகள். 3. பதி, பாத மூலம், பட்டுடை போன்ற பூசை செய்யும் அந்தணர் குழுக்கள். 4. நேரடி நிருவாகத்தைக் கவனித்த தேவகன்மிகள், வாரியம், கணம் முதலிய குழுக்கள் என்னும் நான்கு வகையான நிறுவனங்கள் கவனித்துக் கொண்டன.

கிராமச் சபைகள் பெரும்பாலும் கோயில் காரியங்களை மேற்பார்வையே செய்தன. கோயில் நிருவாகத்தை, வாரியம் கணங்கள் மூலமாகவே கிராமச் சபைகள் செய்தன.

பெருங்குறி மகாசபையார் என்று திருமங்கலம் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இவ்வூர் திருச்சி, லால்குடி அருகில் உள்ளது. சாமவேதீசுவரர் கோயிலில் உள்ள 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று நில விற்பனை பற்றிக் கூறுகின்றது. இக்கல்வெட்டின் இறுதியில் பெருங்குறி மஹாஸபையார் ரக்ஷை, பந்மாகேச்வரரக்ஷை என்று குறிக்கப்பட்டுள்ளது.[11]

திருச்சி தான்தோன்றீசுவரம் கோயில் கல்வெட்டொன்றிலும் ''நந்திவர்ம மங்கலத்து பெருங்குறி ஸபை பணிக்க எழுதினேன்'' என்று காணப்படுகிறது.[12]

---

10. The Sucindram Tempie, P 262.
11. டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் (பதிப்பு), திருச்சி, வரலாறு, பிப்ரவரி 1994, ப.3.
12. ,, ,, ப.9.

திருச்சியை அடுத்த புள்ளமங்கை பசுபதி கோயிலில் கண்டு பிடிக்கப்பட்ட முதலாம் பராந்தகரின் (கி பி. 916) 39ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், பிரமதேயம் புள்ள மங்கலத்து மகாசபையார், இத்திருக்கோயிலில் இரண்டு நந்தா விளக்குகள் இரவும் பகலும் எண்ணெயால் எரிவதற்காக எட்டு மாநிலம் கொடையாகக் கொடுத்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது.[13] இவ்வாறு மகாசபைகள் செயல்பட்டன. அந்தணர்களுக்கு ஆலோசனை கூறுதல், கோயிலில் பூசைகள், சடங்குகளை மேற் பார்வையிடல் என்னும் பணிகளைப் பதி, பாதமூலம், பட்டுடை முதலிய குழுக்கள் கவனித்தன.

பதிபாத மூலம்

பதி, பாதமூலப் பட்டுடைப் பஞ்சாசாரியர் சிவப் பிராமணர் என்று கோயில் பணி நிருவாகப் பணி செய்ப வர்களைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.[14] பதி, பாதமூலம் என்னும் இரு குழுக்கள் கோயில் நிருவாகப் பணியைக் கி.பி. 9-10ஆம் நூற்றாண்டுகளில் செய்து வந்தது. இவற்றுள் அந்தணர்களே அங்கம் வகித்தனர். கோயிலுக்கு அளிக்கப் படும் தானங்களைக் கோயிலுக்காகப் பதி, பாத மூலத்தினர் பெற்று அவற்றால் வரும் வருவாயைக் கோயில்களுக்குச் செல விட்டனர். அறக்கட்டளைகள் தொடர்ந்து நடப்பதற்கும், பாதுகாப்பதற்கும் கோயில் சார்பாகப் பொறுப்பேறறவர்களே பதி, பாத மூலத்தார். பதிக்குழுவினர் தானங்கள் பெற அனுமதி அளித்தல், கண்காணித்தல் ஆகிய பணிகளையும், பாத மூலம் தானங்களைப் பெறுதல், அவற்றிலிருந்து வரும் வருவாயைக் கோயிலுக்குச் செய்தல் ஆகிய பணிகளையும் செய்தன. இச்செய்தி திருப்பழனக் கோயில் கல்வெட்டால் புலனாகின்றது.[15] பெரும்பாலும கோயிலில் விளக்கு எரிக்கவே தானங்கள் அளிக்கப்பட்டன. இந்தக் குழுக்களில் அங்கம் வகித்த அந்தணர்கள், கோயிலில் அர்ச்சகராகப் பணிபுரியும் அந்தணர்களில் உயர்ந்த பிரிவில் இருந்தவர்களாவர். கோயில் நிலங்களைக் குத்தகைக்குவிட்டு அதற்குப் பதிலாக கோயிலுக்கு

---

13. ,, ,, பக்.34—35.
14. பு.பா. உமாமகேசுவரி, நெல்லையப்பர் கோயில், கழகம், முதற்பதிப்பு, சென்னை, 1990, ப.216.
15. Early Temples of Tamil Nadu, P.34

நெல் அளக்குமாறு செய்தல், கோயில் பணியாளர்களுக்கு ஊதியத்திற்குப் பதிலாகக் கோயில் நிலங்களை அளித்து அதில் வரும் வருவாயைப் பெற்றுக் கொள்ளுமாறு செய்தல் ஆகிய செயல்களுக்கு ஆணையிடும் அதிகாரத்தை இக்குழுக்கள் பெற்றிருந்தன. திருச்சி பூலோகநாத சுவாமி கோயில் 14ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்றில் பதிபாத மூல பஞ்சாசாரியன் கௌசிகன் என்னும் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.[16]

பட்டுடை

கோயில் நிருவாகத்தைக் கவனித்து வந்த மற்றொரு குழு பட்டுடை எனப்பட்டது இவர்கள் அறக்கட்டளைகளை நிருவகிக்கும் பொறுப்பைச் செய்து வந்தனர். இவர்களும் அந்தணர்களே. இவர்கள் பட்டுடை உடுத்தியிருந்ததாலோ, அல்லது பட்டுடை அணியத் தகுதி பெற்ற காரணத்தாலோ பட்டுடை எனப்பட்டனர். இவர்கள் சிவாச்சாரியார் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் ஒரு சில நேரங்களில் பூசை செய்யும் பணிகளைச் செய்தாலும், இவர்களுடைய முக்கியமான பணி, கோயில் அர்ச்சகர்களுக்குப் பூசைமுறைகளில் வழிகாட்டுவது, சிவப்பிராமணர்களான அர்ச்சகர்கள் முறைப்படி பூசை செய்கிறார்களா என்பதைக் கண்காணித்தல் போன்றவையேயாகும். இவர்கள் கோயில் சடங்குகளில் வல்லுநர் என்றும, அருச்சகர்களுக்குப் பூசை விதிகளைப் போதிப்பவர்களாகவும் இருந்தனர் என்றும் தெரிய வருகிறது.[17]

தேவகன்மிகள்

கோயில் நிருவாகத்தோடு தொடர்புடைய மற்றொரு பிராமணக் குழு தேவகன்மிகள் என அழைக்கப்பட்டது. இதற்குப் பொருள் கடவுளின் பணியாளர் என்பதாகும். தமிழ்நாட்டுக் கோயில் கல்வெட்டுகளில் கி. பி. 9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே இப்பெயர் காணப்படுகின்றது. இவர்கள் கோயில் அறக்கட்டளைகளை நிருவகித்துப் பாதுகாக்கும் பணியைச் செய்து வந்தனர். அறக்கட்டளைச் செயல்களில் தவறு செய்தவர்களைத் தண்டித்து அபராதம் விதிக்கும் பொறுப்பு, சிவப்பிராமணர் கோயில் பணிகளைச் சரியாகச் செய்கிறார்களா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு, கோயிலின் சார்பாக நிலங்களை

16. வரலாறு, ஆகஸ்டு 1993, ப. 14.
17. Early Temples of Tamilnadu, P. 36

விற்றல், வாங்கல் ஆகிய செயல்களைச் செய்தல் ஆகிய பணி களைச் செய்து வந்தனர். சிவன் கோயில்களைப் பாதுகாக்கும் பொறுப்பு சண்டேசுவரர் என்னும் தெய்வத்திற்கு உண்டு. ஆகவே, அப்பணிகளைச் செய்த தேவகன்மிகள் ஆதிசண்டேச தேவகன்மிகள் எனப்பட்டனர். சிவன் கோயிலைக் கவனித் தவர்கள் மகாதேவர் கன்மிகள் எனவும் அழைக்கப்பட்டனர்: திருமால் கோயில்களில் பணியாற்றியவர்கள் ஆழ்வார் கன்மி கள் எனப்பட்டனர்.[18]

கோயிலில் பூசை செய்யும் சிவப்பிராமணர் ஸ்தானத்தார் எனக் கூறப்பட்டனர்.[19]

திருப்பைஞ்ஞீலிக் கல்வெட்டொன்றில் 'ஆதி சண்டேஸ்வர தேவகன்மி கோயிற் கணக்கன்' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனால் தேவகன்மிகள் கோயில் கணக்கு வழக்குகளையும் பார்த்தனர் என்பது புலனாகின்றது.[20]

ஒரு கோயில் தேவகன்மிகள், மற்றொரு கோயில் தேவகன்மி களோடு ஒப்பந்தப் பத்திரம் செய்து கொள்வது (இசைவுத் தீட்டு) திருவானைக்காக் கோயில் கல்வெட்டொன்றால் புலனாகின்றது. திருவானைக்கா உடைய நாயனார் கோயில் ஆதிசண்டேசுவர தேவகன்மிகள் நடராஜ ராஜீசுவரமுடையார் கோயில் தேவகன்மிகளிடமிருந்து, ஒன்பது மாவரை அரைக்காணி நிலத்தைப் பெற்று அதைத் திருவானைக்கோயில் நாயனாருடைய காணியுடன் இணைத்துக்கொண்டு, அதற்குத் திருப்பாக நடராஜ ராஜீசுவரத்து இறைவனுக்குப் படையல் களும், பரிவட்டம், விளக்கெரிக்க எண்ணெய் ஆகியன வழங்க திருவானைக்கா கோயிலார் ஒப்புதல் அளித்தனர். இக்கல் வெட்டு சுந்தரபாண்டிய தேவர் ஐந்தாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டதாகும்.[21]

வாரியம்

பிரமதேயங்களை நிருவகித்து வந்த மகாசபைக்கு உட் பட்ட அமைப்புகளே வாரியங்கள் என்பவையாகும். அவை

18. Ibid, P 38.
19. நெல்லையப்பர் கோயில், ப.216.
20 வரலாறு, ஆகஸ்டு 1993, ப.22.
21. வரலாறு, பிப்ருவரி 1994, ப 17

மகாசபையினரின் கட்டளைகளை ஏற்றுச் செயல்படுத்தும். வாரியங்களில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் வாரியர் அல்லது வாரியப்பெருமக்கள் என அழைக்கப்பட்டனர். ஸ்ரீகார்யம் அல்லது கோயில் வாரியம் என்பது கோயில்களில் காரியங்களைக் கண்காணித்து வந்தது.[22] கோயிலுக்கு அளிக்கப்பெறும் தானங்களை இவ்வாரியம் நிருவகித்து வந்தது. மகாசபை மற்றும் மூலப்பருடையின் கீழ் உள்ள அமைப்புகளாக இவ்வாரியங்கள் விளங்கின.

கணம்

கணம் என்பதற்குக் கூட்டம் என்று பொருள். பல்லவர் காலத்தில் நிருவாகத்தைக் கவனித்து வந்த சில குழுக்களைக் கணம் என்று அழைத்தனர். பல்லவர் காலத்தின் இறுதியில் திருவொற்றியூர்க் கோயிலில் அம்ருத கணத்தார் என்னும் குழுவினர் இருந்தனர் என்பது அபராஜித வர்மன் கல்வெட்டால் புலனாகின்றது. ஆதம்பாக்கம் சபையினர் தங்கத்தைத் திருவொற்றியூர் அம்ருத கணத்திற்கு முதலீடாகத் தந்து அதற்கு ஆண்டுக்கொரு முறை வட்டி பெறறு அதைக் கொண்டு கோயில் காரியங்களைக் கவனித்தது தெரியவருகிறது.[23]

கணப்பெருமக்கள்

நிருபதுங்கவர்மன், பரமேசுவர மங்கலம் கோயிலிலிருந்த கணப்பெருமக்களிடம் தங்கத்தைத் தானமாக அளித்தான் என்றும், அந்த அறக்கட்டளையைப் பாதுகாக்கும் பொறுப்பை மகாசபை ஏற்றுக்கொண்டது என்னும் செய்தியும் ஒரு கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பிரம தேசத்தில் கிடைத்த கல்வெட்டொன்றினால் நிலத்தானம், அக்கோயில் கணப்பெருமக்களிடம் அளிக்கப்பட்டது என்று தெரியவருகிறது. 1012ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றினால் (பிரமதேசத்தில் கிடைத்தது) அங்குள்ள கோயிலின் ஸ்ரீகாரியத்தைக் கணப்பெருமக்கள் செய்து வந்தனர் என்று தெரிகிறது.[24] கணப்பெருமக்கள் என்றால்,

---

22. சோழற் கோயிற் பணிகள், ப.163.
23. Early Temples of Tamilnadu, P.41.
24. Ibid., P.41.

கணத்தில் அங்கம் வகிக்கும் பெரிய மனிதர்கள் என்பது பொருளாகும். கணப்பெருமக்களே கோயில்களுக்குத் தானங்களும் அளித்திருக்கிறார்கள்.

தஞ்சைக்குப் பக்கத்தில் புள்ளமங்கை என்னும் ஊரிலுள்ள பசுபதி கோயிலில் கண்டெடுக்கப்பட்ட முதல் பராந்தகர் (கி. பி. 923—16ஆம் ஆட்சியாண்டு) கல்வெட்டொன்றில் திருவிளங்கோயில் கணப்பெருமக்கள் ஆடவல்லான் படிமத்தை நிறுவி, அதற்கான திருவமுதுப் படையலுக்கு நிலம், புள்ளமங்கலத்துச் சபையாரிடம் விலைக்கு வாங்கிக் கொடையாகத் தரப்பட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது.[25]

ஆகவே கணப்பெருமக்கள் என்பது சபையின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஒரு சிறுகுழு என்பதும், அது சமய சம்பந்தமான காரியங்களைக் கவனித்துக் கொண்டது என்பதும் தெரியவருகிறது.

மூலபருடை

கல்வெட்டுகளில் கோயில் நிருவாகத்தைச் சோழர் காலத்தில் கவனித்து வந்த மூலபருடை என்னும் அமைப்பு பருடை, மூல பரிஷை, (பரிஷத்—சமஸ்கிருதம்) மூலபருடை சபா, மூல பருடைப் பெருமக்கள் என்றும் அழைக்கப்பட்டது. இவை தேவதானமாகவும், பிரமதேயமாகவும் அளிக்கப்பட்ட கிராமங்களில் இருந்தன. இவை முக்கியமாகத் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இருந்தன. சில நேரங்களில் இவை கிராம சபைகளுக்கு நிகராகச் செயல்பட்டன. இச்சபை வயது முதிர்ந்த படித்த, பக்தியுள்ள அந்தணர்களை உறுப்பினர்களாகக் கொண்டதாகும். மகாசபை இருந்த பிரமதேயங்களிலும் மூல பருடையும் செயல்பட்டது. சுசீந்திரம் கோயிலில் அன்றாட நடைமுறைகளைப் மூலபருடையே கவனித்துக் கொண்டது.[26]

திருப்பைஞ்ஞீலியில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்றில் திருவெள்ளறை மூலபருடையார், திருப்பைஞ்ஞீலி கோயிலார்க்கு நிலக்கொடை அளித்த செய்தி காணப்படுகிறது இக்கல்வெட்டில் மூலபருடையோம், மூலபருஷையோம் என்று குறிக்கப்பட்டுள்ளது.[27]

---

25 வரலாறு, பிப்ருவரி 1994, ப.35.

26. The Sucindram Temple, P.147.

27. வரலாறு, பிப்ருவரி 1994, பக்.24,25.

திருவானைக்காக் கோயிலில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்றில் பாத, மூலபருடை, பஞ்சாசாரியார், தேவகன்மிகளுக்கு என்று குறிக்கப்பட்டுள்ளது.[28] இவ்வாறு மூலபருடை என்னும் அமைப்பும் கோயில் நிருவாகத்தைக் கவனித்து வந்தது கல்வெட்டுக்களால் புலனாகின்றது.

ஊர்

பிராமணர்களுக்குத் தானமாக அளிக்கப்படாத இடங்கள் ஊர் எனப்பட்டன. இங்கு ஊர்ச்சபை இருந்தது. அது கோயிலுக்குத் தானங்களைப் பெற்றும், மேற்பார்வையிட்டும் வந்தது.

நாடு

கிராமங்கள் சேர்ந்தது நாடு எனப்பட்டது. இங்கிருந்த சபையும் கோயில் நிருவாகத்தைக் கவனித்தது.

நகரம்

வணிகர் வாழ்ந்த இடம் நகரம் எனப்பட்டது. அவர்கள் கோயில்களுக்குத் தானங்கள் அளித்துக் காத்து வந்தனர். அவர்கள் பங்கு கொண்ட சபை நகரம் என்றழைக்கப்பட்டது. திருவிடைமருதூர், நார்த்தாமலை ஆகிய இடங்களில் இருந்த நகரங்கள் என்னும் அமைப்பு அங்குள்ள கோயில் நிருவாகத்தைக் கவனித்துக் கொண்டது.[29]

பத்மாகேசுவரர்

மகேசுவரர் என்றால் சிவனடியார் என்று பொருள்படும். பாசுபத லகுளீசப் பிரிவினர் செல்வாக்கோடு இருந்த காலத்தில் கோயில் நிருவாகத்தில் மகேசுவரர் இடம்பெற்றனர் இவர்கள் பக்தர்களால் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நன்கொடையைத் தங்கள் பாதுகாப்பில் வைத்திருந்தனர். அதனால் சிவன் கோயில் தானக் கல்வெட்டுகளில் இறுதியில் பொதுவாக இது 'மகேசுவரர் ரட்சை' என்று குறிக்கும் வழக்கம் ஏற்பட்டது. சில நேரங்களில் இவர்கள் சபை, நகரம், மூலபருடை, பதிபாத மூலம், சிவயோகியர், சிலப்பிராமணர் ஆகியோரோடு சேர்ந்து கோயில் தருமச் சொத்துகளைக் காத்தனர். அறக்கட்டளைக்குச் சரியாகச் செலுத்தாதவர்களிடம் அபராதம் விதித்து

ப.19.

28. மேற்படி,
29. Early Temples of Tamilnadu, P.48.

வசூலிக்கும் உரிமையையும் பெற்றிருந்தனர். இவர்கள் பல் வேறு சமூகப் பிரிவிலிருந்தவர்களாவர். வெள்ளாளர் சமூகத்தைச் சேர்ந்தவர் அதிக அளவில் மகேசுவரராக இருந்தனர். திருக்கோடிக்காவல் கோயிலுக்கு அளிக்கப்பெற்ற தானங்கள், மகேசுவரரின் மேற்பார்வையில் இருந்தன.[30]

திருப்பைஞ்ஞீலியில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட மூன்றாம் இராசராசன் (கி.பி. 1216 1256) காலக் கல்வெட்டொன்றில் கோயில் ஆட்சியருக்கு அரசன் அனுப்பிய ஆணை காணப்படுகிறது. அதில் 'ஸ்ரீமாகேச்வர கண்காணி செய்வார்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[31]

சிவபெருமானுடைய உச்சி சந்திப் படையலின்போது மாகேசுவரருக்குச் சோறு உணவிடும் வழக்கமும் அதற்குத் தானங்கள் அளிக்கும் வழக்கமும் இருந்தது அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட உய்யக்கொண்டான் (திருச்சி) திருமலைத் திருக்கோயில் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.[32] மேற்படி இடத்தில் கண்டெடுக்கப்பட்ட நான்கு கல்வெட்டுகளிலும் இறுதியில் பன்மாகேசுவரர் ரட்சை என்று குறிக்கப் பட்டுள்ளது.[33]

மாகேசுவரர் என்னும் சிவனடியார்களும் கோயில் சொத்துக்களைப் பாதுகாக்கும் பணியை மேற்கொண்டிருந்தனர் என்பது தெரியவருகிறது.

ஸ்ரீவைஷ்ணவர்

வைணவக் கோயில்களில் அறக்கட்டளைகளைப் பாதுகாத்தவர்கள் ஸ்ரீவைஷ்ணவர் எனப்பட்டனர். இவர்களும் கோயில் அறக்கட்டளைக்குத் தரவேண்டியதைத் தராதவர்களிடத்தில் அபராதம் விதிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தனர்.

வைகானசர்

வைகானச ஆகமத்தைப் பின்பற்றும் வைஷ்ணவ பட்டர்களும் கோயில் நிருவாகத்தில் இடம் பெற்றிருந்தனர். கம்பவர்மன் காலத்தில் நிலத்தைத் தானமாகப் பெற்றுக் கொண்டு

30. Ibid., P 51
31. வரலாறு, ஆண்டு 1993, ப. 25.
32. ,, பக். 42, 43
33 ,, பக். 46-49

ஒரு வைகானசன் கடவுளுக்குத் தேவையான கைங்கரியங்களைச் செய்தான் என்று ஒரு கல்வெட்டு கூறுகின்றது.[34]

ஸ்ரீகாரியம்

கோயில் நிருவாகத்தைக் கவனிக்கப் பல்வேறு அமைப்புகள் இருந்தபோதிலும், அங்கிருந்த அளவற்ற செல்வமும், வருவாயும், அங்குப் பணிபுரிவோர் சிலரைக் கையாடல் செய்யத் தூண்டியது. கோயில் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்காகப் பிற்காலச் சோழர் காலத்தில் அரசியல் அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். அதிகாரி, சேனாபதி, தண்டநாயகம் ஆகியோர் ஸ்ரீகாரியம் அதிகாரிகளாகப் பணியாற்றினர். இவர்கள் கோயிலுக்கு அருகிலேயே தங்கள் இருப்பிடங்களை வைத்துக் கொண்டிருந்தனர். இவர்களைக் கல்வெட்டுகள் ஸ்ரீகாரியம் செய்கின்ற, ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற, ஸ்ரீகாரியம் திருத்து கின்ற, ஸ்ரீகாரியம் என்றும் குறிப்பிடுகின்றன. உத்தமசோழன், முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன் காலங்களில் இவ்வமைப்பு மிகவும் உற்சாகத்துடன் செயல்பட்டது.

சில கல்வெட்டுக்கள், கணப்பெருமக்கள், தேவகன்மிகள் ஆகியோரையும் ஸ்ரீகாரியம் செய்வோர் என்று குறிப்பிடுகின்றது.[35]

கூகூர்க் கல்வெட்டுக்கள் ஒன்றில் அவ்வூர்க் கோயில் நிவந்தங்கள் நடைபெறாமல் போகவே, முதலாம் இராஜராஜ சோழனது அரசியல் அதிகாரி ஒருவரால் அது கண்டுபிடிக்கப் பட்டுத் திருடியவனுக்கு அபராதம் விதித்து, அப்பொருளைக் கொண்டு ஒரு தங்கத்தட்டுச் செய்து கோயிலுக்குக் கொடுத்த செய்தி கல்வெட்டில் உள்ளது. முதலாம் ராஜராஜன் ஊர்களில் உலாவரும்போது, திருவெறும்பியூர்க் கோயில் கணக்குகளைச் சிறுகுடையூர்க் காளி ஆதித்தன் என்பான் தணிக்கை செய்தான் என்றும் அதனால் கோயில்களின் வரவுசெலவுத் திட்டங்கள் அரசனின் காப்புக்குள் அடங்கியிருந்ததும் தெரிய வருகிறது. முதல் குலோத்துங்கன் காலத்து அரசியல் அதிகாரிகள் திருப்பனந்தாளில் கோயில் திருக்கைக்கோட்டிப் பண்டாரத்தைத் தணிக்கை செய்யும் காலத்து அர்ச்சகர்கள் மூன்று தடவைகளில்

34. Early Temples of Tamilnadn, p. 52.
35. Idid., p. 53.

நகைகளையும் பரிகலன்களையும் அபகரித்துள்ளமை கண்டு அரசன் முன்கொணர்ந்து 540 காசு அபராதம் விதிக்கவே, அவர்களில் ஒருவன் தன் பகுதியான தொகையைக் கொடுக்க இயலாமற் போகவே, கோயில் முறையான தனது பாகத்தில் 4½ நாள் விட்டுக் கொடுத்தான் என்று சோழர் கால கல்வெட்டொன்று கூறுகின்றது.[36]

தஞ்சையின் ஒரு பகுதியாய் விளங்கும் கரந்தையில் உள்ள வசிஷ்டேசுவரர் கோயிலில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட உத்தமசோழன் (கி பி. 980) காலக் கல்வெட்டில் ஸ்ரீகாரியம் செய்கின்ற அதிகாரி, கோயில் பொறுப்பிலிருந்து தவறியவர்களுக்குத் தண்டம் விதித்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

சுந்தரசோழனின் பதினேழாம் ஆட்சியாண்டில் சிவிகையார் சேரியைச் சேர்ந்த பெண்டாட்டி பொய்யிலி என்பார் தன் மகன் அரையன் வீரசோழன் நினைவாக இக்கோயிலில் நந்தா விளக்கொன்று எரிக்கக் கொடையளித்தார். இவ்விளக்கெரிக்கத் தேவைப்படும் நெய்யில் பாதியைத் தரும் பொறுப்பை இடையன் முள்ளூரன சிவன்வழி இத்தளிதிருக்கோயிலுடையார்கள் நால்வர் ஏற்றனர். என்ன காரணத்தாலோ அடுத்து ஆட்சிக்கு வந்த உத்தம சோழனின் பதினொன்றாம் ஆட்சியாண்டு (கி. பி 980) வரை அக்கொடை நிறைவேற்றப்படவில்லை. கோயில் ஸ்ரீகார்யம் செய்யும் மிலட்டூர் உடையாரான மனுகுல மார்த்தாண்ட மூவேந்த வேளார் இதுகுறித்து விசாரித்துத் தவறியவர்க்குத் தண்டம் விதித்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது.[37]

திருச்சி நகரிலுள்ள தான்தோன்றீசுவரம் கோயில் இருந்த இடம் முதல் இராசராசன் காலத்தில் இராசாசிரய சதுர்வேதி மங்கலம் என்றழைக்கப்பட்டது. இக்கோயிலில் தைத்திங்கள் சதயத் திருநாள் விழா ஒன்பது நாள் நடந்தது. விழாத் திருநாள்களில் திருமேனியை எழுநதருளித்துப் பெருந்திருவமுது படைக்கப்பட்டது. இத்திருநாளுக்கு வேண்டுவன செய்யத் தண்டல் பணிமகன் திரைமூர் உடையான் தீரன் காளி கண் காணியும், ஸ்ரீகாரிய வாரியம் செய்கின்ற இவ்வூர் இருபத்து

37. சோழர் கோயிற் பணிகள், ப. 154
38. வரலாறு, ஆகஸ்டு 1993, ப. 32.

நாலாஞ்சேரிக் கனிசியனும் பொறுப்பேற்றனர் என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.[38]

மேலும் கோயில் நிருவாகத்தோடு தொடர்புடையவர்களாகத் தர்மிகள், உபாசகர், ஸ்தானத்தார், குலங்கிழார் போன்ற பலர் இருந்தனர். தனியாள்வான் என்னும் கோயில் அதிகாரி பற்றியும் சில கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

கோயில் அருச்சகர்கள் சிவப்பிராமணர்கள் என்றும், அகநாழிகையார் என்றும், உள்நாழிகைப் பெருமக்கள் என்றும், உபாசகர் என்றும், தர்மிகள் என்றும், சிவயோகிகள் என்றும் குறிக்கப்பட்டுள்ளனர்.

தனியாக, அரசியல் அதிகாரிகள் கோயில் கட்டித் தனியார் பொறுப்பில் மேற்பார்வையும் செய்யவிட்டுள்ளனர். ஆளுங்கணம் என்னும் அமைப்பும் கோயில் நிருவாகங்களைக் கவனித்து வந்தது.

கோயில் பாதுகாப்பிற்காக மெய்க்காப்பாளர் நியமிக்கப்பட்டார்கள் என்பதும், அவர்களுக்கு ஜீவிதமாக நிலம் அளிக்கப்பட்ட செய்தியும் திருவெறும்பூர்க் கோயில் கல்வெட்டில் காணப்படுகின்றது.[39]

இவ்வாறு சபைகளாலும், குழுக்களாலும், அதிகாரிகளாலும் பல்லவர் காலத்திலிருந்து சோழர் காலம் வரையிலும் திருக்கோயில் நிருவாகம் செவ்வனே நடைபெற்று வந்தது.

புதிய கல்வெட்டுகளில் கோயில் நிருவாகம் பற்றிய செய்திகள்

திருச்சிராப்பள்ளி, திருஎறும்பியூர் சாலையில் கூத்தப்பார் என்னும் ஊர் உள்ளது. இந்த ஊரின் பழைய பெயர் கூத்தப்பெருமாள் நல்லூர், இங்குள்ள மருந்தீசர் கோயில் தென் மதிலின் வெளிப்புறத்தில் கண்டெடுக்கப்பட்ட புதிய கல்வெட்டில் நான்கு கோயில் நிருவாகிகளுக்கு இடையே நடந்த நிலம் விற்றல், நிலம் மாற்றிக் கொள்ளல் தொடர்பான செய்தி காணப்படுகின்றது.

இக்கல்வெட்டு மூன்றாம் இராசராசனின் இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டில் (கி. பி. 1245) வெட்டப்பட்டதாகும்.

38. வரலாறு, பிப்ரவரி 1994, பக். 11, 12.
39. Early Temples of Tamilnadu, p. 60

மூன்று கோயில் தானத்தார்களுக்கும் ஒரு கோயிலின் தேவ கன்மிகளுக்கும் இடையே இப்பரிவர்த்தனை நடந்துள்ளது. இக்கல்வெட்டில், கோயில் நிருவாகத்தில் ஈடுபட்டிருந்த தானத் தார்கள, தேவகன்மிகள் என்னும் இரு குழுவினர் குறிக்கப் படுகின்றனர்.

சோமநாததேவர், விசுவேசுவரதேவர், விசுவாதிகவிவேதீ சுவரமுடையார் ஆகிய மூன்று கோயில்களின் தானத்தாரும் இணைந்து தங்கள் கோயில்களுக்குரிய 13¾ வேலி நிலத்தைக் கூத்தப்பெருமாள் நல்லூர் அழகிய திருவிடை மருதுடைய நாயனார் கோயில் இறைவர்க்குத் திருநாமத்துக் காணியாக விளங்கும் பொருட்டு அக்கோயில் தேவகன்மிகளிடம் விசத்தடை பரிவர்த்தனையாக (பகுதி விலைக்கும் பகுதி மாற்றாகவும்) தந்தனர்.[40]

கோயிலில் பூசை செய்யும் சிவப்பிராமணர்கள் கொடை பெற்று விளக்கெரிக்கும் பணியைச் செய்த செய்தி, திருப்பைஞ் ஞீலியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் உள்ளது. இங்குள்ள கோயில் கல்வெட்டில், 'இக்கோயில் திருஅணுக்கன் வாசல் திரு விளக்கின் கீழ்நிலையில் சந்தி விளக்கொன்று எரிப்பதற்காகக் கோயில் சிவபிராமணர் சிலரிடம், நடுவில் நாட்டு, இராசராச வளநாட்டுப் பனம்பாக்கமான சோழகுலவல நல்லூரைச் சேர்ந்த எரிகிழான் வேளான் ஆட்கொண்ட வில்லி என்பான் ஏழு காசுகள் கொடையளித்த செய்தி இரண்டாம் இராச ராசனின் பதினாராம் ஆட்சியாண்டான கி. பி. 1162இல் வெட்டப்பட்ட கல்வெட்டில் உள்ளது.[41]

கருந்திட்டைக்குடி (கரந்தை) வசிஷ்டேசுவரர் கோயிலில் புதிதாகக் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் ஒன்றில் [உத்தமசோழனின் 14ஆம் ஆட்சியாண்டு (கி. பி 983)] அக் கோயிலில் ''தேவகன்மிகளும், கணத்தானும், ஸ்ரீகார்யம் செய் கின்ற மூன்று கோயில் நிருவாகிகளும் ஒரே கோயிலில் இருந்த செய்தி காணப்படுகிறது.[42]

40. வரலாறு, ஆகஸ்டு 1993, பக். 4.
41. ,, ,, பக். 20.
42. ,, ,, பக். 39

திருச்சி குழித்தலை அருகிலுள்ள நங்கவரத்திலுள்ள சுந்தரேசுவரர் கோயிலில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்றில் இக்கோயிலைச் சேர்ந்த ஆதிசண்டேசுவர பண்டார தேவ கன்மிகளும், கோயில் கண்காணி செய்வோரும், கோயிலோடு பணித்தொடர்புடைய கொல்லர்க்கும் தச்சர்க்கும் இறையிலியாக நிலமளித்தனர். திருவிழா நடக்கும் பத்து நாட்களும் சிறப்புச் சோறு வழங்கப்பட்டது என்னும் செய்திகள் காணப்படுகின்றன.

கோயில நிருவாகக் குழுக்களில் இதுவரை கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளில் குறிக்கப் பெறாத பண்டார தேவகன்மிகள், கோயில் கண்காணியோர் ஆகிய இரு குழுக்கள் குறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தகுந்த செய்தியாகும்[43]

திருவானைக்காக் கோயிலில் கண்டெடுக்கப்பட்ட சுந்தர பாண்டிய தேவர் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், கோயில் கணக்கு, கோயில் நாயகம் என்னும் அதிகாரிகள் குறிக்கப் பெறுகிறார்கள்.[44] டாக்டர் இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் மேற்கொண்ட முயற்சியினால் இப்புதிய கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டன.

திருக்கோயில் வரவு - செலவுத் திட்டம்

திருக்கோயில்கள் நில உரிமையாளர்களாகவும், வங்கியாகவும், வேலை வாய்ப்பு தரும் நிலையமாகவும் விளங்கியிருக்கின்றன. சோழர் காலத்தில் கோயில் சொத்துகள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டன. கோயில்களில் முறையாகக் கணக்கு எழுதுவதும், வரவு செலவுத் திட்டமும், அவற்றைத் தணிக்கை செய்வதும், அறக்கட்டளைகள் நிறுவுவதும், அவற்றைக் கண்காணிப்பதும் சிறந்த முறையில் நடைபெற்றன. இதனைச் சென்னை அருங்காட்சியகத்தில் இருக்கும் உத்தமசோழரின் 16ஆம் ஆட்சியாண்டுச் (கி. பி 985) செப்பேடுகளால் அறியலாம். முன்னும் பின்னும் இல்லாமல் இடையிலுள்ள ஐந்து செப்பேடுகளே அவற்றில் கிடைத்துள்ளன. அவற்றின் இருபுறமும் செய்திகள் வெட்டப்பட்டுள்ளன. செப்பேட்டின் ஒரு பகுதி வடமொழியில் உரைநடையாகவும் பாடல்களாகவும் உள்ளது. தமிழ்ப்பகுதி முழுவதும் உரை

43. மேலது ப. 37.
44. வரலாறு, பிப்ரவரி 1994 ப. 18

நடையாகவே உள்ளது. இந்தச் செப்பேடு குறிக்கும் ஊரகப் பெருமாள் கோயில் இப்போது காஞ்சியிலுள்ள உலகளந்த பெருமாள் கோயிலாகும்.

இக்கோயிலின் நிருவாகத்தில் அக்கறை கொண்ட அக்கால அரசு அலுவலர் சோழ மூவேந்த வேளார், கச்சிப்பேட்டு அரண்மனை, சித்திர மண்டபத்தில் அரசர் எழுந்தருளியிருந்த போது கோயிற் கணக்குகளை எழுதவும், செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவும். அலுவலர்களை அமைத்தும் உத்தம சோழர் ஆணையிட வேண்டுமென வேண்டினான். வர வினங்களைக் கோயில் செயல்பாடுகளுக்கு ஒதுக்கும் பணியை அரசன் வேளாரிடமே ஒப்படைத்தான்.

வரவு

கோயிலுக்குரிய வரவுகளாக கால் அளவு கூலி, கோல் நிறை கூலி என்பதும், இறைவனுக்காக விலைக்குப் பெறப் பட்ட நிலங்களின் விளைவும், கல்வெட்டுகளின்படி இறை வனுக்கு வரவேண்டிய வட்டியும், வரவினங்களாகக் குறிக்கப் பட்டுள்ளன. இவை நெல்லாகவும், பொன்னாகவும் கிடைத்தது.

ஊரகம் கோயிலுக்கான அறக்கட்டளைகள்

கோயில் வருவாயின் ஒரு பகுதி, நாள் தோறும் மூன்று சந்திகள் படையலுக்கு நெல்லாகவும், மற்றும் வழிபாட்டுப் பொருள்களுக்காகப்பொன்னாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. வருவாயின் மற்றொரு பகுதி கோயில் பணியாளர்களுக்கு நாள்தோறும் குறிப்பிட்ட அளவு நெல்லும், ஆண்டுக்கொரு முறை புடவை முதல் என்ற பெயரில் குறிப்பிட்ட அளவு பொன்னும் ஊதியமாகத் தரப்பட்டன.

இக்கோயிலில் பணிபுரிந்த பணியாளர்களாக வேதம் அறிந்த பிராமணர் ஒருவரும், பரிசாரகம் செய்யும் மாணி ஒருவரும், திருமெய்க் காப்பாளர் ஒருவரும், நந்தவனப் பணி யாளர் இருவரும், திருமெழுக்கிடுவாரும் குறிக்கப் பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர கோயிலில் இசைக்கருவிகள் வாசிக்கும் உவச்சர்கள் ஒன்பது பேருக்கும் ஊதியம், புடவை முதல் முதலியன அளிக்கப்பட்டன. இதற்குத் தனியாக 150 காடி நெல்லும், இரண்டுபட்டி நிலமும் தரப்பட்டன.

இவர்களில் ஒருவர் தலைப்பறை, இருவர் மத்தளி (மத்தளம்), ஒருவர் கரடிகை, ஒருவர் தாளம், ஒருவர் செகண்டிகை, ஒருவர் கை மணி, இருவர் காளம் என்னும் இசைக் கருவிகளை வாசித்தனர்.

இக்கோயில் இறைவனுக்குப் படையல் செய்யப்பட்ட பொருள்கள் திரு அமுது, இரண்டு கறி அமுது, நாழி உரி தயிரமுது, நெய்யமுது, அடைக்காய் அமுது ஆகியவை யாகவும், திருமெய்ப்பூச்சு, திருப்புகை ஆகியவை வழிபாட்டுப் பொருள்களாகவும் பயன்படுத்தப்பட்டன.

இக்கோயிலுக்குரிய சொத்துகளாகக் கச்சிப்பேட்டிலும், துண்டுணுக்கச் சேரியிலும் விலைக்குப் பெறப்பட்ட நிலங்கள் (புதிதாக வாங்கியது) குறிக்கப்படுகின்றன. ஊரிலிருந்து கோல் நிறை கூலியும், காலளவு கூலியும் பெறப்பட்டன.

கல்வெட்டுகளின் படி ஊரகப்பெருமாளுக்குரிய பொன்னைப் பல சபையோர்களிடம் கொடுத்து வைத்து அதற்கு வட்டியாக, நெல்லும், பொன்னும் பெறப்பட்டன.

கூரத்து மகாசபையாரும், அரியற்பெருமபாக்கத்துச் சபையாரும் கோயிலிடமிருந்து 250 கழஞ்சு பொன் பெற்றுக் கொண்டு அதற்கான வட்டியாக ஆண்டுதோறும் 500 காடி நெல்லைக் கோயிலுக்கு அளந்தனர். உழையூர் சபையார் கொண்ட பொன் 50 கழஞ்சு. இதற்கு வட்டியாக ஆணடு தோறும் 150 காடி நெல் அளந்தனர்.

ஒழுக்கைப்பாக்கத்துச் சபையார் கொண்ட பொன் 24 கழஞ்சு. இதன் வட்டியாக ஆண்டு தோறும், ஒரு கழஞ்சே நான்கு மஞ்சாடி பொன்னைக் கோயிலுக்குக் கொடுத்தனர்.

இச்செப்பேட்டில் திருமுழுக்காட்டும் திருப்பணி செய்வோர், விளக்குப் பிடிப்பார், கொடி எடுப்பார், கோயிலுக்கு வருகை தரும் பருஷை நாயன்மார் (மூல பருடை)களுக்கும் (ஊரவைத் தலைவர்) அடியவர் கூட்டங்களைக் கூட்டியவர் களுக்கும் தூணி அளவு அரிசி தரப்பட்டது.

மேலும், சந்தி விளக்கு, நந்தா விளக்கு ஆகியவை எரிய வைப்பதற்கான நிவந்தங்களும் குறிக்கப்பட்டுள்ளன.

மேலும் சித்திரைத் திருவிழாவுக்குப் புதிய அறக்கட்டளை ஏற்படுததப்பட்ட செய்தியையும் கூறுகிறது. கச்சிப்பேட்டைச்

சேர்ந்த கம்புழான் பாடியாரிடம் 73½ கழஞ்சு பொன்னும், அதிகமானப்பாடியாரிடம் 73½ கழஞ்சு பொன்னும், கஞ்சகப் பாடியாரிடம் 35 கழஞ்சு பொன்னும், எற்று வழிச் சேரி யாரிடம் 18 கழஞ்சு பொன்னும் ஆக 200 பொன்னை முதலாகக் கொடுத்து அதனால் வரும் ஆண்டு வட்டி முப்பது கழஞ்சினால் கோயில் சித்திரைத் திருவிழா எடுக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது இந்த முப்பது கழஞ்சு வட்டி எப்படிச் செலவு செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஏழு நாள் விழா நடைபெற்றது. ஏழு நாட்களுக்குமாகச் சேர்த்து எண்ணெய்க்கு 7 கழஞ்சும், சந்தனத்துக்கு 2 கழஞ்சும், தேவரடி யார்க்கும் கொற்றுக்கும் பூசைக்கும் 5 கழஞ்சும், பிராமணர் போஜனத்துக்கு 10 கழஞ்சும், இறைவனுடைய பள்ளியறைப் பல்லக்கைத் தூக்குபவர், சிறப்பாக அழைக்கப்பட்ட இசைக் கலைஞர் ஆகியோருக்கு 1 கழஞ்சும், மீதியுள்ள 5 கழஞ்சுகள் கண்டழிவு என்னும் பெயரில் (miscellaneous) திடீரென்று ஏற்படும் பிற செலவுகளுக்காகவும் ஒதுக்கப்பட்டது. இவ்வாறு வரவு செலவுத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

அதிகமானப்பாடி, கம்புழான்பாடி ஆகியவற்றில் குடி யிருந்தவர்களை மேலாளர்களாக உத்தமசோழர் நியமித்தார். இவர்களும் சோழா நியமத்தாரும் முறை வைத்து கோயில் கணக்கை எழுதி, அவற்றை ஒவ்வொரு மாதமும் இந்நான்கு குடியிருப்புகளில் இருக்கும் அரச ஆடை தயாரிக்கும் நெச வாளர்களிடம் காட்டுதல் வேண்டும் என்றும் குறிக்கப் பட்டுள்ளது.

'ஊரகப் பெருமாள் கோயிற் செயற்பாடுகளில் ஏதேனும் இடையூறுகள் ஏற்பட்டால் பதினெட்டு நாட்டு அடியார்கள் மட்டுமே கூடி அவற்றை நேர்செய்தல் வேண்டும் என்றும், கச்சிப்பேட்டு நகரையாளும் நகரத்தார் குழுவின் தலைவரும், ஆண்டு வாரியத்தாரும், எற்றுவழிச்சேரி மற்றும் கஞ்சகப்பாடி குடியிருப்புகளைச் சேர்ந்தோரும் இக்கோயில் திருவிழாக்கள் முடிந்த அளவிலேயே கோயிற் கணக்குகளைப் பார்வையிட வேண்டுமென்றும், பெருமாள் கோயில் பண்டாரத்தில் வைத்த அறக்கட்டளை கொண்டு கஞ்சகப்பாடியாரும் எற்று வழிச் சேரியாருமே கோயிலுக்கு மெய்க்காப்பாளரை இடவேண்டும் என்றும், ஸ்ரீகார்யம் கடைக்காண்பார், திருமெய்க்காப்பு கணக்கெழுதுவார் ஆகியோரை நகரத்தாரே தேர்ந்தெடுத்துப்

பணியமர்த்தி அவர்களுக்கு வரி விலக்களிக்க வேண்டுமெனறும், பெருமாள் கோயிலில் வழிபாடு செய்யக் கோயில் வழிபாட்டு நடைமுறைகளை நன்கறிந்து அவற்றில் தேர்ந்த ஸ்ரீகோயில் நம்பிமார் கிடைக்காது போனால் வேதங்களில் வல்ல பிராமணரையே வழிபாடு செய்யச் செய்ய வேண்டுமென்றும் செப்பேட்டின் இறுதிப்பகுதி சில வரையறைகளை வகுத்துள்ளது.

முதலும் இறுதியும் இல்லாமல் ஐந்தே செப்பேடுகள் கிடைத்தாலும் இவைபோலத் தமிழ்நாட்டுக் கோயிகளின் நிருவாக முறை, பணியாளர், நிவந்தங்கள், நாள்தோறும் மூன்று சந்திப்பூசைகள், படையல்கள், வழிபாட்டுப் பொருள்கள், திருவிழா வரவு செலவுத் திட்டம், கோயில் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்யும் முறை, கோயிலுக்கு விளக்கெரித்தல், கோயில் பணியாளரைத் தேர்ந்தெடுக்கும் முறை ஆகியவைகளை ஒருசேர விளக்கும் சான்றுகள் வேறு எதுவும் இல்லை எனலாம்.

வானோர்க்குச் சிறப்பொடு பூசனைகள் செய்ய ஏற்படுத்தப்பட்டவையே கோயில்கள். கோயில்களில் விளக்கெரித்தல், நாள்தோறும் மூன்று சந்திபூசை, படையல்கள் படைத்தல், ஆண்டு தோறும் திருவிழா நடத்தல் ஆகியவையே முக்கியமாகக் கருதப்பட்டு அதற்காகவே கிராமங்களும், நிலங்களும், பொன்னும் வழங்கப்பட்டன. அவற்றை நிருவகிக்கவே சபைகள் ஏற்பட்டன. இவை அனைத்தையும் விளக்கும் அற்புதக் கருவூலமே உத்தமசோழன் செப்பேடுகளாகும்[46]

கோயிலுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவுகளையும் தெள்ளத் தெளிவாக இச்செப்பேடுகள் உணர்த்துகின்றன.

நாயக்கர் காலத்தில் கோயில் நிருவாகம்

அபிடேக பண்டாரம்

திருமலை நாயக்கர் ஆண்ட காலத்தில், மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் அபிடேக பண்டாரம் என்பவரிடம் இருந்தது. அபிடேக பண்டாரத்தின் ஆட்சியில் கோயில் வருவாய் அவரால் கையாடல் செய்யப்பட்டு வந்ததால், வழிபாடுகள்

45. வரவாறு, ஆகஸ்டு 1993, பக். 60-71

சரியாக நடத்தப் பெறவில்லை. கோயில் நிருவாகம் சீர் கேடான நிலையில் இருந்தது.

திருமலை நாயக்கர் திருச்சியிலிருந்து, மதுரைக்குத் தலை நகரை மாற்றினார். அப்போது கோயிலின் நிலையை உணர்ந் தார். நிருவாகத்தைச் சீர்திருத்த எண்ணி, கோயில் அதிகாரி யாக இருந்த பண்டாரத்துக்கு, நிலம், பணம் முதலியவற்றைக் கொடுத்து, கோயில் நிருவாகத்தைத் தான் ஏற்றுக் கொண்டார். கோயில் பணியாளர்களை ஒழுங்குபடுத்த முயன்றார். அவர்கள் கலகம் செய்தனர். நாயக்கர் அவர்களுக்கு இன்னுரை கூறி நிரந்தரக் கட்டளை ஏற்படுத்தி, மீனாட்சி அம்மனுக்கு உச்சி, மாலை, நள்ளிரவு ஆகிய காலங்களிலும், சோமசுந்தர ருக்கு உச்சி வேளையிலும் சிறப்பாகப் பூசை நடை பெறவும், வசந்தோற்சவம், தெப்பத் திருவிழா நடத்தவும் ஏற்பாடு செய்து, அப்போது ஊழியர்களுக்குக் கட்டளைப் பணம் கிடைக்க வழி செய்தார்.

கோயில் ஆட்சிமுறை

மதுரைக் கோயில் பட்டர்களிடையே பூசை செய்வது குறித்தும், முதல் மரியாதை பெறுவது குறித்தும் பூசல்கள் இருந்து வந்தன. கோயில் நிருவாகத்தை ஒழுங்குபடுத்தக் கருதி, விக்கிரம பாண்டியர் பட்டர் வகையினரைக் கரு வறையுள் திருமுழுக்கு, வழிபாடு முதலியவற்றைச் செய்து வரவும், குலசேகர பாண்டியார் பட்டர் வகையினரை உற்சவர் திருமுழுக்கு, அணி செய்தல் முதலியன செய்து வரவும் திட்டம் செய்தார். முதல் மரியாதை விக்கிரம பாண்டியர் வகைக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தார். கட்டளை சரிபாதியாகக் கிடைக்க வழி செய்தார். பெரிய விழாக்களில் இரு பிரிவினரும் சேர்ந்து செய்யும் படியாகச் சிறப்பைக் கொடுத்தார். ஸ்தானிகர் அதிகாரத்தை அந்தந்த வகையினரில் வயது முதிர்ந்தவரே பார்த்து வருமாறு செய்தார்.

வழிபாடு தொடர்பான அனைத்திற்கும் தலைமை தாங்கு வதும் எல்லாவற்றிற்கும் பொறுப்பேற்பதும் ஸ்தானிகருடைய அதிகாரங்களாகும். அதாவது கோயில் வழிபாடுகளுக்கு முழுப்பொறுப்பேற்பவர் என்பது பொருள்.

காமிகாமம் என்னும் நூலில் தேவகாரியம் பார்ப்போர் ஆசாரியர், அர்ச்சகர், ஸ்தானிகர், பாசகர், பரிசாரகர் என

இவர் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆசாரியர் நாள் பூசை, உற்சவம், பிரதிஷ்டை, பிராயச்சித்தம் ஆகியவைகளைச் செய் தற்கு உரியவர். அர்ச்சகர் நாள்பூசை மட்டும் செய்வதற்கு உரியவர். ஸ்தானீகர் திருவீதி திருமேனிகளுக்கு அலங்காரம் மட்டும் செய்யலாம். மூல லிங்கத்தைத் தொடுதல் கூடாதுச் பாசகர் சமையல் மட்டும் செய்வதற்கு உரியவர். பரிசாரகர் அபிடேக தீர்த்தம், பூசைக்கு வேண்டும் பொருள்கள் முதலிய வற்றைக் கொண்டுவந்து வைப்பவர் என்று கூறுகிறது.

ஆனால் இக்காலத்தில் அர்ச்சகர் வழிபாடுகள் தொடர் பான அனைத்தையும் செய்கிறார். பரிசாரகர், அர்ச்சகருக்கு உதவுவதோடு அல்லாமல் மடைப்பள்ளியையும் கவனித்துக் கொள்கிறார்.

நிர்வாகக்காரர்கள்

திருமலை நாயக்கர் கோயில் ஆபரணங்களை எடுக்கவும், வைக்கவும் கோயில் தொடர்பானவற்றைச் செய்வதற்கும், கண் காணிப்பதற்கும் பணியாளர்களை நியமித்தார். இவர்களுக்கு 'நிர்வாகக்காரர்கள்' என்று பெயர் கொடுத்தார். அவர்களுடைய வருவாய்க்காகப் பல கிராமங்களை நிவந்த மாகக் கொடுத்தார்.[46]

இந்த நிருவாகக்காரர்களே 'ஆறு நிருவாகத்தார்' என்று அழைக்கப்பட்டனர்.[47] இதில் முதல் நான்கு நிருவாகத்தார், நான்கு ஸ்தானீகம் எனப்பட்ட பட்டர்கள் நியமிக்கப்பட் டார்கள். இவர்கள் காமிகாமம் நூலில் சொல்லப்பட்ட தேவ காரியம் பார்ப்போர் ஐவரில் பாசகர் (மடைப்பள்ளி சமையல்) தவிர்த்த ஆசாரியர், அர்ச்சகர், ஸ்தானீகர், பரிசாரகர் ஆவர். ஐந்தாம் நிருவாகம் ஆபரணம் பூட்டுகின்ற பணியிலும், ஆறாம் நிருவாகம் கணக்கு என்ற வரிசையிலும் நியமிக்கப் பட்டனர். இவ்வாறு கோயில் நிருவாக முறை திருமலை நாயக்கர் காலத்தில் ஒழுங்கப்படுத்தப்பட்டது.

46. மதுரை நாயக்கர் வரலாறு, பக். 202-205.
47. நாகப்பா நாச்சியப்பன், திருப்பரங்குன்றம், வேற் கோட்டம், தமயந்தி பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு, பக். 109, 110.

ஆங்கிலேயர்

சோழர் காலத்திலும், நாயக்கர் காலத்திலும் ஏற்பட்ட நிருவாக முறைகளே ஆங்கிலேயர் காலத்திலும் பின்பற்றப் பட்டன.

ஆங்கிலக் கல்வியின் பயனாகவும், விடுதலைப் போராட் டத்தின் விளைவாகவும், சுயமரியாதை இயக்கம் தோன்றிய தாலும் மக்களிடையே கோயில்கள் பற்றிய சித்தனையிலே ஒரு மாற்றம் ஏற்பட்டது. கடவுளிடத்திலே பயம் குறைந்தது. அதனால் எதையும் செய்யலாம் என்கிற மனப்பான்மை மக்களிடையே எழுந்தது.

இக்காலப் பகுதியில் பெரிய கோயில்கள் பல, தருமபுர ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், மயிலம் ஆதீனம் போன்ற மடங் களின் நிருவாகத்தின் கீழ் இருந்தன.

சில கோயில்களில் பரம்பரையாக அறங்காவலர்கள் இருந்து பார்த்துக் கொண்டனர். சில குறிப்பிட்ட சாதியினர் தங்களுடைய நிருவாகத்தின்கீழ்க் கோயிலை வைத்திருந்தனர்.

தில்லைத் திருக்கோயில் நிருவாகம் இன்றளவும் தீட்சிதர் களின் நிருவாகத்திலேயே இருந்து வருகிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் புதிதாகக் கோயில்கள் தோன்றவில்லை என்றே கூறலாம்.

அறங்காவலர் குழு நிருவாகத்தை மேற்கொண்டது. இவர் களுடைய மேற்பார்வையின்கீழ்க் கோயில்களில் பேஷ்கர் அல்லது மணியம், நிருவாகத்தைக் கவனித்துக்கொண்டனர். கோயில் நிருவாகத்தில் உதவியாகக் கணக்குப்பிள்ளை, தண்டல் காரர் ஆகியோரும் இருந்தனர்.

குறிப்பிட்ட சாதியினருக்கு உரிமையாயிருந்த கோயில் களில் ஊரார் (சாதிமக்கள்) ஒன்றாகக் கூடி அறங்காவலர் களைத் தேர்ந்தெடுத்தனர் இந்த முறை இன்றும் நடைமுறை யில் உள்ளது.

தலைக்கட்டு

சான்றாக, சென்னை சைதாப்பேட்டையில் நான்கு தெருக் களில் வசிக்கும் செங்குந்தர், அங்கேயிருக்கும் சந்தனவிநாயகர் கோயிலுக்கு அறங்காவலரைத் தேர்ந்தெடுக்கும் முறையைக்

கூறலாம். அவர்கள் வசிக்கும் பகுதிக்குத் தோப்பேட்டை கிராமம் என்று பெயர். இந்தக் கிராமம் மேற்படி இனத்தினர், சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் வசிக்கும் 18 கிராமங் களில் ஒன்றாகும். திருமணமான தம்பதியர் ஒரு தலைக்கட்டு என்று அழைக்கப்பட்டனர். ஒரு குடும்பத்திலே இரண்டு, மூன்று தம்பதியர் இருந்தால், அவர்கள் தனித்தனித் தலைக் கட்டாகக் கருதப்பட்டனர். அவர்கள் ஆண்டுக்கொரு முறை அங்குள்ள சந்தன விநாயகர் கோயிலுக்குத் தலைக்கட்டுக்குரிய சந்தாத் தொகையைச் செலுத்த வேண்டும். மேலும், குடும்பங் களில் நடக்கும் நல்லது கெட்டதிற்குக் கிராமத்தார் வந்து நடத்தி வைப்பார்கள். இதற்கு ஒரு தொகையை அளிக்க வேண்டும். இதுவும் கோயிலுக்குச் சேரும். இந்தக் கோயிலுக்கு அறங்காவலரைத் தேர்ந்தெடுக்க, நாற்பது கூட்டம் என்ற பெயரில், அதாவது அந்தக் கூட்டத்திற்குக் குறைந்த அளவு நாற்பது பேராவது வரவேண்டும் என்ற காரணத்தினால் கூட்டப்படுகிறது. தலைக்கட்டு கட்டுகிறவர்கள் அதில் கலந்து கொள்ள உரிமை உடையவர்கள் ஆகிறார்கள். கூட்டத்தில் பெரும்பான்மையினோரின் ஆதரவையும் ஒப்புதலையும் பெற் றவர்கள் அறங்காவலராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இக்கோயில் சிறிய கோயிலாக இருப்பதால் மூன்று அறங் காவலர்களாலும் அவருக்கு உவியாகத் தண்டல்காரர் ஒருவ ராலும் கோயில் நிருவாகம் செய்யப்படுகிறது. கோயில் பூசை களைச் செய்ய அருச்சகர் ஒருவர் இருக்கிறார்.

இந்த மாதிரியான முறையில் நிருவாகம் செய்யப்படும் சாதியார் கோயில்கள் சில நிறைய சொத்துக்களோடு இருப் பதால், அங்கு அறங்காவலர் பதவியைப் பெறப் போட்டி ஏற் பட்டு, உயர்நீதிமன்றம்வரை சென்று வழக்கும் தொடர்ந்து, அதன் காரணமாக உயர்நீதி மன்றம் திட்டம் வகுத்துத்தர (Scheme) அதன்படி அறங்காவலர் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர். காரணீசுவரர் கோயிலில் இவ்வாறு அறங்காவலர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இவ்வாறு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பெரும்பான்மை யான கோயில்களின் நிருவாகம் அறங்காவலர் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவர்களும் பரம்பரை அறங்காவலர், தேர்த்தெடுக்கப்பட்ட அறங்காவலர் என இருவகையாக இருந்

தனர். கோயில் நிருவாகத்திற்கு இவர்களுக்கு உதவிபுரிய கணக்குப்பிள்ளையும், தண்டல்காரரும் இருந்தனர்.

விடுதலைக்குப்பின் கோயில்களின் நிருவாகம்

தனியார் அறக்கட்டளையின் பேரில் கட்டப்பட்ட கோயில்கள், தில்லை நடராசர் கோயில், உண்டியல் வைக்கப் படாத கோயில்கள் தவிர, மற்றெல்லாக் கோயில்களும் தமிழ் நாடு அரசின் கண்காணிப்புக்கு உட்பட்டன. தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை என்னும் அமைப்பு அரசால் ஏற்படுத்தப்பட்டது. பழங்காலத்திலிருந்து வரும் கோயில் ஆட்சிமுறை தொடர்ந்து இருந்தாலும், அரசின் கோயில் ஆட்சி முறை மேற்சொன்ன கோயில்களில் நடைமுறையில் உள்ளது. அரசு முதலமைச்சர், அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் என்று ஆட்சியாளர்களுக்கும், ஆணையர், இணை ஆணையர், துணை ஆணையர், நிருவாக அதிகாரி, கண்காணிப்பாளர், பேஷ்கார் அல்லது மணியம், கணக்கர், காசாளர் மற்றும் பிற கோயில் ஊழியர்கள்மூலம் கோயில் நிருவாகம் நடைபெற்று வருகிறது. இந்த முறையிலேயே சென்னைக் கபாலீசுவரர் திருக்கோயில் நிருவாகம் நடந்து வருகிறது. 1950ஆம் ஆண்டுச் சட்டப்படி நிர்வாகத் திட்டம் உள்ளது. அதன்படி நிர்வாகம் நடைபெறுகிறது. ஐந்து அறங்காவலர்கள் நியமனம் செய்யப் படுகிறார்கள். பூந்தமல்லி உயர் துளுவவேளாளர் வகுப்பி லிருந்தும், அரிசன சமூகத்திலிருந்தும் ஒவ்வொருவர் கட்டாயம் அறங்காவலராக நியமிக்கப்படுகிறார்கள். மற்ற மூன்று பேர் சட்ட விதிகளின்படி நியமனம் செய்யப்படுகிறார்கள். துணை ஆணையர் நிருவாக அதிகாரியாக இருந்து மற்ற அலுவலர் களுடன் கோயில் நிருவாகத்தை நடத்துகிறார்.[48]

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அதிகாரிகள் பணி புரியாத தனியார் கோயில்களும் உண்டியல் வருமானம் உடைய தாக இருந்தால் அக்கோயில்கள் அறநிலையத்துறையின் கண் காணிப்புக்கு உட்பட்டவையாகும். அறநிலைய ஆட்சித்துறை

48. சு, ராஜசேகரன், மயிலை அருள்மிகு காபலீசுவரர் ஆலயம் தலவரலாறு, இந்துசமய அறநிலைய ஆட்சித் துறை, வெளியீடு, தமிழ்நாடு அரசு, சென்னை, முதற் பதிப்பு, 1993, ப.115.

குறிப்பிடும் நாளில் ஆட்சித்துறை ஆய்வாளர் முன்னிலை யிலேயே உண்டியலைத் திறந்து எண்ணவேண்டும். மேலும் கோயில் கணக்கு வழக்குகளும் அறநிலையத் துறையில் தணிக்கைக்கு உட்பட்டதாகும். சைதாப்பேட்டை காரணீசு வரர் கோயில் (சாதியார் கோயில்), சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், கடும்பாடி அம்மன் கோயில் (தனியார்) போன்ற கோயில்கள் இப்படிப்பட்ட கண்காணிப்பின் கீழ் உள்ளன.

பெரும்பாலும் இக்காலத்தில் ஆளும் கட்சியினர் ஒருவர், பெருஞ்செல்வர் ஒருவர், வணிகர் ஒருவர் அறங்காவலர் குழுவில் இடம்பெற்று விடுகின்றனர்.

இவ்வாறு இக்காலத்தில் திருக்கோயில் நிருவாகம் நடை பெறுகிறது.

மிகப்பெரிய கோயில்களாகவும் இல்லாமல், மிகச் சிறிய கோயில்களாகவும் இல்லாமல் நடுத்தரமாக 5 மனைப் பரப் பளவில் பல கோயில்கள் கடந்த முந்நூறு ஆண்டுகளுக்குள் கட்டப்பட்டுள்ளன. அவை திருச்சுற்றுமதில் ஐந்துநிலை கோபுரம், மூலவர் சந்நிதி, கொடிமரம், அம்மன் சந்நிதி, பரிவாரத் தெய்வங்களாகச் சனீசுவரன், பழனி ஆண்டவர், ஆஞ்சநேயர், நவக்கிரக சந்நிதிகள், வாகன அறைகள் மண்ட பங்களோடு அமைந்துள்ளன.

இத்தகைய கோயில்களின் நிருவாகத்தைக் குறைந்த அளவு 20லிருந்து 25 பேர் செய்கின்றனர். ஐந்துபேர் அடங்கிய அறங் காவலர் குழுவும் அவர்களுள் ஒருவரான குழுத்தலைவரும் மேற்பார்வை செய்ய கணக்கர் ஒருவர், கோயில் கட்டளை களைச் செயல்படுத்துபவர் ஒருவர், அர்ச்சனை மற்றும் கட்டளைக் கட்டணங்களை வசூலிப்பவர் ஒருவர், துப்புரவுப் பணி செய்பவர் ஒருவர், வாயிற் காப்பாளர் ஒருவர், தண்டல் காரர் ஒருவர், அர்ச்சகர் நால்வர், மடைப்பள்ளி இருவர், பரிசாரகர் ஒருவர், நாதசுர வித்வான் இருவர், தவில் ஒருவர், தாளம் ஒருவர் என்ற வகையில் 22 பேர் சென்னை சைதாப் பேட்டையிலுள்ள சிவசுப்பிரமணிய கோயில் நிருவாகப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.[49]

---

49. தகவல் - சுப்பிரமணிய முதலியார், அறங்காவலர் குழுத் தலைவர் சிவ. சுப்பிரமணிய சுவாமி கோயில், சைதாப் பேட்டை., கள ஆய்வு நாள், 28-3-94.

திருக்கோயில் பணியாளர்

திருக்கோயிலில் பணிபுரிபவர்களை நிர்வாகம், பூசை, கோயில் தொடர்பான தொழில்கள் என்னும் மூன்றாகப் பாகு பாடு செய்யலாம்.

நிருவாகம்

மணியம் அல்லது பேஷ்கார் தலைமையில் கணக்காளர், காசாளர், எழுத்தர், அர்ச்சனை ரசீது விற்பவர், கடைநிலை ஊழியர், துப்புரவுப் பணியாளர், வாயிற் காவலர் ஆகியோர் அடங்கிய குழு கோயில் நிருவாகத்தைக் கவனித்துக் கொள் கிறது.

பூசை

கோயில்களில் மூன்று காலம் அல்லது நான்கு காலங்களில் பூசை செய்வது, படையல் இடுவது போன்ற சில காரியங் களைச் செய்ய தலைமை அர்ச்சகர் ஒருவரும், துணையாக மூன்று அர்ச்சகர்களும், மடைப்பள்ளியில் பணிபுரியவும், பரிசாரகம் செய்யவும் இரண்டு அந்தணர்களும் உள்ளனர். மேலும் திருவிளக்கு ஏற்றும் அந்தணர் ஒருவரும் ஓதுவார் ஒருவரும் பூசை தொடர்பான பணிகளில் ஈடுபடுகின்றவர் களாவர்.

தொழில்

கோயில் தொழில்களில் முக்கியமாக இக்காலத்தில் இடம் பெறுவது இசைக்கலையேயாகும். இவர்கள் வாத்தியக்காரர் எனப்படுகின்றனர். இவர்களில் தலைமை இடம் வகிப்பவர் நாதசுரம் வாசிக்கும் இருவர், தவில் அடிக்கும் ஒருவர், தாள மிடும் ஒருவர் ஆகியோராவர். இவர்கள் தவிர, ராஜ வாத்தியம் எனப்படும் பறைமேளம், டமாரம் எனப்படும் காளை மாட்டின் முதுகில் வைத்துக்கொட்டப்படும் மேளம், முரசு, பேரிகை நகாரா, கஞ்சிரா, உடுப்புத்தோலால் ஆன சூரியபிரபை, சந்திரபிரபை, உடுக்கை, திரிசங்கம், தாரை, துந்துபி, கொம்பு, புல்லாங்குழல், வீணை, பாண்டு ஆகிய வற்றை வாசிக்கும் வாத்தியக்காரர்களும் கோயில்களில் பணி யாற்றுகின்றனர்.

இவர்கள் தவிர நிமந்தக்காரர் அல்லது கோடிக்காரர் (நாலு மூலை) சுவாமி தூக்குபவர், குடை தூக்குபவர், தீவட்டி

தூக்குபவர், சந்தனம் அரைப்பவர், சலவைக்காரர், நாவிதர், பொற்கொல்லர், தச்சர், சிற்பி ஆகியோரும் கோயில்களில் பணியாளர்களாகப் பணியாற்றுகின்றனர். இவ்வாறு இக் காலத்தில் கோயில் நிருவாகம் நடைபெறுகின்றது.

கோயிலும் தானதருமங்களும்

மூலத்தானம் என்னும் ஓர் அறை மட்டுமே கோயில் என்கிற நிலை தொடக்கக் காலத்திலிருந்தது. கோயில் ஒரு பெரிய நிறுவனமாகப் பல்லவர் காலத்தில் வளரத் தொடங்கியது. பிற்காலச் சோழர் காலத்தில் உச்ச நிலையை அடைந்தது. நாயன்மார்கள் ஆழ்வார்களின் பக்தி இயக்கங்களின் காரணமாக, கோயில்களுக்குச் செல்லுவோர் எண்ணிக்கையும், தானம் கொடுப்போர் எண்ணிக்கையும் அதிகமாயிற்று. கோயிலுக்கும் தானதருமங்கள் செய்தால் கடவுளுடைய அருள் ஆசி கிடைக்கும் என்று சமயங்கள் போதித்த போதனை மக்கள் மனத்திலே படிந்தது; தாங்கள் செய்த பாவங்கள் கூட, கோயிலுக்கும் அந்தணருக்கும் தானம் கொடுத்தால் தீயினில் இட்ட தூசாகும் என்று நம்பினர்.

தேவதானம்

தொடக்கக் காலத்தில் அரசர்கள், கோயில்களைக் கட்டிக் கிராமங்களைத் தானமாக அளித்தார்கள். அவை தேவதானம் எனப்பட்டன. அந்தணர்களுக்குப் பிரமதேயம் என்னும் பெயரில் நிலத்தானம் செய்து, அந்த நிலத்திலிருந்து வரும் வருவாயும் கோயில்களுக்குப் பயன்படச்செய்தனர். வணிகர்கள் நிலத்தையும், பொன், வெள்ளி ஆபரணங்களையும், தானமாக அளித்தனர். மற்ற பொதுமக்கள் பெரும்பாலும் கோயில் விளக்கெரிப்பதற்காக ஆடுகளையும் பசுக்களையும் தானமாக அளித்தனர்.

தாங்கள் செய்த தானம் எல்லோருக்கும் தெரியவேண்டும் என்பதற்காகக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் பொறித்து வைத்தனர்.

அரசர் செய்த தானம் மகாதானம் என்று குறிக்கப்பட்டது. சாஸ்திரம் வல்ல அந்தணர் சொற்படி நல்ல நாள், நேரம், திதி பார்த்துத் தருமம் செய்தனர்.

அரசர்கள் மகுடாபிடேகம் செய்து கொள்ளும் போதும், போரில் வெற்றி பெற்ற போதும், மகன் பிறந்த போதும்

கோயிலுக்கு வருகை தந்த போதும் இரணிய கர்ப்பம், துலாபாரம் செய்யும் போதும் மற்றவர் வேண்டுகோட்கு இணங்கியும் தானங்கள் செய்தனர். திருக்கோயிலில் விளக்கு எரிய வைப்பதற்காகவும், நாள் பூசைகள், திருவிழாக்கள் நடத்துவதற்காகவும், நாள்தோறும் படையல் படைப்பதற் காகவும் தானங்கள் அளிக்கப்பட்டன.

முக்கியமாக, கோயில்களில் விளக்கெரிய வேண்டும், ஒரு காலப் பூசையாவது நடக்கவேண்டும் என்பதற்காகவே பெரும் பாலும் மக்கள் தானமளித்தனர்.

அரசக் குலத்து மகளிரும், சிற்றரசர்களும், படைத்தலைவர் களும், அதிகாரிகளும், செல்வரும், பாமரரும் கோயில்களுக்குத் தங்களால் இயன்ற தானத்தைச் செய்தனர்.

கோயிலுக்குக் கிராம தானங்கள், நிலத்தானம், பொற் காசுகள், விலங்குகள், பாத்திரங்கள், ஆபரணங்கள் மற்றும் வழி பாட்டுக்குத் தேவையான பொருள்களையும் தானமாக அரசரும் மக்களும் அளித்தனர்.

கிராம தானங்கள்

கி பி. 9ஆம் நூற்றாண்டு வரையில் ஆண்ட பல்லவர்—பாண்டியர் காலத்தில் அந்தணர்களுக்குப் பிரமதேயமாக அளிக்கப்பட்ட தானங்கள் எட்டு மட்டுமே கல்வெட்டுகளில் காணக்கிடக்கின்றன. பிற்காலச் சோழர் காலத்தில் 50 கிரா மங்கள் கோயில்களுக்குத் தேவதானமாக அளிக்கப்பட்டுள்ளன.

முதலாம் பரமேசுவர வர்மனின் கூரம் செப்பேடுகள் பரமேசுவர மங்கலம் என்னும் கிராமம் தேவதானம் நிமித்தம் பிரமதேயமாக அளிக்கப்பட்டது என்று கூறுகிறது. கோயி லுக்கும் அந்தணருக்கும் ஒருங்கே பயன்படுமாறு அளிக்கப் பட்டது இத்தானமாகும். இந்தக் கிராம மக்கள் செலுத்தும் வரித்தொகை, கிராம நிலத்தில் விளைந்த பொருள்கள், குத்த கைப்பணமாக வந்த தொகை ஆகியவை கோயிலுக்கு வரு வாயாக அமைந்தன.

முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் தஞ்சாவூர்ப் பெரிய கோயிலுக்கு 40க்கும் மேற்பட்ட கிராமங்கள் தான மாக அளிக்கப்பட்டன.[50]

---

50. Early Temples ot Tamilnadu, pp. 79,80.

நிலக்கொடை

கோயிலுக்கு நிலங்களைக் கொடுத்தல் மிகச்சிறந்த தானமாகக் கருதப்பட்டது. இதனை அதிதானம் என்று சாத்திரம் வல்லவர்கள் அழைத்தனர். நிலம், நீரையும் பயிரையும் உள்ளடக்கிய வருவாய் தரக்கூடியது. கோயில்கள் நிலங்களை அதிக அளவில் தானமாகப் பெற்றன. கோயில்கள் பெரிய நிலப் பிரபுக்களாகத் திகழ்ந்தன. இந்துக்கோயில்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் தேவதானம் எனவும், தேவபோகம் எனவும் அழைக்கப்பட்டன.

அன்னபிராயம்

அரசர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு முதன் முதலில் கோயிலில் சோறூட்டும் போதும் கோயில்களுக்கு நிலத்தானம் அளித்தனர்.

திருச்சிக்குப் பக்கத்தில் உள்ள செந்துறையில் சந்திரசேகர் திருக்கோயில் உள்ளது. இக்கோயில் கொடும்பாளூர்ச் சிற்றரசன் பூதி ஆதித்தபிடாரியால் கட்டப்பட்டதாகும். அண்மையில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டொன்றில் கொடும்பாளூர் ஆதித்தம் பூதி, தன் மகன் பூதிபராந்தகன் அன்னபிராயம் (சோறூட்டல்) செய்த நாளில், திருச்செந்துறைக்கோயில் இறைவனுக்கும், பிள்ளையார்க்கும் படையல்கள் மற்றும் வழிபாட்டிற்காகத் தேவதான இறையிலியாக நிலக்கொடை அளித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு முதல் பராந்தக சோழன் காலத்ததாகும்.[51]

திருவானைக்காக் கல்வெட்டொன்றில் இரண்டாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன், அவன் பெயரால் அமைந்திருந்த சந்தி வழிபாட்டிற்குத் தேவதான இறையிலி நிலம் அளித்த செய்தி காணப்படுகிறது.[52]

தஞ்சாவூர் அருகிலுள்ள புள்ளமங்கை பசுபதி கோயிலில் உள்ள கல்வெட்டொன்றில், புள்ளமங்கலத்து மகாசபையார் இத்திருக்கோயிலில் இரண்டு நந்தாவிளக்குகள் எரிப்பதற்காக எட்டுமா நிலம் கொடை அளித்த செய்தி உள்ளது.[53]

---

51. வரலாறு, பிப்ருவரி 1994, ப.25.
52. வரலாறு, பிப்ருவரி 1994, ப.19.
53. வரலாறு, பிப்ருவரி 1994, ப.34.

அங்குள்ள மற்றொரு கல்வெட்டில், திரு இளங்கோயில் கணப் பெருமக்கள் கூத்தபெருமாளுக்குப் படிமத்தை நிறுவி' அதற்கான திரு அமுதுப் படையலுக்கு நிலக்கொடை அளித்த செய்தி காணப்படுகிறது.[54]

கோயிலில் பூசைகள் நடக்க நிலத்தானங்கள் வழங்கப் பட்டன. மண், பொன் இரண்டில் முதலீடு செய்வதில், மண்ணில் முதலீடு செய்வதே தலைசிறந்தது. அதிலிருந்து விளைபொருள்கள் நேரடியாகக் கோயில் நிருவாகத்திற்குப் பயன்படும் என்று எண்ணினர்.

ஆகவே பொன்னாகத் தானமளித்தவர்கள் கூட அப் பொன்னால் நிலத்தை வாங்கிக் கோயிலுக்கு விட்டிருக் கின்றனர். விஜயநந்திவர்மன் காலத்து (கி.பி. 825) திருச் சானூர்ப் பத்மாவதி அம்மன் கோயிலில் உள்ள கல்வெட் டொன்றில், அங்குள்ள இளங்கோயில் பெருமானுக்குச் சோழ நாட்டுச் சோழரான உலகப்பெருமானார் என்னும் அரசியல் அதிகாரி ஒரு திருவிளக்கு வைத்து, அதற்கு முதலாக 30 கழஞ்சு பொற் காசுகள் தானம் அளித்தார். ஊர்ச்சபையார் அக் காசுக்குக் கடுக்குப்பட்டி என்னும் நிலத்தை ஈடாகக் கொண்டு, அதன் வருவாயிலிருந்து கோயிலுக்குத் திருவிளக்கு வைத்த செய்தி கூறப்படுகிறது.[55] அல்லது அப்பொன்னை வேறு சிலரிடம் ஒப்படைத்து அதனால் வரும் வட்டி கோயிலுக்குக் கிடைக்குமாறு செய்தனர். கோயிலில் இறைவன் படை யலுக்கும், வழிபாட்டுப் பொருள்களுக்கும், கோயில் பணி யாளர் ஊதியத்திற்கும் உதவும் பொருட்டு நிலக்கொடை வழங்கப்பட்டது. கோயில் விளக்கெரிக்க பொன்னும், ஆடு, மாடு முதலிய விலங்குகளும் தானமாக அளிக்கப்பட்டன. கொலை பாவம் நீங்கவும், இறந்தவர் நினைவாகவும் விளக் கெரிக்க தானங்கள் அளிக்கப்பட்டன. அரசர்கள் மட்டு மல்லாது அரசகுல மகளிரும் தானங்கள் வழங்கினர்.

திருச்சி உய்யக்கொண்டான் திருமலைத் திருக்கோயில் தருமபுர ஆதீனத்தின் ஆளுகையில் உள்ளது. இங்குள்ள முதலாம் இராசேந்திரனின் பத்தாம் ஆட்சியாண்டு (கி.பி.

---

54. வரலாறு, பிப்ருவரி 1994, ப. 35.
55. தென்னிந்தியத் தமிழ்ச் சாசனங்கள், ப.7.

1022) கல்வெட்டொன்று, முதலாம் இராசேந்திரனின் பிறந்த நாள் நட்சத்திரமான திருவாதிரையன்று திங்கள் தோறும் இறைவர்க்குப் பஞ்சகவ்ய முழுக்காட்டு செய்யக் கொடை அளித்தார். மடமுடைய தாயன் திருப்பராயன் ஆடல்விடங் கப்பிடாரன் 225 காசு அளித்தார். இப்பொருளைக் கொண்டு மூவரிடமிருந்து நிலம் விலைக்குப் பெறப்பட்டது. இவ்விறை கொண்டு கொடை நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ள லாம்.[56] இவ்வாறு திருக்கோயில் கைங்கர்யத்திற்காக நிலத் தானங்கள் அளிக்கப்பட்டன.

திருக்கோயிலில் விளக்கெரிக்கத் தானம் வழங்குதலே பல்லவர் காலத்தில் மிகச் சிறந்த தானமாகக் கருதப்பட்டது. இத்தானம் அரசர் முதல் மக்கள் வரை செய்யக்கூடிய தான மாகவும் இருந்தது. கோயிலில் விளக்கேற்றினால் தாங்கள் செய்த பாவம் தீரும் என்னும் ஆழ்ந்த நம்பிக்கை மக்களிடத் தில் இருந்தது. அதனால் தான் கிடைக்கின்ற தானக் கல் வெட்டுகளில் பெரும்பாலானவை விளக்கெரிக்க அளிக்கப் பெற்ற தானங்களைக் குறிப்பனவாகவே உள்ளன. நிலம்' பொன், ஆடுகள், மாடுகள் ஆகியவற்றைக் கோயிலுக்கும் தானமாக அளித்துத் தங்குதடையின்றித் திருக்கோயில்களில் நந்தாவிளக்கு எரிய அக்கால மக்கள் ஏற்பாடு செய்தனர்.

விளக்கெரிக்க நன்கொடை

கி.பி. 1162 (இரண்டாம் இராஜராஜன் காலம்) திருச்சி அருகிலுள்ள திருப்பைஞ்ஞீலிக் கல்வெட்டொன்றில் இக் கோயிலில் சந்தி விளக்கொன்று எரிப்பதற்காகக் கோயில் சிவபிராமணரிடம், நடுவில் நாட்டு இராசராச வளநாட்டுப் பனம்பாக்கமான சோழ குலவல நல்லூரைச் சேர்ந்த எரிகிழான் வேளான் ஆட்கொண்ட வில்லி என்பான் ஏழு காசுகள் கொடையளித்தான்.[57]

கருத்திட்டைக்குடி கோயில் கல்வெட்டில் முதலாம் ராஜ ராஜனின் பெருந்தரத்து அலுவலரில் ஒருவரான வளவன் சூற்றி இக்கோயிலில் ஆடவல்லாருக்குரிய நம்பிராட்டியாக மகா பரமேசுவரியை எழுந்தருளுவித்து, அவ்வம்மையின் திருமுன்

56. வரலாறு, ஆகஸ்டு 1993, ப.42.
57. வரலாறு, ஆகஸ்டு 1993, ப.20.

'ஸ்ரீராஜராஜன்' என்ற பெயருடைய சந்திவிளக்கொன்று என்றென்றும் எரியும் பொருட்டுக் கோயில் ஆட்சியரிடம் பன்னிரண்டு காசுகள் தந்தார்.[58]

திருச்சியை அடுத்த குழுமணி நாகநாத சுவாமி கோயில் கல்வெட்டொன்றில், ஒற்றி மதுராந்தகனாயின வீரசோழ இளங்கோ வேளாளர்க்கு விண்ணப்பம் செய்து, உறத்தூர்க் கூற்றதுப் புதுக்குடியைச் சேர்ந்த மயிலை திண்டனான செம்பியன் உறத்தூர் நாட்டுக்கோன் என்பார் இக்கோயில் இறைவர்க்குத் திருஅமுது படைக்கவும், நந்தாவிளக்கொன்று எரிக்கவும் நிலக்கொடை அளித்த செய்தி உள்ளது.[59] சுந்தர சோழன் எட்டாம் ஆட்சியாண்டான கி.பி. 961 இல் இக்கல் வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது.

விலங்குகள்

உய்யக்கொண்டான் திருமலைத் திருக்கோயிலில் உள்ள கல்வெட்டொன்றில், நந்தாவிளக்கொன்று எரிக்க இரண்டாம் இராசேந்திர சோழரின் மகளார் மதுராந்தகியாரின் தமக்கையார் தொண்ணூறு ஆடுகள் கொடையளித்த செய்தி குறிக்கப் பட்டுள்ளது.[60] இக்கல்வெட்டு கி பி. 1059இல் எடுக்கப்பட்ட தாகும்.

தஞ்சாவூர் புள்ளமங்கை பசுபதி கோயில் கல்வெட் டொன்றில், வாச்சியன் நாரியன் காடன் இத்திருக்கோயிலில் நந்தாவிளக்கொன்று எரிப்பதற்காக ஸ்ரீகண்ட மங்கலத்தில் நிலக்கொடை அளித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கல்வெட்டு 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.[61]

நினைவாக நிவந்தம்

கருத்திட்டைக்குடி வசிஷ்டேசுவரர் கோயில் கல்வெட்டில், சிவிகையார் சேரியைச் சேர்ந்த பெண்டாட்டி பொய்யிலி என்பார் தம் மகன் அரையன் வீரசோழன் நினைவாக இக் கோயிலில் நந்தா விளக்கொன்று எரிக்கக் கொடையளித்தாள்.[62] இக்கல்வெட்டு உத்தமசோழன் (கி. பி. 980) காலத்தது.

---

58. வரலாறு, ஆகஸ்டு 1993, ப.35.
59. வரலாறு, ஆகஸ்டு 1993, ப.39.
60. வரலாறு, ஆகஸ்டு 1993, ப.33.
61. வரலாறு, பிப்ருவரி 1994, ப.36.
62. வரலாறு, ஆகஸ்டு 1993, ப.32.

தெரியாமல் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம்

கீழப்பழுவூர்க் கல்வெட்டொன்றினால் இனநாட்டாருக்கிடையே விபத்தொன்றால் நேர்ந்த பகையையும் அது தீர்ந்த வகையையும் அறியமுடிகின்றது.

முதலாம் குலோத்துங்க சோழனின் முப்பத்தெட்டாம் ஆட்சியாண்டில் சூரிமான் நாட்டாரைச் சேர்ந்த சூரிமான் அரையன் ஒத்தனான வேசாலி நாடாழ்வானும், பள்ளிநாட்டாரைச் சேர்ந்த தழும்பனூர் பட்டன் தேவனான திருச்சிற்றம்பலனும் கோல் எறிந்து கொண்டிருந்த வேளையில், கை தவறுதலாகக் கோல்பட்டு பட்டன் தேவன் இறந்துவிட்டான். இச்செயல் சூரிமான்மேல், பள்ளிநாட்டார்க்குப் பெரும் பகையை மூட்டிவிட்டது. இப்பகையைத் தீர்க்க இறந்தவன் நினைவாக இக்கோயிலில் நந்தாவிளக்கொன்று எரிக்குமாறு சூரிமான் நாட்டார் கூற, அதைப் பள்ளி நாட்டார் ஏற்றுக்கொண்டமையால், வேசாலி நாடாழ்வான் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் விதத்தில் இக்கோயில் விளக்கெரிக்க முப்பத்திரண்டு பசுக்களைக் கோயிலாரிடம் கொடையாகத் தந்தான்.[63] கி. பி 1127இல் விக்கிரசோழன் ஆட்சிக்காலத்ததாகும் இக் கல்வெட்டு.

மற்றொரு கல்வெட்டில் (உத்தமசோழர் காலம் கி.பி. 981) மதுராந்தகன் கண்டராதித்தர் இக்கோயில் இறைவர்க்கு நாள்தோறும் உழக்கு நெய்கொண்டு நந்தாவிளக்கொன்று எரிக்க 90 ஆடுகள் கொடையாகக் கொடுத்த செய்தி உள்ளது.[64]

இறந்தவன் நினைவு

கீழப்பழுவூரிலுள்ள மற்றொரு கல்வெட்டில் (உத்தம சோழன் கி. பி. 981) மாதேவடிகளும், முதுகுடிவாழ் வீரகலி அரங்கனும் சண்டையிட வீரகலி அரங்கன் இறந்துவிட்டான். இறந்தவன் நினைவாகத் திருவாலந்துறை மகாதேவர்க்கு நந்தாவிளக்கொன்று எரிக்கப் பழுவேட்டரையர் குமரன் மதுராந்தகர் தொண்ணூறு ஆடுகளைக் கொடையளித்தார்.[65]

---

63. வரலாறு, பிப்ருவரி 1994, பக்.37,38.
64. வரலாறு, பிப்ருவரி 1994, பக்.39.
65. வரலாறு, பிப்ருவரி 1994, ப.40.

தோப்பு தானம்

கிழப்பழலூர்க் கல்வெட்டொன்றில் அரசு நிலையிட்ட ரெங்கப்ப மழவராயர் பண்டாரத்தார் திருப்பழலூர் யோகவனீசுவர சுவாமிக்கு உச்சிக் காலத்தில் திருவிளக்கொன்று எரிக்க ஏலாக்குறிச்சியில் இலுப்பை, மா மற்றும் மாவரை, மரவடை அடங்கிய தோப்பொன்றைக் கொடையாகத் தந்தார்.[66] இக்கல்வெட்டு 18 அல்லது 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

நந்தவனம் அமைக்க நன்கொடை

கிழப்பழுவூர் ஆலந்துறையார் திருக்கோயில் கல்வெட்டொன்றில், இராசேந்திர சோழ மூவேந்த வேளான் என்னும் அரசியல் அதிகாரி, சிறுபழுவூர்ச் சபையாரிடம் அன்றாடு நற்காசுகள் இரண்டினுக்கு நிலமொன்றை இறையிலித் தேவதானமாக விலைக்குப் பெற்று, இத்திருக்கோயில் இறைவனுக்குத் திருநந்தவனம் அமைக்கக் கொடை அளித்த செய்தி உள்ளது. இக்கல்வெட்டு முதலாம் குலோத்துங்க சோழன் (கி. பி. 1120) காலத்ததாகும்.[67]

ஆபரணங்கள்

முதலாம் ராஜராஜனின் தமக்கையாரும், கீழைச்சாளுக்கிய மன்னனான வல்லவரையன் வந்தியத்தேவனுக்கு மனைவியாருமான குந்தவையார் தஞ்சைப் பெரியகோயிலில் எழுந்தருளித்த திருமேனிகளுக்குக் கொடுத்த அணிகலன்களைப் பற்றிய செய்தி தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டில் உள்ளது. உமா பரமேசுவரியார் திருமேனிக்கு மகுடம் 1, வாளி 2, உழுத்து 2, மாலை 1, வாகுவலயம் 2, சந்தம் 1, கைப்பொட்டு 2, சூடகம் 2 ஆகிய அணிகலன்களைக் கொடுத்துள்ளார்.[68]

திருமலை நாயக்கர் (1623—1659)

திருவிளையாடல்களில் சிலவற்றை நடத்திக்காட்ட எண்ணி அவ்வவற்றிற்கு வேண்டிய திருவாபரணங்கள் செய்து

66. வரலாறு, பிப்ருவரி 1994, ப.41.
67. வரலாறு பிப்ருவரி 1994, பக்.36,37.
68. தென்னிந்தியச் சாசனங்கள், பக்.80,81.

வைத்து, அவ்வாறே அவ்விழாக்களை மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் நடத்தும்படி செய்தார்.

இரத்தினத்தாலும், நன்முத்தாலும் செய்யப்பெற்ற குதிரைவாகனத்தலை முடிப்பாகை, திருமலைநாயக்கர் அணிந்திருந்தது போன்ற நாயக்கமார் ரத்தினக்கொண்டை, திருக்கலியாண முடி, நீலநாயகப் பதக்கம், குதிரை இரத்தின அங்கவடி, வீர கண்டை, இருதலைப்பட்சி பதக்கம், இரத்தின சூரிய காந்திப்பூ இரத்தின வெண்டயம், நாகர் ஒட்டியாணம், குசாந்தரப் பதக்கம், துரைப்பதக்கம், சங்கு சங்கரப் பதக்கம், இரத்தினச் செங்கோல், பள்ளியறைக் காளாஞ்சி, சொர்ணக் கும்பா, பவளக்கொடி மாலை ஆகியவை நாயக்கர் செய்து கொடுத்தவற்றுள் இன்றுள்ள சிலவாகும்.[69]

இரத்தின கெண்டி

வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர் இராக்கியப்ப முதலியார் தெரு, 4ஆம் எண் வீட்டைச் சேர்ந்த சுப்பராய முதலியார் குமாரர் ஆறுமுக முதலியார் மூவாயிரம் ரூபாய் மதிப்புள்ள இரத்தின கெண்டி ஒன்று அளித்தார்.[70]

வீடுகள்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வீடுகளைக் கோயிலுக்கு எழுதி வைக்கும் வழக்கம் ஏற்பட்டது. கபாலீசுவரர் கோயில் முதல்நாள் கொடி நாள் காலை, மாலை திருவிழா நடத்தவும், நாள்தோறும் அர்த்த ஜாம பூஜையில் மிளகமுது படைத்துத் தேசாந்திரிகளுக்கு விநியோகிக்க, ஆறுமுக முதலியார் என்பவர் தன் தோட்டத்தையும் வீட்டையும் தானமளித்தார்.[71] இக்கல்வெட்டின் காலம் கி. பி. 1896 ஆகும். இக்கல்வெட்டில் இத்தருமத்தைக் காக்க மகேசுவரரோ, இத்தருமத்தைத் தவறான வழியில் பயன்படுத்தினால் தண்டனையோ, சாபமோ குறிக்கப்படவில்லை.

---

69. மதுரை நாயக்கர் வரலாறு, ப. 205.
70. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்,
தொடர் எண் 1967/116.
71. தொடர் எண் 1967/116.

சென்னை பெரம்பூர் அனந்தீசுவரர் கோயிலில் உள்ள கி. பி. 1858ஆம் ஆண்டுக் கல்வெட்டு, மணலூர் வேங்குழலி யார் மனைவி அமிர்தம்மாள் என்பாள் பெரம்பூரில் அனந்தீசுவர சமேத ஸ்ரீஆனந்தவல்லி அம்மனுக்குக் கோயில் கட்டுவித்ததையும் அதன் கைங்கர்யத்துக்காக ஒரு வீட்டைக் கொடையாகக் கொடுத்ததையும் குறிக்கிறது[72] இக்கல் வெட்டில் இத்தருமத்தை அபகரிக்க நினைப்பவருக்குச் சாபம் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்த வீட்டை யாதொருவர் அபகரிக்க நினைத்தால் அவர் காசியிலே காராம்பசுவைக் கொலை செய்த பாவத்தில் போகக் கடவர். இப்படிக்கு என் மனோபூர்வமா எழுதி வைத்த சிலாசாசனம் என்று சாபமிடப்பட்டுள்ளது. பழைய கல் வெட்டுகளில் பன்மகேசுவரர் ரட்சை என்றே குறிப்பிடுவர். கால மாற்றத்தால் தவறு செய்பவர்களை அச்சுறுத்திச் சபிக்கும் வழக்கம் ஏற்பட்டது. நுங்கம்பாக்கம் அகஸ்தீசுவர சுவாமி கோயில் கல்வெட்டில், 'ஒருவேளை யாராகிலும் இந்தத் தர்மபரிபாலனத்துக்கு விரோதமாயாவது இந்த சாசன விபரத்துக்கு மாறுபாடாவது நடந்தால் அவர்கள் கெங்கைக்கரையில் கோஅத்தி பண்ணின தோஷமும் யதிலும் கொடுமையான பாவத்துக்குள்ளானவர்களாய் யென் யென்றைக்கும் மீளாத நரகத்தில் போடப்பட்டுத் துன்பப் படக் கடவராக என்று குறிப்பிடப்பட்டுள்ளது[73]

சைதாப்பேட்டை காரணீசுவரர் கோயிலில் உள்ள கல் வெட்டு (காலம் 1887) சைதாப்பேட்டையைச் சார்ந்த காரணி கிராமத்திலிருக்கும் வ.. ஆறுமுக முதலியார் குமாரர் சுப்பராய முதலியார் தன் பங்களாவைக் காரணீசுவரர் கோயி லுக்குக் கொடை அளித்ததையும், அப்பங்களாவின் குடி கூலியிலிருந்து அக்கோயிலுக்கும், மற்றும் செல்வவிநாயகர், ஞானவிநாயகர், சுப்பிரமணியர், இராமசுவாமி ஆலயங் களுக்கும் நெய்விளக்குத் தர்மம் அளித்து வந்ததையும் குறிக் கிறது.[74] இந்தத் தர்மத்திற்கு வில்லங்கனம் செய்யப்பட்ட

---

72. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள், தொடர் எண் 1967/183.

73. ,, தொடர் எண் 1967/193.

74. ,, தொடர் எண் 1967/205

வர்கள் கவர்ன்மென்டாரால் தண்டிக்கப்பட்டு மீளா நரகத்திற்கும் ஆளாவார்கள் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

சைதாப்பேட்டை காரணி கிராமத்தில் உள்ள சித்திபுத்தி விநாயகருக்கு நித்தியபூஜை தரும கைங்கர்யத்துக்கு அதே ஊரைச் சேர்ந்த தருமலிங்க முதலியாரின் மனைவி சுந்தரம்மாள் (கி. பி. 1884) எழுதி வைத்த வீடு, கடை இவற்றினால் வரும் குடிக்கூலியைக் கோயிலுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று எழுதி வைத்துள்ளார்.[75] இப்படி தருமத்தை நிருவேற்றிக் கொண்டுவருகிறவர்களில் எவர்களாவது விருத்தமாக நடத்தினால் சிவதுரோகத்தில் போகக்கடவர்கள் என்றும் வெட்டப்பட்டுள்ளது.

ராயபுரம் ஆதம்சாயபு தெருவில் உள்ள அங்காள பரமேசுவரி அம்மன் கோயிலில் உள்ள கல்வெட்டு (கி. பி. 1818) கோயில் கட்டி, கும்பாபிஷேகம் செய்து சொத்துக்கள் வைக்கப்பட்டதைக் குறிக்கிறது.[76]

அந்தச் சொத்துக்களைத் தாங்கள் வேறொரு வழியில் அபகரிக்க நினைப்பார்களாகில் மஹாபாதங்களுக்குக்கேதுவாகக் கடவர் என்று இக்கல்வெட்டு முடிகிறது.

சென்னை தங்கசாலைத் தெருவில் உள்ள செங்கழு நீர் விநாயகர் கோயிலில் உள்ள கல்வெட்டு (கி. பி. 1846) இக்கோயிலுக்கு வீடுமனை கடைகள் ஆகிய தர்மங்கள் செய்ததைக் குறிக்கிறது.[77] யாதாமொருவர் விகாதம் பண்ணுவார்களேயானால் காசியில் கோவதை செய்த தோஷத்தில் போகக்கடவர்கள் என்ற குறிப்பு உள்ளது.

இவ்வாறாகச் சென்ற நூற்றாண்டில் கோயில்களுக்கு வீடுகள் தானமாக அளிக்கப்பட்டன.

அறக்கட்டளைகள் நிறுவுதல்

முற்காலத்தில் மக்கள் கோயில் காரியங்களுக்குத் தேவையான பொன், பொருள் போன்றவற்றைத் தந்தனர். கோயிலிலிருந்து எந்தப் பொருளையும் எடுத்துச் செல்லமாட்டார்கள்.

75. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்,
,, தொடர் எண் 1967/206.

76. ,, தொடர் எண் 1967/234.

77. ,, தொடர் எண் 1967/226.

திருநீற்றைக் கூடச் சிறிதளவே வாங்குவர். கோயிலை வலம் வரும்போது, கோயில் காவல் தெய்வமான சண்டேசுவரர் அருகில் சென்று, இரு கைகளையும் தட்டிக் கோயிலில் இருந்து எதையும் எடுத்துச் செல்லவில்லை என்று காட்டிவிட்டுச் செல்வர். சிவன் சொத்துக் குலநாசம் என்று கருதினர். அதனால் தான் மயிலாப்பூர் முழுமையும் கபாலீசுவரருக்கும், ஆழ்வார்பேட்டை முழுவதும் ஆதிகேசவப்பெருமாளுக்கும், சைதாப்பேட்டை முழுவதும் காரணீசுவரருக்கும் சொந்தமாக இருந்தன. ஆனால் இப்போது கடவுளிடத்தில் பக்தி இருந்தும் சிலருக்குப் பயம் குறைந்த காரணத்தால், கோயில் சொத்துகள் தனியார் சொத்துகளாக மாறின. திருவீதிவுலாச் செல்லும் தெய்வத் திருவுருவங்கள் வெளிநாடுகளுக்கு விமானங்களில் பறந்து சென்றன. அழகிய ஆபரணங்கள் அழிக்கப்பட்டு, ஆணிப்பொன்னாக மாற்றப்பட்டன. கும்பாபிஷேகம் என்ற பெயரில், கோயிலில் புதைந்திருந்த பொன்னும் மணியும் அகழ்ந்தெடுக்கப்பட்டு அக்கிரமக்காரர்களின் கையிலே சென்று சேர்ந்தன. கோயில் நிலம், வீடு போன்றவைகளிலிருந்து வரும் வருவாய் சரியான முறையில் கோயில்களுக்குக் கிடைக்காத நிலை ஏற்பட்டது அதனால், இப்போது மக்கள் கோயில் களுக்கு அறக்கட்டளையாக ஒரு நிதி ஏற்படுத்தி, அதை வங்கி யில் நீண்டகாலச் சேமிப்புத்திட்டத்தில் செலுத்தி, அதிலிருந்து வரும் வட்டித்தொகை கோயில் பணிகளுக்கு உதவுகின்ற வகையில் வைக்கின்றனர்.

அரசின் ஒருகாலப் பூஜைத் திட்டம்

இப்போது தமிழகத்திலுள்ள இரண்டாயிரத்திற்கும் (2160) மேற்பட்ட பழமையான கோயில்களில், முதலமைச்சர் புரட்சித்தலைவியின் ஒருகாலப் பூஜைத் திட்டத்தினால், நாள் தோறும் உச்சிக்கால பூஜை நடத்தப்படுகிறது. கோயில்களில் விளக்கெரிக்கப்படுகிறது. பெரும்பாலான பழைய கோயில் களுக்கு நிலமாகச் சொத்துக்கள் இருந்தும், குத்தகைதாரர் களிடமிருந்து சரியாக வாடகை வராததால் கோயிலில் விளக்குக் கூட எரிக்க முடியாத நிலையில் இருந்தது. பல கோயில்கள் திருவிழாக் காலங்களைத் தவிர மற்றக் காலங் களிலே மூடியே இருந்தன. இந்த நிலையைக் கண்டு மனம் பொறுக்காமல் 1992இல் மாண்புமிகு முதலமைச்சர்

ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஒருகாலப் பூஜைத் திட்டத்தைக் கொண்டுவந்தார். இந்தத் திட்டத்தின் நோக்கம், ஒருகாலப் பூஜையாவது அதாவது உச்சிக்காலப் பூஜையாவது நடக்க வேண்டும் என்பது தான். இத்திட்டத்தின்படி கோயில்கள் ஒவ்வொன்றும் ரூ 25,000/—திரட்டவேண்டும். அரசும் பணம் போட்டு நிதி நிறுவி அதன் மூலம் பூஜை நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்பதேயாகும். முதலில் இத்திட்டத்திற்கு வரவேற்பு மிகக் குறைவாக இருந்தது. பிறகு அரசு இத் தொகையை ரூ 12,500/— ஆகக் குறைத்து, மீதித் தொகையை முதலமைச்சரின் கோயில் நிவாரண நிதியிலிருந்து அளித்தது. அப்போது 10 கோயில்களே இத்திட்டத்தில் கலந்து கொண்டன. பின்னர் அரசு அத்தொகையை ரூ 6250/—ஆகக் குறைத்தது இப்படிக் குறைந்த பிறகு இத்திட்டத்தின் கீழ் 431 கோயில்கள் பயன் அடைந்தன. பின்னர் அரசு ரூ 2500 — ஆகக் குறைத்ததனால் இப்போது 2160 கோயில்கள் பயன்பெறுகின்றன. இக்கோயில்களுக்காக அரசு ரூ 10 கோடிக்கு நிதி ஏற்படுத்தியுள்ளது. மேலும் 2500 கோயில்களை இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவர அரசு ரூ 11. 25 கோடிக்கு நிதி ஒதுக்கத் திட்டமிட்டுள்ளது.[78]

கோயில் வருவாய்

அரசு மான்யம், அறக்கட்டளைகள் இவை தவிர உண்டியல்களில் பக்தர்கள் போடும் காணிக்கைகள், நுழைவுக் கட்டணம், அருச்சனைக் கட்டணம், அபிஷேகக் கட்டணம், காணிக்கைக் கட்டணம் ஆகியவையும் கோயில்களுக்கு வருவாய் வரும் வாயில்களாக இக்காலத்தில் இருக்கின்றன. மற்றும் பிரசாதக் கடை ஏலம் விடுதல், காலணிக் கடை ஏலம் விடுதல், காணிக்கைப் பொருள்களை ஏலம் விடுதல் ஆகியவற்றின் மூலமாகவும் கோயில்களுக்கு வருவாய் வருகின்றது.

தமிழ்நாட்டில் உண்டியல் வருவாய் அதிகமாக வரும் திருக்கோயிலாகப் பழனி ஆண்டவர் கோயில் முதல் இடம் வகிக்கின்றது.

பூசை செய்தலும், வழிபடும் உரிமைகளும்

ஆதியில் கோயில்களில் அந்தணர் அல்லாத மக்களே பூசாரி என்னும் பெயரிலும், பண்டாரம் என்னும் பெயரிலும்

78. The Hindu, 9—8—94, p. 5

பூசைகளைச் செய்து வந்தனர். ஆரியர் வருகையும், கோயில்களில் ஆரியக் கடவுளர் இடம் பெற்றமையும், வழி பாட்டு முறையில் மாற்றத்தை ஏற்படுத்தின. அரசர்களும், தளபதிகளும் அந்தணர்களையே அர்ச்சகர்களாக நியமித்தனர். ராஜராஜன், தஞ்சைப் பெரிய கோயிலில் பூசைகள் செய்ய வடநாட்டு அந்தணர்களை அழைத்து வந்தான். திருமலை நாயக்கனின் படைத்தளபதியான தளவாய் இராமப்பையர் என்னும் தெலுங்குப்பிராமணன் பழனி ஆண்டவர் கோயிலில் பண்டாரங்களிடம் இருந்த உரிமையைப் பறித்து அந்தணர் களுக்கு அளித்தான்.

காமிகாமம் என்னும் நூல் கோயிலில் யார்யார் எங்கிருந்து வழிபடவேண்டும் என்பதைக் கூறுகிறது. ஆதிசைவர்கள் கருப்பக்கிருகத்திலிருந்தும், சிவதீட்சை பெற்ற அந்தணர் அந்தராளத்திலிருந்தும், வேதமோதும் அந்தணர் அர்த்த மண்டபத்திலிருந்தும், துறவிகள் முக மண்டபத்திலிருந்தும், அரசர், வணிகர் துவார மண்டபத்திலிருந்தும், தீட்சை பெற்ற நைட்டிக சூத்திரர் வெளித்துவார மண்டபத்தி லிருந்தும், சமயதீட்சை பெற்ற சூத்திரர் நிருத்த துவார மண்டபத்திலிருந்தும் இறைவனை வழிபட வேண்டும் என்று கூறுகிறது.[79]

இன்றும் பல அம்மன் கோயில்களில் அந்தணரல்லாத பூசாரிகளே பூசை செய்கின்றனர். மயிலை திருவள்ளுவர் கோயிலில் பண்டாரங்கள் பூசை செய்கின்றனர். வருவாய் அதிகமுள்ள அம்மன் கோயில்களில் பூசாரிகளை அகற்றிவிட்டு அந்தணர் நுழைந்து விடுகின்றனர். எடுத்துக்காட்டாக, திருவேற்காடு கருமாரியம்மன் கோயில், மயிலைக் கோல விழியம்மன் கோயில் ஆகியவற்றைக் கூறலாம். திருக்கழுக் குன்றம் வேதகிரீஸ்வரர் கோயிலில் பண்டாரங்கள் பூசை செய்யும் உரிமையிலிருந்து விலக்கப்பட்டு, கழுகுகளுக்கு அன்னமளிக்கும் பணியே இடப்பட்டது.

இப்போது பெரும்பான்மையான கோயில்களில் பூசை செய்யும் உரிமை அந்தணர்களுக்கே உரியதாக இருக்கிறது. இந்த நடைமுறையை இன்றும் சட்டத்தினால் மாற்ற இயல வில்லை.

---

79. நெல்லையப்பர் கோயில், ப. 211.

சிவன் கோயில்களில் அந்தணர்களுக்கும் வேதங்களுக்குமே முதலிடம் கொடுக்கப்படுகிறது. ஓதுவார்களுக்கும் திருமுறைகளுக்கும் இரண்டாம் இடமே அளிக்கப்படுகிறது.

சென்னை நங்கநல்லூர் ராஜராஜேசுவரி கோயில், சிதம்பரம் நடராசர் கோயில்களில் இன்றும் மேல் சட்டை அணியாமல் தான் ஆடவர் நுழைய வேண்டும் என்னும் முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

வைணவ ஆலயங்களை விட சிவாலயங்களில் சகிப்புத் தன்மையும், விட்டுக்கொடுக்கும் தன்மையும் அதிகமாகக் காணப்படுகிறது. சிவன் கோயில்களில் வைணவக் கடவுளரான இராம, லட்சுமணர், சீதை, அனுமன் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

இந்திய விடுதலைக்குப் பிறகு, கோயில்களில் பழைய வருணாசிரமப் பாகுபாடுகள், சாதிப் பிரிவினைகள் ஆகியவற்றுக்குப் பதிலாக, ஆட்சியாளர், அதிகாரிகள், செல்வர்கள், உழைக்கும் வர்க்கம் என்னும் புதிய பாகுபாடு தோன்றியுள்ளது. முதல் மூவரும் இப்போது கருப்பக்கிருகம் வரை செல்லுவதற்கு அனுமதியும், கோயில் மரியாதையைப் பெற்றுக் கொள்ளும் நிலையும் வழக்கில் இருக்கிறது. உழைக்கும் வர்க்கத்தினர் தொலைவில் இருந்தே ஆண்டவனை வணங்குகின்றனர். அவர்களும் சிறப்புத்தரிசனக் கட்டணம் செலுத்தினால் கருப்பக் கிருகம் வரை செல்லமுடியும். கோயில்களில் மரியாதை அதிகாரமுள்ளவர்களுக்கும் பணத்தைச் செலவிடுகின்றவர்களுக்குமே கிடைக்கின்றது.

1928க்கு முன் சுசீந்திரம் கோயிலில் பிராமணரல்லாதாருக்குத் திருநீறு கையில் வழங்கப்படுதல் இல்லை. அர்ச்சகர் திருநீற்றை ஒரு மேடையின் மீது தூக்கி எறிவார். பின்னர், பிராமணரல்லாதார் அதைக் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்னும் முறை இருந்தது. இம்முறை, மக்கள் போராடிய பிறகு விலக்கிக் கொள்ளப்பட்டு, ஒவ்வொருவருக்கும் கையில் வழங்கும் வழக்கம் ஏற்பட்டது.[80]

இப்போது, மதுரை மீனாட்சியம்மன் கோயில் போன்ற கோயில்களில் அர்ச்சகர் தட்டில் பணம்போடாவிட்டால்,

80. The Sucindram Temple, pp. 264, 265.

உள்ளங்கையில் வேகமாக அடித்துச் சிறிதளவு திருநீறோ, குங்குமமோ கொடுப்பர். தட்டில் போடப்படும் காசின் அளவைப் பொறுத்து, மலரிலிருந்து மலர்மாலைவரை பிரசாதமாக அளிக்கப்படும்.

ஆகவே, இக்காலத்தில் கோயிலில் வழிபடுவதற்கும் பிர சாதம் பெறுவதற்கும் பணமே இன்றியமையாததாக இருக் கிறது. ஆனால் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோயிலில் பங்காரு அடிகளார் முயற்சியால் அந்தணரல்லாதாரும், மகளிரும் பூசை செய்யும் உரிமையையும், யாகங்கள் செய்யும் உரிமையையும் பெற்றுள்ளனர்.

திருக்கோயில்கள் புகலிடம்

திருக்கோயில்கள் பெரிய மதில்களோடு பாதுகாப்பாகக் கட்டப்பட்டதால் போர்க்காலங்களில் பொதுமக்களுக்கும், படைவீரர்களுக்கும் புகலிடமாகவும் பதுங்குமிடமாகவும் பயன்பட்டிருக்கின்றன.

சுசீந்திரம் கோயிலுக்குப் பக்கத்திலுள்ள ஊர்களில் நாயக்க மன்னர்கள், படையெடுத்த காலத்திலும், நாஞ்சில் நாட்டின் மீது சோழர், பாண்டியர், வேணாட்டரசர் ஆகி யோர் படையெடுத்த காலங்களில் சுசீந்திரம் கோயில் பக்கத்து ஊர்களிலுள்ள மக்களுக்குப் புகலிடமாக விளங்கி யிருக்கிறது.[81]

கி. பி. 1672இல் பிரெஞ்சுக்காரர்களுக்கும் மூர் துருக்கர் களுக்குமிடையே சண்டை நடந்தபோது, பிரெஞ்சு சேனை யின் ஒருபகுதி மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலில் பதுங்கி இருந்தது.[82]

திருக்கோயில் சமய வாழ்க்கையின் மையம்

காலையில் பொழுது விடிந்ததிலிருந்து நள்ளிரவு வரை கோயில்கள் பொதுமக்கள் புழங்குமிடமாக இருந்து வருகின்றன. பொதுமக்கள் கடவுளை வணங்கியும், காணிக்கைகள் செலுத்தி யும் சென்றவண்ணமாக இருக்கின்றனர். ஏழைகளும், செல்

---

81. Ibid, p. 263.
82. ம. பாலசுப்பிரமண்ணிய முதலியார், திருமயிலையினைப் பற்றிய சரிதக் குறிப்புகள், பூம்பாவை, ப. 68.

வரும் எல்லோரும் ஏராளமாக வருகின்றனர். இக்காலத்தில் சுற்றுலாப் பயணிகளும், வெளிநாட்டவர்களும் கோயில்களுக்கு வருகின்றனர். நாள் வழிபாடு, வார வழிபாடு, திங்கள் விழாக்கள், ஆண்டுத்திருவிழா என்று பெரிய கோயில்கள் ஆண்டு முழுவதும் விழாக்கோலம் கொண்டிருக்கின்றன. சான்றாக, மயிலைக் கபாலீசுவரர் கோயில், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில் போன்ற கோயில்களைக் குறிப்பிடலாம்.

கலைக்களஞ்சியங்கள்

திருக்கோயில்களோடு தொடர்புடைய கலைகள் கோயில் கலைகள் என்றழைக்கப்படுகின்றன. கோயில்கள் அழகுக் கலைகள் நிறைந்த அற்புதப் பெட்டகங்களாகத் திகழ்கின்றன. கட்டிடக் கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை, உலோகச் சிற்பக் கலை, மரச்சிற்பக்கலை, இலக்கியக்கலை, இசைக்கலை, நாட்டியக் கலை, நாடகக்கலை ஆகிய நுண்கலைகளின் வளர்ப்புப் பண்ணைகளாகக் கோயில்கள் விளங்குகின்றன.

இயற்றமிழ் – இலக்கியங்கள்

இறைவனைப் போற்றி அடியார்கள் பாடிய பாடல்கள் இயற்றமிழால் ஆனவை. அவை பண்ணமைத்தும் பாடப் பெற்றன. சங்க இலக்கியங்களில் ஒன்றான திருமுருகாற்றுப் படை ஆறுபடை வீடுகளைப் பற்றிக் கூறுகின்றது. எட்டுத் தொகையில் ஒன்றான பரிபாடல் திருமால், முருகன் ஆகியோரின் திருப்புகழைப் பாடுகின்றது.

கோயில்களினால் தோன்றிய இலக்கியங்கள் தாம் மிக அதிகமாக நமக்குக் கிடைக்கின்றன. அவை பக்தி இலக்கியங்கள் என்றே போற்றப்படுகின்றன. சங்கக் காலத்திற்குப் பிறகு இன்று வரை தோன்றிய இலக்கியங்களில் பெரும்பாலானவை மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் அடிப்படையில் தோன்றியவை ஆகும்.

பன்னிரு திருமுறைகளும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும், வில்லிபாரதமும், கம்பராமாயணமும், பல்வேறு வகையான பிரபந்தங்களும் அடியார் பெருமை கூறும் பெரிய புராணமும், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம்,

போன்ற மொழிபெயர்ப்புப் புராணங்களும் எண்ணற்ற தலபுராணங்களும் திருப்புகழும், திருவருட்பாவும் தோன்றக் காரணமாயிருந்தவை திருக்கோயில்களே ஆகும்.

மதுரைச் சோமசுந்தரக் கடவுள் ஆலயத்தில் சங்கம் வைத்துத் தமிழாராய்ந்த செய்தி அனைவரும் அறிந்ததே. கம்பரும் திருவரங்கக் கோயிலிலே இராமாயணத்தை அரங்கேற்றினார். சென்ற நூற்றாண்டில் கங்காதரப் பாவலர் என்னும் புலவர் மயிலைக் கபாலீசுவரர் கோயிலில் ஆண்டு தோறும் தான் இயற்றிய நூல்களை அரங்கேற்றியிருக்கிறார்.

இவற்றால் கோயில்கள் இலக்கியக்கலை வளர்க்கும் இடங்களாக விளங்கியதை அறியலாம்.

இசைக்கலை

இசை மக்கள் உள்ளத்தை இசையவைக்கும் தன்மை உடையது. இறைவனே இசைவடிவாய் உள்ளான் என்றும் கூறுவர். ஏழிசையாய், இசைப் பயனாகி நிற்பவனும் இறைவனே என்று சுந்தரர் பாடுகின்றார்.[83] பண் அவனே என்று சம்பந்தர் பாடியுள்ளார்.[84] அரக்கனான இராவணனும் இறைவன் உள்ளத்தை நெகிழ்விக்க சாமவேதத்தை யாழின் துணையோடு கானமாகப் பொழிந்தான் என்று புராணக்கதைகள் கூறுகின்றன.

இறைவனை மலர்மாலை சூடியும், கோயில்களில் விளக்கேற்றியும் வழிபடுவதால் வரும் புண்ணியத்தைவிட இசைப் பாடல்களால் இறைவனைப் போற்றிப் புகழ்ந்தால், பெரும் புண்ணியம் கிடைக்கும் என்று அப்பர் பாடுகின்றார்.[85]

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் என்று சம்பந்தரும் புகழப் பெற்றார்.

திருக்கோயில்களில் தேவாரமும், திருவாசகமும், நாலாயிரத் திவ்வியப் பிரந்தமும், அடியார்களால் இசையோடு வாய்ப்பாட்டாகப் பாடப் பெற்றன. தேவாரப் பாடல்கள்

---

83 தேவாரம். 7:51:10.

84. தேவாரம். 1:11:4.

85. Early Temples of Tamilnadu, p. 211

திருப்பதிகங்கள் என்னும் பெயரில் பல்லவர் காலத்திலிருந்தே பாடப்பெற்றன. அதற்காக அரசர்கள் தானம் அளித்த செய்திகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

யாழிசையில் வல்ல அடியாரான திருநீலகண்ட யாழ்ப் பாணரைப் பெரியபுராணம் பாராட்டுகின்றது. கோயில்களில் ஹோமங்கள் செய்யும் போது வேதமந்திரங்கள் இசையுடன் ஓதப்பெற்றன. இப்போதும் ஓதப்பெறுகின்றன. கோயில் களில் மகாபாரதம் பாடுவதற்குத் தானமளித்த செய்தி பல்லவர் காலத்துக் கூரம் செப்பேடுகளில் குறிக்கப்படுகிறது.[86]

சிவன் கோயில்களில் பூசை நேரங்களில் தேவாரத் திருப்பதி கங்களும் மாணிக்கவாசகரின் திருச்சாழல், திருவெம்பாவை முதலிய பாடல்களும், அகோபிலம் போன்ற வைணவத் திருப்பதிகளில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களும் பாடு தற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

திருப்பதியம்

திருமுறைகளும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களும் தொகையாக 11ஆம் நூற்றாண்டில் நம்பியாண்டார் நம்பியாலும், நாதமுனிகளாலும் வகுக்கப் பெறுமுன்பே கோயில்களில் இவை ஓதப்பெற்றனவென்று பல கல்வெட்டுகள் கூறுகின்றன. முதற் பராந்தகன் காலத்திலேயே ஆத்தூர், லால்குடி கோயில்களில் நாள்தோறும் பூசை வேளைகளில் திருப்பதியம் ஓதுவதற்காக ஓதுவார்கள் நியமிக்கப்பட்டிருந் தனர். இதற்கும் முன்பாக, கோயில் பணியாளர்களில் திருப் பதியம் பாடுவதற்கான ஓதுவார்கள் நியமனம் பெற்றிருந்தனர் என்று பல்லவன் விஜய நந்திவர்மன் காலத்துத் திருவல்லம் கல்வெட்டு கூறுகிறது. திருவிடைவாசல் கல்வெட்டு ஒன்றில் ஒரு திருமுறையிலும் இதுவரை அகப்படாத சம்பந்தரது தேவாரப்பதிகம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. இது கோயில்கள் இசைத்தமிழைப் பாதுகாத்ததை நமக்கு உணர்த்து கிறது.[87]

அண்மையில் திருச்சியில் உள்ள தான்தோன்றீசுவரம் கோயிலில் கண்டெடுக்கப்பட்ட புதிய கல்வெட்டு ஒன்றில்,

86. Ibid., p. 212.
87. சோழர் கோயிற் பணிகள், பக். 149—151.

இக்கோயிலில் திருப்பதியம் பாடுவார் பயன்பாட்டிற்காகக் கோயிலுக்கு நில விற்பனை செய்த செய்தி குறிக்கப் பட்டுள்ளது.[88] இதன் காலம் பதினொன்றாம் நூற்றாண்டாகும்

தஞ்சைப் பெரிய கோயிலில் முதலாம் இராசராசன் திருப் பதியம் பாடுவதற்கு 48 பேர்களுக்கும், உடுக்கை, கொட்டி மத்தளம் இசைக்கும் இருவருக்குமாக ஐம்பது பேர்களுக்கு நாள்தோறும் கொடுக்கப்பட்டு வந்த நெல் முதலிய விவரங்கள் அடங்கிய தஞ்சைப் பெரிய கோயிலில் காணப்படும் கல்வெட்டி னால் நாளும் இன்னிசையால் திருப்பதியம் பாடச் செய்தான் இராஜராஜன் என்பதை அறியலாம்.[89]

கோயில்கள் இசைப்பாடல்களைப் பாடுவதற்காக நிய மிக்கப் பெற்ற பெண்கள் பதியிலார் என்றும், பெண்டுகள் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் நாட்டியமாடும் தேவதாசிகளைக் காட்டிலும் உயர்வாகக் கருதப்பட்டனர்[90] பாடுகின்றவர்கள் காந்தர்விகள் என அழைக்கப்பட்டனர். அவர்களுக்குப் பாடஞ்சொல்லிக் கொடுக்கிறவர்கள் காந்தரு வர் எனப்பட்டனர்.

காலப்போக்கில் சிவன் கோயில்களில் திருப்பதியம் பாடு வோர் ஓதுவார் எனப்பட்டனர் இக்காலத்தில் அர்ச்சகர் வேதமோதிய பிறகே, ஓதுவார் திருப்பதிகங்களைப் பாடு கின்றனர். இப்போது அளிக்கப்படும் ஊதியமும் குறைவு சில கோயில்களில் ஓதுவாரே அர்ச்சனைச் சீட்டுகளை விற்கும் பணியையும் செய்கிறார். அவர்களுக்காகச் சோழர் காலத்தில் ஏற்பட்ட நிவந்தங்கள் என்னவாயின என்பது தெரியவில்லை வேறு பக்கவாத்தியங்கள் எதுவுமில்லாமல் கைத்தாளம் ஒன்றின் துணையுடனே திருப்பதிகங்களைப் பாடிவருகின்றனர் இக்காலத்தில் அவர்களும் சங்கம் அமைத்து, வாரவழிபாடு மாத வழிபாடு என்னும் முறைகளை ஏற்படுத்திப் பல திருக் கோயில்களுக்குச் சென்று பாடிவருகின்றனர்.

வைணவக் கோயில்களில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத் திற்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. பிரபந்தம் பாடு

88. வரலாறு, பிப்ரவரி 1994, ப. 13.
89. தென்னிந்திய தமிழ்ச் சாசனங்கள், ப. 67.
90 Early Temples of Tamilnadu, PP. 212, 213.

வதற்குத் தனியாக அக்கோயில்களில் கலைஞர்கள் நியமிக்கப் படுவதில்லை. பட்டாச்சாரியர் அனைவரும் நாலாயிரம் தெரிந்தவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களே பாடு கிறார்கள்.

மேலும், ஆண்டுதோறும், பிரம்மோற்சவம் முடிந்த பிறகு, விடாய் ஆற்றித் திருவிழா நடக்கும் காலங்களில் கோயில் களில் இசைக்கலைஞர்களை வரவழைத்து, இசை நிகழ்ச்சிகள் நடத்துகிறார்கள். இவ்வாறு இக்காலத்தில் கோயில்களில் இசைக்கலை தொடர்ந்து போற்றப்பட்டு வருகிறது.

இசைக்கருவிகள்

திருக்கோயில்களில் நாள்வழிபாடுகளின் போதும், திரு விழாக்களின் போதும், இசைக்கருவிகள் பயன்படுத்தப்படு கின்றன. மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரைச்சங்கம், உவச்சுப்பறை, சகடை, கொட்டி மத்தளம், வீணை, கரடிகை என்னும் இசைக்கருவிகள் இராஜராஜேச் வரத்தில் பயன்படுத்தப்பட்டன.

தேவாரப் பாடல்களில் இடக்கை, உடுக்கை, கத்திரிகை, குடமுழா, குழல், கொடுகொட்டி, சிலம்பு, கைநரம்பு, கொட்டு, துத்திரி, துந்துபி, தாளம், பணிலம், பறை, முழா, யாழ், முரசு, தண்ணுமை, வீணை, சுரிசங்கு, துடி, மணி முதலிய இசைக்கருவிகள் குறிக்கப்படுகின்றன.[91]

ஆறுகாலப் பூசையிலும் கோயில்களில் இவ்விசைக்கருவிகள் இசைக்கப்பட்டன. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள உத்தமசோழன் செப்பேடுகள், காஞ்சி உலகளந்த பெருமாள் கோயிலில் இசைக்கருவிகளை ஒன்பது உவச்சர்கள் வாசித் தனர் என்று கூறுகிறது. தலைப்பறை, மத்தளி, கரடிகை, என்னும் தோல் கருவிகளும், தாளம், செகண்டிகை, கை மணி என்னும் கஞ்சக் கருவிகளும், காளம் என்னும் துளைக் கருவியும் இக்கோயிலில் பயன்படுத்தப்பட்டன.[92]

இக்காலத்தில் கோயில்களில் ராஜவாத்தியம் எனப்படும் பறைமேளம், காளையின் முதுகில் வைத்து அடிக்கப்படும் டமாரம், முரசு, பேரிகை, நகாரா, தவில், கஞ்சிரா, சூரிய

91. Ibid, P. 213.
92. வரலாறு, ஆகஸ்டு 1993, ப. 65.

பிரபை, சந்திரபிரபை என்னும் உடும்புத்தோலால் ஆன கருவிகள், உடுக்கை, சங்கு, தாரை, துந்துபி, கொம்பு, நாதசுரம், புல்லாங்குழல், வீணை, பாண்டு என்னும் மேல் நாட்டு இசைக்கருவி ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

பெரும்பாலான கோயில்களில் பறைமேளம், தவில், நாதசுரம் ஆகிய இசைக்கருவிகள் மட்டுமே பயன்படுத்தப்படு கின்றன. திருவிழாக்காலங்களில் பாண்டு வாத்தியம் பயன் படுத்தப்படுகின்றது. கோயில்களில் சங்கு பிடிக்கும் வழக்கம் நின்றுவிட்டது. தாரை, கொம்பு, துந்துபி போன்ற இசைக் கருவிகளும் வழக்கிழந்து வருகின்றன. நாதசுரமும், தவிலுமே இக்காலத்தில் கோயில்களில் இடம் பெற்றுள்ள இசைக்கருவி களாகும்.

நாட்டியக்கலை

மனிதன் அளவுக்கு மீறி மகிழ்ந்தபோது ஆடினான். அதுவே ஆடல் எனவும், கூத்து எனவும் பின்னாளில் ஒரு கலையாக மாறியது. சங்க இலக்கியங்களில் வெறியாடல், குரவைக் கூத்துகள் குறிக்கப்பெறுகின்றன. ஆற்றுப்படை நூல்களில் விறல்பட ஆடுகின்ற மகளிர் விறலியர் என அழைக்கப்பட்டனர்.

சங்கக் காலத்தில் இக்கலை பரத்தையரோடு தொடர்புற்றிருந்ததாகத் தெரியவில்லை. பாணர் என்ற கலைக்குடும்ப மகளிரே நாட்டியமாடி வந்தனர். சங்கம் மருவிய காலத்தில் ஆடற்கலை கணிகையருக்கு உரியதாக மாறியதைச் சிலப்பதி காரம் காட்டுகிறது. சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையில் அக்காலத்தில் இருந்த ஆடல் வகைகள் அனைத்தும் குறிக்கப் பெறுகின்றன. அப்போது அரண்மனையிலேயும், வெளியேயும் ஆடலரங்குகள் இருந்தன. கோயில்களுக்குள் அக்கலை இல்லை. பல்லவர் காலத்திலேதான் முதன் முதலாகக் கோயிலில் நாட்டியமாடும் மகளிரைப் பற்றிய குறிப்புவருகிறது. இரண் டாம் நந்திவர்ம பல்லவனின் (731—796) காஞ்சிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்றில் தேவதாசிகளைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.[93]

நர்த்தன விநாயகரும், நடராஜரும் அதிகமாகக் கோயில் களில் இடம்பெற்ற சோழர் காலத்தில் எல்லாக் கோயில்

93. Early Temples of Tamilnadu, P.214.

களிலும் நடனமாதர் நியமிக்கப்பட்டனர். பதியிலார் நானூறு பேர்களைக் கொணர்ந்து இராசராசேச்வரத்தை அடுத்து வடபுறத்திலும் தென்புறத்திலும் இவர்கட்காகத் தனித்தனி மனைகள் கட்டிக் கொடுத்தும், ஒவ்வொருவருக்கும் நூறு கலம் நெல்விளையும் ஒவ்வொரு வேலி நிலமும் தந்தும், அவர்களைக் கோயிற் பணியில் புகுத்தினான்.[94] இவர்கள் தளிச்சேரிப் பெண்டுகள் எனப்பட்டனர். கோயில் பணிகளான திருமெழுகிடல். கவரி வீசுதல் போன்ற பணிகளையும் செய்து வந்தனர்.

சோழர் காலத்தில் மதிக்கப்பெற்ற பதியிலார், நாயக்கர் காலத்தில் இழிவாக மதிக்கப்பட்டனர். அதனால் அவர்களுடைய நடனக்கலையும் இழிவாகக் கருதப்பட்டு வந்தது. தேவதாசி தடைச்சட்டம் வந்தபிறகு அந்த இழிநிலை மாறியது. அவர்களும் சமுதாயத்தில் இரண்டறக் கலந்துவிட்டனர். ஆனால் நடனக்கலை வளர்ச்சி குன்றியது.

கல்கியின் சிவகாமியின் சபதம் என்னும் வரலாற்று நாவலைப் படித்த தமிழ் மக்கள், அதன் தாக்கத்தினால், தங்கள் வீட்டுப் பெண்களுக்கு நாட்டியம் பயிற்றுவித்தனர், அரங்கேற்றம் செய்தனர். இன்று செல்வக் குடும்பத்தினருக்கு உரிய கலையாக நாட்டியக்கலை மாறிவிட்டது. ஆனால் கோயில்களில் அடியோடு இக்கலை ஒழிந்து விட்டது.

நாடகக்கலை

இராசராசன் தஞ்சையில் பெரிய கோயிலை எடுப்பித்ததன் பயனாகக் குடிகள் அரசன்பால் மிக்க அன்பு பாராட்டி, அச்சோழன் காலத்தில் வைகாசிப் பெரிய திருவிழாவில் 'இராசராசேச்வர நாடகம்' என்னும் ஒரு நாடகத்தை இக்கோயிலில் நடத்தி வந்தனர் இவன் மகன் முதல் இராசேந்திரனின் நான்காம் ஆட்சியாண்டில், இந்நாடகம் ஆடுவோனுக்கு ஆண்டுதோறும் 120 கல நெல் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது என்று அவன் காலக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.[95]

94. சோழர் கோயிற் பணிகள், பக். 68, 69.
95. ,, ப. 81.

பிற்காலத்தில் தஞ்சையை ஆண்ட இரண்டாம் சரபோசி மன்னர் மீது கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம்' என்ற நூலை ஆதாரமாகக் கொண்டு பெரிய கோயில் ஆண்டு விழாவில் அஷ்டக்கொடிச் சிறப்பன்று இக்குறவஞ்சி நாடகம் நடைபெற்றுவருகிறது.[96]

இக்காலத்தில் நாடகக்கலை கோயில்களில் நடத்தப்படவில்லை. ஆனால், இந்து சமய அறநிலையத் துறையின் ஆதரவினால், நாடகக்கலை புத்துயிர் பெறுகின்றது. திருக்கோயில் நிருவாக வாரியம் அளித்த மானியமான ரூ 5 லட்சத்தைப் பெற்று நாடகக் காவலர் மனோகர் 'திருநாவுக்கரசர்' என்னும் நாடகத்தைச் சென்னை மியூசிக் அகாதமியில் 24—8—94இல் அரங்கேற்றியது குறிப்பிடத்தக்கதாகும்.[97]

திருக்கோயில்களில் கல்வி

இந்தியாவில் கல்வி சமயத்தோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகப் பழங்காலத்தில் இருந்தது. எண்ணும் எழுத்தும் தமிழ்நாட்டில் இரு கண்களாகப் போற்றப்பட்டு வந்தன. எழுது பொருள்கள் அதிகமில்லாத அக்காலத்தில் கல்வி பெரிதும் கேள்விப்பட்டுப் பயிலும் முறையிலேயே இருந்தது. கல்வியின் அருமை பெருமைகளை உணர்ந்து வள்ளுவரும், கல்வி, கல்லாமை, கேள்வி என்னும் மூன்று அதிகாரங்களில் முப்பது குறள்களில் கல்வியின் மேன்மையை எடுத்துரைக்கின்றார்.

தொடக்கக் காலத்தில் கல்வி பயிற்றுவிக்கத் தனியாக நிறுவனங்கள் இல்லை. குருகுலக் கல்வி முறையே பெரிதும் பின்பற்றப்பட்டு வந்தது. அந்தணரும் அரச குலத்தவரும் கல்வி பயின்றனர். மற்றவர்கள் தங்கள் தொழிலுக்குத் தேவையான கல்வியையே பயின்றனர்.

பௌத்தர்களும், சமணர்களும் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த கி.பி. ஆறாம் நூற்றாண்டில் அவர்கள் தங்கியிருந்த பௌத்த, சமணப் பள்ளிகளில் சிறுபிள்ளைகளுக்கு அகர முதலியைச் சொல்லித் தந்தனர். அதுவே, பின்னாளில்

96. Ibid ப. 82.
97. The Hindu, August 25, 1994.

கல்வி கற்றுத் தரும் நிறுவனங்கள், பள்ளிக்கூடம் என்னும் பெயர் பெறக் காரணமாக இருந்தது.

ஆரியர் வழிபாட்டு முறை, தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்ற பல்லவர் காலத்தில், சமயச் சடங்குகளுக்கு வேதமே பெரிதும் பயன்பட்டு வந்தது. ஆகவே, வேதம் கற்பிக்கப் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. அப்பாடசாலைகளும் கோயில்களிலேயே ஏற்படுத்தப்பட்டன.

திருக்கோயில் சடங்குகளைச் செய்வதற்குத் தேவையான சமயக் கல்வியே அப்பாடசாலைகளில் போதிக்கப்பட்டு வந்தது. தமிழ் நாட்டில் கல்விச்சாலைகள் நிறைந்த ஊராகக் காஞ்சிபுரம் விளங்கியது. இதனைக் 'கல்வியிற் கரையிலாக் காஞ்சி' என்னும் தொடரால் அறியலாம்.

கடிகை

திருக்கோயில் வருவாயைக் கொண்டும், அரசர் அளித்த மானியங்களைக் கொண்டும் இக்கல்விச் சாலைகள் நடத்தப்பட்டன. பல்லவர் காலத்தில் வேத பாடசாலைகள் 'கடிகை' என்னும் பெயரில் அமைந்திருந்தன. காஞ்சியில் இந்து பல்கலைக்கழகம் ஒன்றும் இருந்தது. காஞ்சியில் இருந்த கடிகை ஒன்றைப்பற்றி மயூரசர்மனின் தாளகுண்டா கல்வெட்டு (கி. பி. 350) கூறுகின்றது.[98] காஞ்சிக் கடிகையில் பிரவசனம் என்னும் கடவுளைப் பற்றிய கல்வி போதிக்கப்பட்டு வந்தது. ராஜசிம்ம பல்லவன் காலம் வரை இக்கடிகை புகழ்பெற்று விளங்கியது. இக்கடிகையில் அந்தணர்கள் இருந்து பயின்று வந்தனர் என்பது இரண்டாம் நரசிம்மவர்மனின் வேலூர்ப் பாளைய செப்பேடுகளால் புலப்படுகின்றது. இருபிறப்பாளருக்காக இதைத் திருத்தியமைத்தான் நரசிம்மன் என்பதால் இக்கடிகையில் அந்தணரே பயின்று வந்தனர் என்பது தெளிவாகின்றது.

இந்தக் காஞ்சிக் கடிகையைத் தவிரப் பல்வேறு கடிகைகள் தமிழ்நாட்டில் இருந்ததைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கி.பி.எட்டாம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த நந்திவர்ம பல்லவ மல்லனின் திருவல்லம் கல்வெட்டிலும், பார்த்திவேந்திரவர்ம

98. Early Tamples of Tamilnadu, P.193.

னின் பிரம்மதேசக் கல்வெட்டுகளிலும் கடிகைகளைப் பற்றிய செய்திகள் உள்ளன. இவற்றால் வடஆர்க்காடு மாவட்டத்தில் சில கடிகைகள் இருந்தன என்பது தெளிவாகின்றது. காசக்குடிச் செப்பேடுகளும், கடிகைகளில் அந்தணர்களே இருந்தனர் என்று குறிப்பிடுகின்றன.

பல்லவர் காலத்தில், காஞ்சியில் இருந்த கடிகையில் நூற்றுக்கணக்கான அறிஞர்கள், வடமொழியில் கடவுள் பற்றிய கல்வியைப் பயின்று வந்தனர் என்பது புலப்படும்.

மடங்கள்

சைவ, வைணவக் கோயில்களின் உள்ளேயும், வெளியேயும் அருகிலுள்ள தெருக்களிலும் மடங்கள் என்னும் அமைப்புகள் ஏற்பட்டன. பெரியபுராணத்தில் மடங்கள் இருந்த செய்தி குறிக்கப்படுகிறது. சைவ மடங்களில் ஆகம இலக்கியங்களும், சைவ சித்தாந்தங்களும் பயிற்றுவிக்கப்பட்டன. பல்லவர் காலத்தில் காளாமுகர், காபாலிகர் போன்றோர் மடங்களை ஏற்படுத்தினர். துறவிகள் இவற்றின் தலைவராகப் பொறுப்பேற்றனர். வேதங்கள் மற்றும் சமயசம்பந்தமான கல்வி மடங்களில் போதிக்கப்பட்டு வந்தது. ஆதிசங்கரரும் காஞ்சியில் மடத்தை ஏற்படுத்தினார்.

அறிவு வளர்ச்சிக்கும் அறிஞர்களைப் போற்றுவதற்கும் மடங்கள் நிலைக்களனாயின அங்குச் சாத்திர வளர்ச்சிக்கான பாடங்கள் சொல்லப்பட்டு ஆராய்ச்சிகள் நடந்தன. புராணங்கள் ஓதப்பெற்றன. திருப்பதிகம் என்ற தேவாரத் திருமுறைகளைப் பண்ணுடன் பாடுவிப்பதற்குப் பயிற்சி கொடுக்கப் பெற்றது.[99]

சாலை

கல்வெட்டுகளில் சாலை என்னும் சொல் உணவளிக்கும் இடங்கள் அல்லது தங்கிப் படிக்கும் கல்வி நிலையங்களைக் குறிப்பிடுகின்றன. சாலை என்னும் இந்நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட தானங்கள் 'சாலாபோகம்' என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டன. காந்தளூர்ச் சாலை, பார்த்திபசேகரபுரம் சாலை ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

---

99. சோழற் கோயிற் பணிகள், ப. 159.

இவை தவிர ராஜராஜப் பெருஞ்சாலை, ராஜேந்திர சோழன் சாலை என்னும் கல்வி நிலையங்களும் சோழர் காலத்தில் விளங்கின. இவற்றில் சேருவதற்கு விதி முறைகளும், தகுதி களும் வரையறுக்கப்பட்டிருந்தன.[100]

கோயில்களில் உள்ள மண்டபங்களில் திருமுறைகளும், அறிவு நூல்களும், பயன்தரு கலைகளும் பயிலப்பெற்று வந்தன. வேதம், தருமசாத்திரம், புராண இதிகாசங்கள், வியாகரணம், யாப்பு, தர்க்கம், சோதிடம், வான நூல், மருத்துவம் முதலிய கலைகள் கற்பிக்கப்பட்டு வந்தன. செந் தலைக் கல்வெட்டொன்று, அல்லூர்ச் சுந்தரேசுவரர் கோயிலில் 'பாரதம்' வாசிக்கப் பட்டதைக் கூறுகின்றது. குடந்தை நாகேசுவரர் கோயிலில் 'பிராபகரம்' விளக்கப்பட்டது. திருவொற்றியூர்க் கோயிலில் 'வியாகரண தான வியாக்கியான மண்டபம்' ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதில் வியா கரணம், சோம சித்தாந்தம், பாணனீயம் ஆகியவை கற்பிக் கப்பட்டன. அதற்கு 60 வேலி நிலமுள்ள 'குலோத்துங்கன் காவனூர்' என்ற சிற்றூரைக் குலோத்துங்கன் இறையிலியாக் கினான்.

கி. பி. 1036இல் முதலாம் இராஜேந்திரனின் 25ஆம் ஆட்சியாண்டில், மறை நூல் கல்வி நிலையம் அமைத்து அதில் 300 மாணவர்களும், 10 கற்பிப்போரும் இருந்தனர். கோயிலை ஒட்டித் தங்குவதற்கான விடுதி ஒன்றும் கட்டித் தானம் செய் யப்பட்டதாகத் தென்னார்க்காடு மாவட்டம், எண்ணாயிரம் இராஜராஜவிண்ணகரிலுள்ள கல்வெட்டு கூறுகிறது.

வீரராஜேந்திர சோழனது (கி. பி. 1062—67) கட்டளைப் படி, திருமுக்கூடல் மகாவிஷ்ணு கோயிலில் மாதவன் எனப் பெயர்கொண்ட வைசியன் ஜனநாத மண்டபம் என்றதொரு பெரிய மண்டபத்தையும் அதைச் சூழ்ந்த மண்டபங்களையும் நிறுவி, அங்கு மறைகள், மற்றக் கலைகள் ருபாவதாரம் முதலிய நூல்கள் கற்பிக்கக் கல்வி நிலையமும், மாணவர்கள் தங்க விடுதியும், 15 படுக்கைகளையுடைய 'வீர சோழன்' என்னும் பெயர்கொண்ட மருத்துவமனையும்

100. Early Temples of Tamilnadu, P.201.

ஏற்படுத்தினான் என்று திருமுக்கடல் கல்வெட்டு கூறுகிறது.[101]

பொன்னேரி அகத்தீசுவரர் கோயிலிலுள்ள கல்வெட்டு (கி. பி. 901) வேதம் கற்பிப்பதற்கு ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது. கும்பகோணம் நாகேசுவரர் கோயிலில் உள்ள (கி. பி. 959 ஆம் ஆண்டு) கல்வெட்டு ஒன்றில் அங்குப் 'பிரபாகரம்' போதிக்கப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது. திருக்கோட்டியூர் பைரவர் கோயிலிலும் முதல் ராஜராஜன் காலத்தில் இந்தச் சாத்திரம் போதிக்கப்பட்டு வந்தது.

எண்ணாயிரம் கோயில் கல்வெட்டால் முதல் ராஜராஜன் காலத்தில் அக்கோயிலில் பெரிய வேதபாடசாலை இருந்ததென்பதையும் அங்கு 14 ஆசிரியர்களும் 340 மாணவர்களும் பயின்று வந்தனர் என்பதும், அவர்களுக்குப் படியளக்கப்பட்டது என்பதும் தெரியவருகின்றன.

செங்கல்பட்டுத் திண்ணனூர், திருச்சித் திரையூர் ஆகிய இடங்களிலும் வேத பாடசாலைகள் இருந்தன என்பதும் அங்குப் பயிலும் மாணவர்களுக்குக் கோயில்களிலிருந்து உணவளிக்கப்பட்டு வந்தது என்பதும் கல்வெட்டுகளால் புலனாகின்றன.

தென்னார்க்காடு மாவட்டம் திருப்புவனியிலுள்ள கோயிலில் திருவாய்மொழி ஓதுவதற்கும், அக்கோயில் நடத்தி வந்த வேதபாடசாலையில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நெல்லளிக்கவும் முதலாம் ராஜேந்திரன் (கி பி. 1048) அறக்கட்டளை ஏற்படுத்தியுள்ளான். அப்பாடசாலையில் 19 ஆசிரியர்களும், 260 மாணவர்களும் இருந்தனர் என்பது தெரியவருகிறது.[102]

சுசீந்திரம் அருகிலுள்ள புறவஸ்ஸேரி என்னுமிடத்தில் உள்ள கல்வெட்டால், அங்கு ரிக், யஜுர், சாம வேதங்களைக் கற்பிக்கும் இரண்டு ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிக்க நிலம் வழங்கப்பட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது.[103]

101. சோழர் கோயிற்பணிகள், பக்.143—146.
102. S. Gurumurthy, Temple College of Tamilnadu, திருமயிலை கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர், 1982.
103. The Sucindram Temple, P. 268.

பொதுவாகக் கோயில்களில் சரஸ்வதி பண்டாரம் என நூல் நிலையங்கள் இருந்தன. இவ்வாறாகக் கல்வி போதனைகளுக்கும், மற்ற கலைகளையொட்டிய ஆராய்ச்சிகளுக்கும் திருக்கோயிலே நடுவிடமாக அமைந்திருந்தது.

இக்காலத்தில் பழனி முருகன் கோயில் நிதியுதவியாலும், திருத்தணி முருகன் கோயில் நிதியுதவியினாலும் அவ்வூர்களில் கலைக்கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னைக் கந்தசாமி கோயில் நிருவாகம் மேல் நிலைப்பள்ளி ஒன்றை நடத்துகின்றது. மருவத்தூர் ஆதிபராசக்தி கோயில் அறக் கட்டளை, பள்ளி, பொறியியற்கல்லூரி ஆகியவற்றை நடத்துகின்றது. மயிலாப்பூர்க் கபாலீசுவரர் கோயில் உட்பட பல்வேறு கோயில்களில் தேவாரப் பாடசாலைகள் உள்ளன. வடபழனி முருகன் கோயில் சார்பில் அக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் மகளிர் கல்லூரி அமைக்கும் பணியை மேற்கொள்ள இருக்கிறார்கள்.

கருணை இல்லங்கள்

அனாதைக் குழந்தைகளுக்குக் காப்பகம் அமைத்து அவர்களைப் போற்றி வளர்க்கும் பணியையும் கபாலீசுவரர் கோயிலும் மற்றுமுள்ள கோயில்களும் செய்துவருகின்றன.

இவ்வாறு கோயில்களுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவுகள் நல்ல முறையில், வலுவாகப் பயன்தரும் வகையில் அமைந்துள்ளன.

திருக்கோயில்களில் தொழில் உறவுகள்

முன்னுரை

திருக்கோயில்கள் தொழில்களைப் பேணி வளர்க்கும் நிலையங்களாகவும் விளங்குகின்றன. நுண்கலைகளும் தொழிற் கலைகளும் கோயில்களில் வளர்ந்தன; வளர்கின்றன.

தெய்வீகத் தொடர்பான பூசை செய்யும் பணிகளில் ஈடு பட்டுள்ள அர்ச்சகர்களும், கோயில் நிருவாகப் பணிபுரிபவர் களும் தவிர்த்துக் கோயிலை அடிப்படையாகக் கொண்டு விளங்கும் தொழில்களே இங்குக் குறிக்கப்படுகின்றன.

திருக்கோயில் தொடர்பான தொழில்கள்

கோயில் கட்டிடம் கட்டுதல், கோபுரம், விமானங்களில் வைப்பதற்கான சுதை, சிமெண்ட்டால் பொம்மைகள் செய்தல், வண்ணந்தீட்டுதல், கருங்கல்லில் கடவுளர் திருவுருவங்கள் செய் தல், உற்சவத் திருமேனிகளை ஐம்பொன்னில் செய்தல், வாகனங்கள், விமானங்கள், கலசங்கள், தேர்கள், இறைவன் திருவுருவங்கள், நிலைப்படிகள் ஆகியவற்றுக்குக் கலசங்கள் செய்தல், பொன், வெள்ளி, நவரத்தின அணிகலன்கள் செய்தல், மரத்தேர்கள், வாகனங்கள், கதவுகள், சிற்பங்கள் செய்தல், கோயில்களுக்குத் தேவையான திருநீறு, குங்குமம், சந்தனம் தயாரித்தல், கோயில் பட்டுக் குடைகள் செய்தல், பஞ்சாமிர்தம் செய்தல், பூமாலைகள் தொடுத்தல், பந்தல் போடுதல், படை யலுக்குத் தேவையான பிரசாதங்கள் செய்தல், பூசைக்குரிய பாத்திரங்கள், விளக்குகள், சோடச உபசார சாதனங்கள் செய்தல் ஆகியவை கோயிலோடு தொடர்புடைய தொழில் களாகும்.

கோயில்கள் கட்டுதல், விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்தல், வழிபாடுகள் செய்தல் என்னும் மூன்று நிலைகளிலும் கோயில் தொடர்பான தொழில்கள் நடைபெறுகின்றன. இத்

தொழில்கள் நடைபெறவேண்டுமென்றால் பயிற்சி அளிப்பதற்குத் திறமை வாய்ந்த ஸ்தபதிகளும், பயிலுவதற்கு மாணவர்களும், பயின்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பும் தேவை. கோயில் கலைகளில் வல்லவர்கள் தமிழ்நாட்டில் இருப்பதால் அக்கலைகள் இன்று செழித்து வளர்கின்றன.

கோயில் தொடர்பான தொழில்கள் செழிக்க வேண்டுமென்றால் பல்லவர் காலம் முதல் நாயக்கர் காலம்வரை கட்டப்பட்ட கோயில்கள் மட்டுமே போதுமானதாகாது. புதிய கோயில்களும் கட்டப்பட வேண்டும்.

ஆங்கிலேயர் ஆண்டுகொண்டிருந்தபோது அவர்கள் வேறு சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்ததால் இந்துக் கோயில்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டவில்லை. மேலும், மக்கள் வளமான வாழ்க்கை வாழவில்லை. கஞ்சித் தொட்டிகளை நம்பியிருந்த காலம் அக்காலம். ஏழ்மை எங்கும் கொடிகட்டிப் பறந்தது. கஞ்சிக்கவலை உள்ள நாட்டிலே கலைக்கவலையோ கடவுட் கவலையோ தோன்றாது என்று மு.வ. கூறியதைப் போல, ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டில் கோயில்கள் அதிக அளவில் கட்டப்படவில்லை. கலைகளும் செழிக்கவில்லை. கடவுளர்க்குச் சிறப்பொடு பூசனை செய்யப்படவுமில்லை.

இந்தியா 1947இல் ஆங்கிலேயர் ஆட்சியினின்றும் விடுபட்ட பிறகு, நடுவண் அரசின் ஐந்தாண்டுத் திட்டங்களினால் வேலை வாய்ப்புப் பெருகியது; பெருமளவு வறுமை ஒழிந்தது. மக்கள் கடவுளை நினைக்கத் தொடங்கினர். கோயில்கள் கட்ட ஆரம்பித்தனர். மக்களின் ஆர்வம், கிருபானந்தவாரியாரின் சமயப் பேருரைகள், மக்கள் உண்டியலில் செலுத்திய பணம், அரசு அளித்த மான்யம் இவற்றால் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் தமிழர் வாழும் வெளிமாநிலங்கள், வெளிநாடுகள் ஆகியவற்றிலும் கோயில்கள் கட்டப்படுகின்றன. இதனால் கோயில் தொடர்பான கலைகளுக்கும் புத்துயிர் கிடைத்தது.

கோயில்களைக் கட்டுவதற்கு அக்கலை தெரிந்த வல்லுநர்கள் தேவை. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், சிற்பிகள் என்றும், ஸ்தபதிகள் என்றும் அழைக்கப்பட்ட கலைஞர் எண்ணிக்கையில் அருகி இருந்தனர். அக்கலை தொடர்பான நூல்களையும், வடமொழி அறிந்த தமிழ்ச் சிற்பிகள் வட

மொழிச் சுலோகங்களிலேயே எழுதியிருந்ததால், அக்கலை நுட்பங்கள் எல்லோராலும் அறிந்து கொள்ள முடியாதநிலை யில் இருந்தது.

இந்திய விடுதலைக்குப் பிறகு, தமிழ்நாட்டில் இருந்த காங்கிரஸ் அரசு கோயில் கலைகள் அழிந்துபடாமல் இருப்ப தற்கான நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தது. முதல் கட்ட மாகப் பல்லவர் கலை வளர்ந்த மாமல்லபுரத்திலும், சுவாமி மலையிலும் 1957இல் சிற்பப் பயிற்சிக்கூடங்களை நிறுவியது. அக்கல்லூரியில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாண வர்கள் சேர்ந்து பயின்றனர். இப்போது ஆயிரக்கணக்கான சிற்பிகள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். மாமல்லபுரத்தில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட சிற்பக் கூடங்கள் இருக் கின்றன. இவை பட்டறைகள் என்றழைக்கப்படுகின்றன. இன்று தமிழ்கூறு நல்லுலகில் கட்டப்படுகின்ற கோயில்களுக்குத் தேவையான கலைஞர்கள் கிடைப்பதற்குக் காரணம் அரசு தோற்றுவித்த சிற்பக் கல்லூரியேயாகும்.

கோயில் தொடர்பான கலைகளைப் பயின்ற கலைஞர் களுக்கு வேலை வாய்ப்பும் வேண்டும். அந்தப் பணியையும் அரசே செய்தது. பூம்புகார் என்னும் பெயரில் நிறுவனத்தைத் தோற்றுவித்து, தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் கலைத் தொழிலகங்களை ஏற்படுத்திக் கலைஞர்களுக்கு வாழ் வளித்தது.

இன்று தமிழ்நாட்டில் அரசே மேற்கொண்டுள்ள கோயில் நிவாரணப் பணிகளாலும், மாமல்லபுரத்துச் சிற்பக் கல்லூரி யாலும், பூம்புகார் என்றழைக்கப்படும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தாலும், மக்களிடத்தில் தோன்றி யுள்ள பக்தி உணர்வினாலும் கோயில் தொடர்பான தொழில்கள் செழித்து வருகின்றன.

கோயில் கட்டிடத் தொழில்

தமிழ்நாட்டில் திருக்கோயில்களைக் கட்டுவதற்குரிய விதி களை ஆகம நூல்களும், வாஸ்து சாஸ்திரங்களும், மானசாரம், விஸ்வகர்மியம், சிற்ப ரத்தினம், சிற்ப சிந்தாமணி, மயன்மதம் முதலிய சிற்ப சாஸ்திரங்களும் கூறுகின்றன. திருக்கோயில் கட்டுவதற்கு இடம் தேர்ந்தெடுப்பது, நிலத்தைச் சமன் செய்வது, கட்டிடங்கள் கட்டுவதற்குக் கோடுகள் வரைவது

முதலிய செயல்முறைகள் இந்த நூல்களில் கூறப்பட்டுள்ளன. முழக்கோல் என்னும் அளவுகோல் பற்றியும் இந்நூல்கள் விளக்குகின்றன.[1]

நிலம் தேர்ந்தெடுத்தல்

திருக்கோயில் கட்ட வேண்டிய இடத்தை ஒரு சதுரமாகவோ, நீண்ட சதுரமாகவோ, வட்டமாகவோ, நீண்ட வட்டமாகவோ திட்டமிட்டு அமைத்துக் கொள்ள வேண்டும்.

சமன் செய்தல்

திருக்கோயில் கட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தை. இரண்டு முழ அளவுக்குக் குறையாமல் தோண்டி அங்குள்ள மண்ணை அப்புறப்படுத்த வேண்டும். இந்தப் பள்ளத்தில் எள், கடுகு நீக்கிய தானியங்களை விதைத்துத் தண்ணீர் ஊற்றி, முளை வந்தவுடன், அம்முளைகளைப் பசுக்களைக்கொண்டுச் சாப்பிட வைக்கவேண்டும். பிறகு அப்பள்ளத்திலிருக்கும் எலும்பு, கரி ஆகியவற்றை நீக்கி, அதிலிருந்து முன் எடுத்த மண்ணை மேல்சொன்னபடி சுத்தமாக்கி, அம் மண்ணாலேயே பள்ளத்தை நிரப்ப வேண்டும். அம்மண், பள்ளம் நிரம்பி மிச்சமாயின் உத்தமமாகவும், நிறைந்துவிட்டால் மத்திமமாகவும், போதாமல் போய் வேறு மண் கொண்டு மட்டமாகும்படி செய்யவேண்டியிருந்தால் அவ்விடம் அதமமாகவும் கருதப்படும். மேற்சொன்னவற்றில் உத்தம, மத்திம இடமே திருக்கோயில் கட்டத் தகுந்ததாகும்.

கருப்பக்கிருகத்திற்கு இடம் தேர்ந்தெடுத்தல்

திருக்கோயில் கட்டத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திற்குச் சிவாசாரியார், சில்பாசாரியார் ஆகியோருடன் சென்று அங்குச் சகுனம் பார்க்க வேண்டும். நல்ல சகுனமாயின் நல்லதாகும். கெட்ட சகுனமாக இருந்தால் சாந்தியாகச் சிவாசாரியரைக் கொண்டு அகோராஸ்திர ஓமம் செய்வித்துப் பின் சதுரமாக அமைத்து, அவ்விடத்தை நன்றாக உழச்செய்து, அங்குள்ள எலும்பு, கரி, முடி ஆகியவற்றை நீக்கி. நான்கு தண்ட அளவு தூரம் உழுதபின், நெல், பாசிப்பயறு, எள் இவைகளை விதைத்து நீர் தெளிக்கவேண்டும். விதைத்த முளைகள் மூன்று

1. இரா. நாகசாமி, கல்லும் சொல்லும், ப. 156.

நாள்களில் முளைக்குமாயின் உத்தமம். ஐந்து தினங்களில் முளைக்குமாயின் மத்திமம், இதற்குமேல் முளைத்தால் அதம மாகும். இவைகளுள் உத்தம, மத்திமமான இடங்கள் சிவலிங்கம் பிரதிட்டை செய்வதற்குச் சிறந்ததாகும். அதம மாயிருந்தால் சாந்தி செய்துகொள்ள வேண்டும். பின் அம் முளைகளை ஒருமாதக் காலம்வரைக் காப்பாற்றிப் பின் பசுக் கூட்டங்களைக் கொண்டு அவற்றைச் சாப்பிடச் செய்ய வேண்டும். பின் அவ்விடத்தில் அந்தணர்களுக்கு உணவிட்டும், பசு, காளை, எருமை, ஆடு இவைகளை வசிக்கச் செய்து பின் பஞ்சகவ்யம் கொண்டும் அவ்விடத்தை மந்திரநீர் கொண்டு தெளிக்க வேண்டும்.

பின் கருப்பக்கிருக அளவுக்கான இடத்தைக் கெட்டிப் படுத்திக்கொண்டு, அவ்விடத்தில் வாஸ்து சாந்தியைச் செய் விக்க வேண்டும்.

வாஸ்து சாந்தி

அசுர குருவான சுக்கிரன் தேவர்களை அழிக்க வேண்டி சிவபெருமானைக் குறித்துப் பெருந்தவம் புரிந்தான். அத்தவப் பயனாக மூவுலகமும் அஞ்சக்கூடிய ஒரு பூதம் உண்டாகியது. அப்பூதம் தேவர்களுடன் கடும்போர் புரிந்தது. அப்போது எல்லாத் தேவர்களும் சேர்ந்து அப்பூதத்தைப் பிடித்திழுத்துப் பூமியில் கீழ் முகமாகத் தள்ளி, எல்லாத் தேவர்களும் அவனது உடல் பகுதிகளில் அமர்ந்து கொண்டு அவனை அசைய விடாமல் அழுத்திவிட்டார்கள். அவ்வாறு அவன்மேல் உட் கார்ந்து கொண்டவர்களான பிரம்மா முதலான தேவர் களையும், அந்தப் பூத உருவமான வாஸ்து புருஷனையும் பூசை செய்து திருப்தி செய்தபின் சிவலிங்கத்தை வைக்கப்பட வேண்டிய இடத்தில் யாதொரு விக்னமும் வரக்கூடாது என்று பிரம்மா முதலான ஐம்பத்து மூன்று தேவர்களை வேண்டிக் கொள்வது வாஸ்து சாந்தியாகும்.

அடிக்கல் நாட்டுதல்

வாஸ்து சாந்தி செய்த பிறகு அவ்விடத்தை நடுவிலிருந்து கிழக்கு முதலிய திக்குகளில் முளையடித்து அந்தந்தத் திக்கு களில் வைரம் வைடூர்யம் முத்லிய ரத்தினங்களைவைத்து நல்ல வேளையில், கருங்கல் ஆலயமாயின் கருங்கல்லையும், சுட்ட கல்

மயமான கோயிலாயின், சுட்ட செங்கற்களைக்கொண்டு மனை முகூர்த்தம் செய்ய வேண்டும். மேற்சொன்ன செயல்களில் மந்திரமயமானதைச் சிவாசாரியர்களும், தொழில் உருவ மானதைச் சிற்பிகளைக் கொண்டும் செய்விக்க வேண்டும்.

பின் ஆற்றுமணல் அல்லது பூச்சிகள் இல்லாத சுத்தமான மண்ணால் கொஞ்சம் நிரப்ப வேண்டும். பின் கருங்கல்லாலும், ஆற்றுமணலாலும் பள்ளத்தை நிரப்பித் தண்ணீரும்விட்டுக் கெட்டியாகச் செய்து பூமி மட்டம் செய்துகொண்டபின் உப பீடம் கட்ட வேண்டும். இவ்வுபபீடம், அதிஷ்டமெனும் கருப்பக்கிருக அளவைக் காட்டிலும், விசாலமாகவும் உயர மாகவும் இருக்க வேண்டும்.

கண்டம், கம்பம், பட்டிகா-கம்பம், வேதி-கம்பம், கலசம், ரவிபளிகா, வீரகாண்டம், போதிகை உத்தரம், வாஜனம், கபோதம் என்னும் உறுப்புகளுடனும், கோஷ்டம், பஞ்சரம், கர்ணகூடம், போதம், வேதிகை, களம், ஹாரம், பத்ரநாளி, சிகரம், ஸ்தூபி போன்ற அமைப்புகளுடன் விமானங்கள் கட்டப்பட வேண்டும். விமானத் தளங்கள் ஒன்று முதல் பதினாறு தளம் வரையும், 1 முழம் முதல் 100 முழ அளவு உயரம் இருக்கலாம். ஒரு தச்சு முழம் என்பது ஜாதி அங்குலம் 34 ஆகும். இந்த முழங்கொண்டு சிவாலயங்கள் முதலிய தேவாலயங்கள் அளக்கப்பட வேண்டும்.

இந்த விமானங்களுள் உபானம் முதல் ஸ்தூபிவரை நான்கு பட்டை அல்லது நாகரமெனவும், நான்கு பட்டை முதல் நீண்ட சதுரம் எட்டுப்பட்டை உள்ளது திராவிடம் எனவும், விருத்தம் (வட்டம்), நீண்ட விருத்தம், இருபட்டை விருத்தம் வேஸரம் எனவும் சிற்ப நூல்களில் குறிக்கப்பெறுகின்றன. இவ் விமானங்கள் 96 வகைப்படும் பொதுவாக விமானங்கள், பீடம், பாதம், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி என்னும் ஆறு அங்கங்களைக் கொண்டிருக்கும். சில விமானங்களில் பீடத்திற்கு அடியில் உபபீடம் என்னும் ஓரங்கமும், கிரீவத்தின் அடியில் உபகிரீவம் என்ற அங்கமும் அமைக்கப்படும் மரபு உண்டு. அடி என்பது பீடம், சரணம் என்றும், கால் என்பது பாதம் என்றும், தோள் என்பது பிரஸ்தரம் என்றும், கழுத்து என்பது கிரீவம் என்றும், தலை என்பது சிகரம் என்றும், முடி என்பது ஸ்தூபி என்றும் வடமொழியில் குறிக்கப்படுகின்றன.

விமான அங்கங்கள் மனித அங்கங்களுக்கு நிகராகவே குறிக்கப் படுகின்றன.

விமானங்கள் கற்களுடன் சுண்ணாம்பு கலந்தும், மரங் களுடன் செம்பு, தங்கத் தகடுகளைக் கொண்டும் செய்யப் படுகின்றன.

கருப்பக்கிருகம் கதவில்லாமல் அமைக்கப்பட வேண்டும். வாயில்கள் உயரமாகவும், உயரத்தின் 10 பங்கு அளவில் 1 முதல் 3 பங்கு அளவு குறைவாகவும் அகலம் இருக்க வேண்டும்.

கருப்பக்கிருகச் சதுரளவு உள்பிரகாரம் எனப்படும். அதையடுத்து இரண்டாம், மூன்றாம் நான்காம் பிரகாரங்கள் அமைக்கப்படும். பிரகாரங்கள் உயர்ந்த சுவர்களுடன் அகல மான வாயிலுடனும் ஒன்றுமுதல் கூடுதலாகத் தளத்தை உடைய கோபுரங்களை உடையனவாகவும் கட்டப்பட வேண்டும். முதல், இரண்டாம் பிரகாரங்களை அடுத்து மண்டபம், பரிவாரத் தெய்வங்களின் ஆலயங்கள் அமைக்கப் படவேண்டும்.

கருப்பக்கிருகத்தின் முதலில் இறைவனும், இரண்டாவதாக ஸ்நபனம், மூன்றாவதாக நந்தி, நான்காவதாக நிருத்த மண்டபங்கள் இருக்க வேண்டும்.

கோயில்களிலுள்ள சுண்ணாம்பிலான உருவங்களும், அதற்குப் பூச்சு வேலைகளும், கடுக்காய், தானிக்காய், நெல்லிக் காய் ஊறவைத்த தண்ணீரைக்கொண்டு அரைத்த சுண்ணாம் பினாலேயே செய்யப்பட வேண்டும்.[2]

இவ்வாறு கோயில் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும் என்று ஆகம நூல்கள் கூறுகின்றன.

திருப்போரூர் ஸ்தபதி டி. பி. கணேசமூர்த்தி ஆச்சாரி என் பவர் எழுதி, 1960இல் வெளியிட்டுள்ள, ஆலய விக்கிரக நிர்மாண ஆயாதி சிற்ப இரகசியம்' என்னும் நூலும், கணபதி ஸ்தபதி எழுதி.தொழில்நுட்பக் கல்வி இயக்கம் வெளியிட்டுள்ள சிற்பச் செந்நூல் என்னும் நூலும் ஆலயங்களும் சிற்பங்களும்

---

2. இராமேசுவரம் மகாகும்பாபிஷேக சிறப்பு மலர், 1975, பக். 141—144.

எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பதை விளக்கமாகக் கூறுகின்றன.

கோயில்களை உத்திராயண காலத்தில் தான் கட்ட ஆரம்பிக்க வேண்டும். நாள், நட்சத்திரம், இராசி, திதி இவற்றைப் பார்த்துத் தான் கோயில் கட்டத் தொடங்குகிறார்கள். பெரும்பாலான வயது முதிர்ந்த ஸ்தபதிகள் வடமொழி தெரிந்தவர்களாகவும், பஞ்சாங்கம் பார்க்கத் தெரிந்தவர்களாகவும் இருக்கிறார்கள்.

இக்காலத்தில் சிற்பக் கூடங்களில் பயின்று வருகின்ற இளங்கலைஞர்களுக்கு வடமொழி தெரியவில்லை. அவர்களில் பரம்பரையாக ஸ்தபதி பரம்பரையில் வந்தவர்களுமில்லை. கண் பார்த்ததைக் கை செய்கிறது என்கிற முறையில் கற்றுக் கொண்ட கெட்டிக்காரர்கள் இவர்கள்.

அண்மைக் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களில் சென்னை பெசண்ட் நகரிலுள்ள அஷ்டலட்சுமி கோயில், அடையாறு சி. பி டி வளாக எல்லையிலுள்ள மத்ய கைலாஷ் போன்ற கோயில்கள் இக்காலச் சிற்பிகளின் கைவண்ணத்தையும், கட்டிடக் கலையின் வளர்ச்சியையும் வெளிப்படுத்தும் வகையில் உள்ளன.

இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் இந்துக் கோயில்களைக் கட்டும் பணியில் ஈடுபட்டிருக்கும் சிற்பிகளில் பெரும்பாலானோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களே ஆவர். மயிலேறு ஸ்தபதி என்பவரிடம் சிற்பக் கலை பயின்ற சிற்பி நித்யானந்த ஆசாரி என்னும் எழுபது வயது கலைஞர் திருநெல்வேலி சங்கரன்கோயில் அருகிலுள்ள ஊரைச் சேர்ந்தவர். ஆந்திர மாநிலம், தமிழ்நாடு ஆகியவற்றில் கோயில் கட்டும் பணிகளில் ஈடுபட்டுவிட்டு இப்போது மாமல்லபுரத்தில் தங்கி இளம் சிற்பிகளுக்கு ஆலோசனை கூறி வருகிறார். இவர் இராமநாதபுரம் வெளிப்பட்டணம் முத்தாலம்மன் கோயில், மதுரை வடக்கு மாசிவீதி கிருஷ்ணன் கோயில், மதுரை திரவிய லிங்கேஸ்வரர் கோயில் ஆகிய கோயில்களின் கட்டிடப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

கோயில் கட்டிடக் கலையை ஐந்தொழில் என்று இச்சிற்பி கூறுகிறார். கருங்கல், பஞ்சலோகம், மரம், சிமெண்ட்,

வண்ணம் என்னும் ஐந்தாலேயே கோயில் கட்டிடங்கள் நிறைவு பெறுகின்றன என்று கூறுகின்றார்.[3]

டெல்லியிலுள்ள உத்திரசுவாமிநாத சுவாமி கோயில், சதாராவிலுள்ள நடராஜர் கோயில், டெல்லியிலுள்ள மீனாட்சியம்மன் கோயில், செகந்திராபாத் உஜ்ஜயினி மாகாளி கோயில், அமெரிக்கா பிட்ஸ்பர்க்கிலுள்ள சீனிவாசப் பெருமாள் கோயில், சிங்கப்பூர் மாரியம்மன் கோயில், தோப்பாயா காளி அம்மன் கோயில், கேலாஸ் ஈஸ்ட் அவென்யூ II சிவன் கோயில், தாய்லாந்து மகாமாரியம்மன் கோயில் ஆகியவை இக்காலத்தில் நம் நாட்டுச் சிற்பிகளின் கைத்திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவனவாகும்.

திருமழிசை ஒத்தாண்டீஸ்வரர் கோயில் கோபுரத்தைக் கணபதி ஸ்தபதி அவர்கள் அண்மையில் கட்டி முடித்துள்ளார்.

இப்போது கோயில் கட்டிடங்கள் கருங்கல், செங்கல், சிமெண்ட், மணல், ஜல்லி, இரும்பு, மரம் ஆகியவற்றைக் கொண்டு கட்டப்படுகின்றன. பிரதிஷ்டை செய்வதற்குக் கருங்கல் விக்கிரகங்களும், உற்சவத் திருமேனிகளுக்குப் பஞ்சலோக விக்கிரகங்களும், கோபுரங்களில் வைப்பதற்குச் சிமெண்ட் பொம்மைகளும் செய்யப்படுகின்றன. முன்பு சுண்ணாம்பில் செய்த வேலைகள் அனைத்தும் இப்போது சிமெண்ட் கலவையில செய்யப்படுகிறது. இவற்றை அழகுபடுத்தும் வகையில் வண்ணமும் பூசுகின்றனர்.

கோயில் கட்டுவதற்குத் தேவையான எல்லா வகையான தொழிலாளர்களும், கலைஞர்களும் ஒருசேர இருக்கின்ற இடமாகப் பண்ருட்டி அருகிலுள்ள திருவதிகை விளங்குகிறது. அவர்களிடத்திலோ அல்லது கணபதி ஸ்தபதியாரிடமோ கோயில் கட்டும் பணியை விட்டுவிட்டால், அவர்கள் ஓராண்டில் கட்டிமுடித்து விடுவார்கள். சிவாசாரியார்களைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்ய வேண்டியது ஒன்றுதான் நம்முடைய செயல். இந்த அளவுக்குக் கோயில் கட்டிடக் கலையில் தேர்ந்த தொழிலாளர்கள் நிறைந்த அளவில் இருக்கிறார்கள்.

3. தகவல்: சிற்பி ச. நித்தியானந்த ஆச்சாரி, நாள் 30-7-94

இக்காலத்தில் கோயில் கட்டும்போது பழைய ஆகம விதிகளை முழுவதும் கடைப்பிடிக்க இயலாமல் போகிறது. எங்கு இடம் கிடைக்கிறதோ அங்குக் கோயில் கட்டி விடுகிறார்கள். நடைபாதையிலும் கோயில்கள் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு நல்ல முகூர்த்த நாளிலும் தமிழ்நாட்டில் பல இடங்களில் புதிய கோயில்களுக்குக் கும்பாபிடேகங்கள் நடைபெறுகின்றன. ஏறக்குறைய நாளுக்கொரு கோயில் என்ற வகையில் தமிழ் நாட்டில் திருக்கோயில்கள் புதிதாகத் தோன்றுகின்றன.

400 ஆண்டுகளுக்கு முன் நாயக்கர் காலத்தில் கட்டிமுடிக்காமல் விடப்பட்ட திருவரங்கராயகோபுரம் அகோபில மடம் 44 பட்டம் ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஜீயர் சுவாமிகளால் 236 அடி உயரத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது இக்காலக் கோயில் கட்டிடக்கலை சாதனையாகும். இது உலகிலேயே மிக உயர்ந்த கோபுரமாகும்.[4]

கி.பி. 1445இல் பராக்கிரம பாண்டியன் தென்காசி விசுவநாதர் ஆலயத்தைக் கட்டி முடித்தான். கி.பி. 1792க்குப் பிறகு அக்கோயிலின் கோபுரம், வெடிப்புக் கண்டோ, இடி விழுந்தோ நொறுக்கிவிட்டது.[5] இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு அண்மைக் காலத்தில்தான் அக்கோபுரம் சீர்செய்யப்பட்டுக் குப்பாபிடேகம் செய்யப்பட்டது. இக்கோபுரமும் இக்காலக் கட்டிடக் கலையின் சிறப்பைக் காட்டுகிறது.

தமிழ்நாடு அரசின் இலச்சினையாக உள்ள பதினோரு தளங்களுடன் 196 அடி உயரமுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் கோபுரத்தில் சில ஆண்டுகளுக்கு முன், முன்பகுதியிலும், வடக்குப் பகுதியிலும் உச்சியிலிருந்து அடிப் பாகம் வரையிலும் பல வெடிப்புகள் ஏற்பட்டன. 1200 ஆண்டுப் பழமையான அக்கோபுரத்தின் வெடிப்புகளை இக் காலக் கட்டிடக்கலை வல்லுநர்கள் 125 டன் சிமெண்ட் மற்றும் சிமெண்ட் கலந்த கான்க்ரீட் இரும்புக் கம்பிகள் ஆகியவற்றால் 97 இலட்ச ரூபாய் செலவில் பழுது பார்த்து அதை நிலை நிறுத்தி உள்ளார்கள். இதுவும் இக்காலக் கட்டிடக் கலைச் சாதனையாகும்.[6]

---

4. தினமலர், 16—9—94
5. மீ.ப. சோமு, நமது செல்வம், பக் 87.88.
6. The Hindu, August 24, 1994

இவ்வாறு பழுது பார்த்தல் முதல் புதிதாகக் கட்டுதல் வரை, கோயில் கட்டிடத் தொழில் தமிழ்நாட்டில் இன்று சிறந்து விளங்குகிறது. ஆயிரக்கணக்கான சிற்றாள்களும், பெரியாள்களும், கொத்தனார்களும், நூற்றுக்கணக்கான ஸ்தபதிகளும் கோயில் கட்டிடக் கலையில் இக்காலத்தில் ஈடு பட்டிருப்பது கோயில்களோடு தொழில் முறையில் சமுதாயம் கொண்டுள்ள தொடர்பை உணர்த்துகின்றது.

இந்தத் தொடர்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் சிற்பிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் காஞ்சி சங்கர மடம், காஞ்சிபுரத்தை அடுத்துள்ள எண்ணாத்தூரில் சிற்பப் பயிற்சிப் பள்ளியை நிறுவ இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.[7]

சிற்பக் கலை

திருக்கோயில்களின் அமைப்பால் திராவிடக் கட்டிடக் கலை உருவம் பெற்றது. கல் தச்சரும் மரத்தச்சரும், கொத்தனாரும், கொல்லரும் ஏனைய கைவினைக் கலைஞர்களும் உருவாயினர். பின்னர்ச் சிற்பக் கலையும், விக்கிரக வார்ப்புக் கலையும் உருவாயின.[8]

சிற்பங்கள் பலவகைப்படும். மண்ணாலும், மரத்தாலும், தந்தத்தாலும், கல்லாலும் செய்யப்பட்டுத் திகழும் அனைத்தையும் சிற்பங்கள் என்றே சொல்லுகிறோம்.[9]

திருக்கோயில்களில் உள்ள மூலவர் திருவுருவங்கள் பலவகை பொருட்களால் செய்யப்பட்டிருக்கின்றன. சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள பார்த்தசாரதிப் பெருமாள் திருவுருவம் சுதையால் ஆனதாகும். செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள திருப்போரூர் முருகன் கோயிலிலுள்ள திருவுருவம் பனையரத்தால் ஆனதாகும். காஞ்சிக்கு அருகிலுள்ள திருமால் பேறு என்னும் ஊரில் மண்ணாலான சிவலிங்கம் இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கருங்குளத்தில் இறையுருவம் சந்தனத்தால் ஆனது. பழநிமலை மீதுள்ள தண்டாயுதபாணி திருவுருவம் நவபாஷாணத்தால் ஆனது. திருவலஞ்சுழியிலுள்ள விநாயகர் உருவம் கடல்நுரையால் ஆனது.

7 The Hindu, September 16, 1994,
8. இராமேசுவரம் மகாகும்பாபிஷேக சிறப்புமலர், ப.393
9. இரா. நாகசாமி, கல்லும் சொல்லும், ப.162.

மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயில்கள், மதுரை மீனாட்சியம்மன் கோயில், தென்காசி விசுவநாதர் கோயில், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணாபுரம், திருவேங் கடநாதன் கோயில், தஞ்சைப் பெரிய கோயில், காஞ்சிக் கோயில்கள், தஞ்சைத் திருப்பெருந்துறையிலுள்ள ஆவுடையார் கோயில், திருவலஞ்சுழிக் கோயில், கொடும்பாளூர் மூவர் கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், தாராமங்கல கோயில், திருவானைக்கா கோயில், கங்கைகொண்ட சோழேச் சுரம், தாராசுரம் கோயில், சூரியனார் கோயில் ஆகியவற்றி லுள்ள சிற்பங்களும், மற்றும் தமிழ்நாட்டில் உள்ள எண்ணற்ற பழங்கோயில்களிலுள்ள சிற்பங்களும் தமிழகச் சிற்பக் கலையின் பெருமையையும், சிற்பிகளின் திறமைகளையும் எடுத்துக் காட்டுவனவாய் விளங்குகின்றன.

''திருவலஞ்சுழிப் பலகணி தாராமங்கலம் தூண், ஆவுடை யார் கோயில் கொடுங்கை ஆகியவற்றைத் தவிர மற்ற சிற்ப வேலைப்பாடுகளின் சிறப்புக்குக் குறையாமல் நாங்கள் செய்து தருகிறோம்'' என்று அந்தக் காலத்தில் ஒரு கோயிலைக் கட்டத் தொடங்குவதற்கு முன், சிற்பிகள் ஒப்பந்தம் எழுதிக் கொடுப் பார்கள். அதாவது, தங்களுடைய திறமையை எத்தனை முயன்று கலையாக்கம் செய்தாலும் மேற்சொன்ன சிற்ப வேலைப்பாடுகளோடு தாங்கள் போட்டி போட இயலாது என்பதை எல்லாச் சிற்பிகளும் மனப்பூர்வமாக உணர்ந்து ஒப்புக்கொண்டிருந்தார்கள்''.[10]

அப்படிப்பட்ட தமிழகச் சிற்பக்கலை, இன்று தமிழகத்தில் சிறந்த முறையில் வளர்ந்து நிலை கொண்டிருக்கிறது. சிற்பி யையும், அவன் சிறப்பையும் பற்றி, மயசிற்பம் என்னும் நூலிலுள்ள வடமொழிச் சுலோகம்.

சில்பி மாதா சிலா புத்ரா
தாசத்வம் சர்வ பூஜித
சில்பினா கல்பிதம் தெய்வம்
சில்பி ப்ரம்மமயம் ஜகத்[11]

10. மீ.ப. சோமு, நமது செல்வம், ப.122.
11. டி.பி. கணேசமூர்த்தி, ஆலய விக்கிரக நிர்மாண ஆயாதி சிற்ப இரகசியம், ப.4.

அன்னை சிற்பி; புத்திரர்கள் சிற்பக்கல்; அடிமையெனும் தன்மையே முழுமையாகப் பூஜிக்கத்தக்கது. சிற்பியினாலேயே தெய்வமானது கற்பனை செய்யப்படுகிறது. ஆகவே சிற்பியே இந்த ஜகத்தில் பிரம்ம மயமாக இருப்பவர் என்று இச்சுலோகம் சிற்பியைப் புகழுகின்றது.

மாதா சில்பி; பிதா சாஸ்திரம்
அருபம் ரூப மானஸம்
யயாதி பிண்டே பவம் சைவ
தயாபி பித்ரு கர்மதா[12]

என்று ஒரு ஸ்தபதி சிற்பியின் புகழ் பாடுகின்றார்.

அன்னையே சிற்பி. தந்தையே சாத்திரம். உருவமில்லாமலும் உருவத்தோடுமுள்ள, மனத்தில் வீற்றிருக்கும் சிவனானவர் பித்ருக்களின் கர்மங்களைத் (விளைவுகளை) தரக்கூடிய அவனால் (சிற்பியினால்) பிண்டத்தில் நுழைவிக்கப் படுகிறார் என்பது இதன் பொருளாகும்.

மேலும், சிற்பிகளின் பெருமையை,

மேலான குணம் இவரல்லவோ
இந்த விண்ணும் மண்ணும்
முழக் கோலால் அளந்த
குடற்கரைச் (கருப்பச்கிருகம்) சாலையை (விக்கிரகம்)
இரு காலால் மிதித்து
இரு கையால் வகிர்ந்திட்ட
கருங்கல் அல்லவோ
அதை மாலாஅயன் ஈரேழு
பதினான்கு லோகமும் வாழ்த்தியதே[13]

என்னும் பாடலும் சிற்பிகளின் பெருமையை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது

இன்று மாமல்லபுரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பட்டறைகள் எனப்படும் சிற்பக்கூடங்கள் இருக்கின்றன. இவற்றில் பரம்பரையாகத் தொழில் செய்துவரும் ஸ்தபதிகளும், மாமல்லபுரத்துச் சிற்பக் கல்லூரியில் பயின்ற மாணவர்களும் பணி

12. 400 ஆண்டுகளுக்கு முன் மார்க்கசகாய ஸ்தபதி எழுதிய சுலோகம்—தகவல் சிற்பி ச. நித்தியானந்த ஆச்சாரி, நாள் 30—7—94.

13. தகவல்—சிற்பி ச. நித்தியானந்த ஆச்சாரி.

யாற்றி வருகின்றனர். இந்தப் பட்டறைகளில் சிறுவர்களும், சிற்பக்கலையைக் கற்றுக் கொள்கின்றனர். கல்கி சிவகாமியின் சபதம் நாவலில் வருணித்த காட்சிகள் இன்று மாமல்லபுரத்தில் நனவாகிவிட்டன. எங்கும் எப்போதும் அங்கே சிற்பிகளின் உளியோசை கேட்டவண்ணமாக இருக்கிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிற்பிகள் அப்பட்டறைகளில் சிற்பத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் புதிய கோயில்கள் கட்டப்படுவதால், அவற்றுக்குத் தேவைப்படும் தெய்வத் திருவுருவங்கள் இங்கே செய்யப்படுகின்றன. பழைய கோயில்களுக்குத் தேவைப்படும் பரிவார தெய்வத் திருவுருவங்களையும் இவர்கள் செய்கிறார்கள்.

இக்காலத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, முருகன், வள்ளி தெய்வயானை, மாரியம்மன், துர்க்கை சிலைகளே அதிக அளவில் செய்யப்படுகின்றன. அக்கடவுளர்களுக்கே புதிதாகக் கோயில்கள் கட்டப்படுவதுதான் அதற்குக் காரணமாகும்.

கற்களில் புருஷ கல், ஸ்திரி கல் என்று இருவகை இருக்கிறது. ஓசையை வைத்து நல்ல கல்லைத் தேர்ந்தெடுக்கின்றனர். கல்லில் முதலில் வரைபடம் வரைந்துகொண்டு பின்பே செதுக்கத் தொடங்குகின்றனர். சிலைசெய்து முடித்த பிறகு, கடைசியில் இரவில் சிலைக்குக் கண் திறப்பது பழைய மரபாகும்.

ஒரே ஆள், ஓர் ஆள் உயரச் சிலையைச் செய்வதற்கு ஓர் ஆண்டுக்காலம் ஆகும் என்று சிற்பி நித்தியானந்தம் கூறுகிறார்.[14] காஞ்சிபுரத்தை அடுத்துள்ள வாலாஜாபாத் அருகில் பட்டிமலைக் குப்பம் என்னுமிடத்திலும் 30 சிற்பிகள், கல் விக்கிரகங்கள் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

மிக நுட்பமான சிற்ப வேலைகளையும் இக்காலச் சிற்பிகள் செய்கிறார்கள். கருங்கல்லில் சங்கிலி வளையத்தைச் செதுக்கியிருக்கிறார்[15]

---

14. தகவல்—சிற்பி ச. நிந்தியானந்த ஆச்சாரி
15. தகவல்—சிற்பி ச. நித்தியானந்த ஆச்சாரி

$1\frac{1}{2}$ அடி உயரமுள்ள விநாயகர் சிலை செய்ய 40 நாட்களாகும். அந்தச் சிலையின் விலை ரூ 3,500/- அளவில் இருக்கும்.[16]

மாமல்லபுரம் சிற்பப் பயிற்சிக் கல்லூரியில் D.T.S.A என்னும் பட்டயப் படிப்பில் சிற்பக்கலை சொல்லித் தரப்படுகின்றது இன்று மாமல்லபுரத்துப் பட்டறைகளில் கோயில் தொடர்பான சிற்பத் தொழிலில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தெய்வத் திருவுருவங்களை வெளிநாட்டவரும் விரும்பி வாங்குகின்றனர். சிற்பக் கலைஞர்களும் நல்ல ஊதியம் பெறுகின்றனர். பூம்புகார் எனப்படும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சிற்பத் தொழிற்கூடம் மாமல்லபுரத்தில் உள்ளது.

மாமல்லபுரத்துக்கு இணையாகக் குமரி மாவட்டத்திலுள்ள மைலாடி என்னும் கிராமமும் இக்காலத்தில் சிற்பத் தொழிலுக்குப் புகழ் பெற்று விளங்குகிறது. கல்லுக்குள் புதைந்து கிடக்கும் கடவுளரை வெளிக்கொணர்ந்து அவர்களுக்கு உயிரூட்டும் பிரம்மதேவன் கலையை இங்குள்ள சுமார் நூறு குடும்பங்கள் காலங்காலமாகச் சீரோடும் சிறப்போடும் செய்து வருகின்றன. குமரி மாவட்டத்தில் புகழ்பெற்ற சுசீந்திரம் கோயில் கட்டப்பட்டபோது குடியேறிய கலைக்குடும்பங்களின் வாரிசுகளே இவர்கள்.

புதிதாகச் சிற்பங்கள் வடிப்பதோடு, பழைய கோயில் சிற்பங்களைப் பராமரிக்கும் பணிகளையும், தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியா முழுமையும் இவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். கோயில்களைப் பார்வையிட்டு உடைந்த சிற்பங்களையும், அடித்தளங்களையும் செப்பனிட்டு, மெருகு குலையாமல், அதேநேரத்தில் தொன்மையும் கெட்டுவிடாமல் பாதுகாப்பதில் வல்லவர்கள் இவர்கள் மைலாடி கல் செதுக்குவோர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை ஸ்தபதி நல்லதாணுவும் மற்றும் நாற்பதுக்கும் மேற்பட்ட ஸ்தபதிகளும் சிற்பத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சங்கம் தவிர, ஐம்பதுக்கும் மேற்பட்ட தனியார் சிற்பக்கூடங்களும் சிற்பத்தொழிலில் ஈடுபட்டுள்ளன.[17]

---

16. தகவல்—சிற்பி மு. ஆதிமூலம், நாள் 30—7—94
17. த வளவன், குமரிமுனை பிரம்மாக்கள், வணிகமணி, தினமணி, 23—8—93, பக். 6,8,9.

தமிழ்நாட்டில், காஞ்சிபுரம், சென்னை, பாண்டிச்சேரி, மதுரை, திருவண்ணாமலை, தஞ்சாவூர், தேவக்கோட்டை, கோவை போன்ற இடங்களிலும் இன்று சிற்பக்கலை தொடர்பான தொழில்கள் நடைபெற்று வருகின்றன. மாமல்லபுரத்தில் சிற்பக்கலை பயின்று வருகின்ற எல்லாருக்குமே வேலை கிடைக்கின்றது. இன்று தமிழ்நாட்டில் 20,000க்கும் மேற்பட்ட சிற்பிகள் இருக்கிறார்கள்.

பரம்பரையாகச் சிற்பத்தொழில் செய்துவரும் குடும்பங்களில் உள்ளவர்கள், ஓவியம் வரைதல், கருங்கல்லில் சிற்பம் செதுக்குதல், வார்ப்புச் சிலைகள் செய்தல், கவசம் செய்தல், சுதை வேலை, மரச்சிற்பங்கள் செய்தல், ஆபரணங்கள் செய்தல், வண்ணம் பூசுதல் என்னும் எல்லாக் கலைகளிலும் வல்லவர்களாக இருக்கிறார்கள். ஆனால், ஏதாவது ஒரு கலையில் மட்டுமே கருத்தைச் செலுத்தி வல்லுநர் ஆகிறார்கள்.

தமிழகத்தின் வடக்கில் மாமல்லபுரமும், தெற்கில் மைலாடியும், திருக்கோயில்களுக்கும் சிற்பத் தொழிலுக்கும் உள்ள உறவுகளை எடுத்துக்காட்டும் கலங்கரை விளக்குகளாக விளங்குகின்றன.

உலோகச் சிற்பக்கலை (வார்ப்புக்கலை)

திருக்கோயில்களில் உள்ள தெய்வத் திருவுருவங்கள் மூல விக்கிரகங்கள் என்றும், உற்சவத் திருமேனிகள் என்றும் இரு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. மூல விக்கிரகங்கள் கருங்கல் அல்லது சுதையால் செய்யப்பட்டு நிலையாக ஒரு பீடத்தில் அஷ்டபந்தனம் வைத்துப் பொருத்தப்பட்டவையாகும்.

உலோகங்களினால் செய்யப்பட்டு, உற்சவங்களில் திருவீதியுலாவிற்கு எடுத்துச் செல்லப்படுகின்ற திருமேனிகளை உலோகச் சிலைகள், உற்சவத் திருமேனிகள் என்றும் கூறுகின்றனர். உலோகத்தில் சிலை செய்யும் கலை, பிற்காலச் சோழர் காலத்திலே மிகவும் உச்சநிலையை அடைந்தது. முதலில் செப்புத் திருமேனிகளே செய்யப்பட்டன. பின்னர் பித்தளையிலும், அதற்குப் பிறகு செம்பு, வெள்ளி, தங்கம், துத்தநாகம், ஈயம் ஆகிய உலோகங்களைக் கலந்து செய்யப்படும் ஐம்பொன்னினாலும் வார்ப்புருவங்கள் செய்யப்பட்டன. பஞ்சமூர்த்திகளுக்கும், அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும், பிர

தோஷ நாயகருக்கும் உலோகச் சிலைகள் பெருமளவில் செய்யப்பட்டன.

சிவபெருமானே மகேசுவரன் எனப்படுகின்றார். அந்த மகேசுவரனின் இருபத்தைந்து வடிவங்களைக் கல்லிலும், செம்பிலும், பித்தளையிலும் வடித்துச் சிற்பிகள் மகிழ்ந்தனர். அவை, சோமாஸ்கந்த மூர்த்தி, நடராஜ மூர்த்தி, இடபாருட மூர்த்தி, சந்திரசேகர மூர்த்தி, கலியாண சுந்தரமூர்த்தி, பிட்சாடன மூர்த்தி, காமதகன மூர்த்தி, காலசம்ஹார மூர்த்தி, சலந்தராவத மூர்த்தி திரிபுரசம்ஹார மூர்த்தி கஜாசுரசம்ஹார மூர்த்தி, வீரபத்திர மூர்த்தி, தட்சிணா மூர்த்தி, கிராத மூர்த்தி, நீலகண்ட மூர்த்தி, கங்காள மூர்த்தி, சக்ரதான மூர்த்தி, கஜாந்திக மூர்த்தி, சண்டேச அனுக்ரக மூர்த்தி, ஏகபாத மூர்த்தி, லிங்கோத்பவ மூர்த்தி, சுகாசன மூர்த்தி, உமா மகேச மூர்த்தி, ஹரியர்த்த மூர்த்தி, அர்த்தநாரீஸ்வர மூர்த்தி ஆகியவையாகும்.[18] மேலும் விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, அம்மன், விஷ்ணு ஆகிய கடவுளரின் உருவங்களும் உலோகங்களில் செய்யப்படுகின்றன.

பல கோயில்களில் தங்க விக்கிரகங்கள் உள்ளன. பெரும்பாலும் பள்ளியறை உற்சவ மூர்த்திகளே தங்கத்தில் செய்யப்பட்டன. காஞ்சிபுரத்திலிருந்த பங்காரு காமாட்சி என்னும் தங்கத்தினாலான விக்கிரகம், அதற்கெனக் கட்டப்பட்ட கோயிலில் தஞ்சை மேல ராஜவீதியின் வடகோடியில் இருக்கிறது. முஸ்லிம் படையெடுப்புகளின் போது தஞ்சைக்கு வந்து தஞ்சமடைந்த காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களுடன் வந்த அர்ச்சகர்கள் இந்தத் திருவுருவத்தைக் கொண்டு வந்தனர். இதை அறிந்த தஞ்சை அரசர் இந்த அம்மனுக்குக் கோயில் எடுத்தார் என்று கூறுகின்றனர்.[19]

முதலாம் இராஜராஜன் தமக்கையாரும், கிழைச்சாளுக்கியனான வல்லவரையன் வந்தியத் தேவனுக்கு மனைவியாருமான குந்தவையார் தஞ்சைப் பெரிய கோயிலில், உமா பரமேசுவரியார் உள்ளிட்ட தெய்வங்களுக்குச் செப்புத்

18. திருமயிலைச் கபாலீச்சரம், கும்பாபிஷேக மலர், 1982.
19. இராமேசுவரம் மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்' ப. 395.

திருமேனிகள் எடுத்த செய்தி முதலாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டொன்றில் காணப்படுகிறது.[20]

முதலாம் இராஜராஜனுடைய அரசியல் தலைவர்களுள் ஒருவனான பொய்கைநாடு கிழவன் ஆதித்தசூரியன். தஞ்சை ராஜராஜேசவரத்தில், நம்பியாரூரர், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், முதலாம் இராஜராஜன் ஆகியோருக்கும்,[21] சேத்திரபால தேவர், பைரவ மூர்த்திகள், சிறுத்தொண்டநம்பி, திருவெண்காட்டு நங்கை, சீராள தேவர் ஆகியோருக்கும் செப்புத் திருமேனிகள் செய்து வைத்த செய்தி, முதல் இராசேந்திரசோழன் (கி.பி. 1012-1044) கல்வெட்டில் காணப் படுகின்றது.[22]

இந்த அருமையான கலையும் சோழர்கள் போற்றி வளர்த்த கோயிற் கலைகளில் ஒன்றாகும். ஆகவேதான். கோயில் சம்பந்தப்பட்ட கலைகளில் வல்லவர்கள் தஞ்சா வூரைச் சுற்றியுள்ள ஊர்களிலே தான் இன்றும் காணப்படு கிறார்கள்.

உலோகச் சிலைகள் செய்யும் பயிற்சி அளிப்பதற்கு சுவாமி மலையில் 1957ஆம் ஆண்டிலேயே பயிற்சிக்கூடம் நிறுவப்பட்டது. மிகச்சிறந்த வார்ப்புக்கலை ஸ்தபதியான இராமசாமி ஸ்தபதி அப்பயிற்சிக் கூடத்தின் தலைவராக இருந்து வார்ப்புக் கலையில் வல்ல ஆயிரக்கணக்கான சிற்பி களை உருவாக்கியுள்ளார்.

மாமல்லபுரத்திலுள்ள அரசினர் கட்டிட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியிலும் இக்கலை கற்றுக கொடுக்கப்படுகின்றது. வார்ப்புக் கலையைக் கும்பகோணம அருகிலுள்ள அழகா புத்தூரிலும், சுவாமி மலையிலும் உள்ள சில குடும்பங்கள் பரம்பரையாகச் செய்துவருகின்றனர். அழகாபுத்தூர்ப் பரம் பரையில் வந்து, சுவாமிமலை சிற்பக்கல்லூரியில் பயின்று சென்னையிலும், பூம்புகாரிலும் பணிபுரிந்து இப்போது மாமல்லபுரம் சிற்பக்கல்லூரியில் பணியாற்றி வரும் 48 ஆண்டுகள் அனுபவம் பெற்ற சிற்ப சாஸ்திரங்கள் அறிந்த சோ. பூபதி ஸ்தபதி 1957இல் காமராஜர் சுவாமிமலையிலும்,

---

20. தென்னிந்திய தமிழ்ச் சாசனங்கள், பக்.79,80.
21. ,, பக்.96,97.
22. ,, பக்.100.

மாமல்லபுரத்திலும் சிற்பப் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தியிருக்காவிட்டால், இந்நேரம் இக்கலைகள் நசிந்திருக்கும் என்று கூறுகின்றார்.

உலோகச் சிலைகள் செய்ய ஒவ்வொரு முறையும் புதிய அச்சு தயார் செய்கிறார்கள். உலோகச்சிலை வார்த்தெடுத்த பிறகு நுட்பமான வேலைகளைக் கைகளாலேயே செய்கின்றனர்.

ஓர் அடி உயரமுள்ள சிலை செய்வதற்கு மூன்று மாதம் ஆகும் என்று ஸ்தபதி பூபதி கூறுகிறார். பம்பாய் சதாராவில் உள்ள நடராஜர் கோயிலுக்குச் செய்த 5½ அடி உயரமுள்ள நடராஜர் சிலையைச் செய்ய அவருக்கு 6 மாதம் ஆகியது என்று கூறுகிறார் வடிவமைத்தல் சிற்பிகளின் திறமையைப் பொறுத்தது] என்று கூறுகிறார்

இரத்தின கிரி முருகன் கோயிலுக்காக ஆறுமுகசுவாமியையும், டெல்லி மீனாட்சியம்மன் கோயில், உத்திரசுவாமிநாத சுவாமி கோயில், சென்னை, காஞ்சிபுரம், கோயில்கள், அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து ஆகிய வெளி நாடுகளிலுள்ள கோயில்களுக்குத் தேவையான உலோகச் சிலைகளையும் பூபதி ஸ்தபதி செய்துள்ளார்.

ஆந்திராவில் உள்ள ஐயப்பன் கோயிலுக்காக, 3½ அடி உயரமுள்ள ஐயப்பன் சிலையையும், தாய்லாந்து நாட்டு மகா மாரியம்மன் கோயிலுக்காகப் பதினெட்டு கரமும், 3 அடி உயரமுள்ள காளி சிலையையும், எட்டுக் கரங்களும் நான் முகமும் உடைய பிரம்மா சிலையையும் அண்மையில் இவர் செய்து முடித்துள்ளார். இவருடைய மூன்று பிள்ளைகளும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவை அற்புதமான, கலையழகு மிகுந்த சிலைகளாக விளங்குகின்றன.

இந்த உலோகச் சிலைகளைச் செய்யும் இடத்தையும் பட்டறை என்றே கூறுகின்றனர். ஓர் அடி உயரச் சிலையின் விலை ரூ 1500/— ஆகிறது. இக்காலத்தில் பஞ்சலோகச் சிற்பங்களே செய்யப்படுகின்றன. முதலில் மெழுகில், உருவச் சிலையைச் செய்கின்றனர். பிறகு மெழுகின் மேலே புற்று மண்ணைக் கட்டுகிறார்கள் இதற்குக் கரு தயாரித்தல் என்று பெயர். பிறகு செம்பு, துத்தநாகம் ஈயம், தங்கம், வெள்ளி என்னும் ஐம்பொன் கலந்த உலோகக் குழம்பை அச்சுக்குள்

ஊற்றுவர். மெழுகு உருகி வந்துவிடும். உள்ளிடத்தை உலோகக் குழம்பு அடைத்துக் கொள்ளும். உலோகக் குழம்பு ஆறிய பிறகு கருவை உடைத்து, உருவான சிலையை எடுப்பர். பிறகு செதுக்குதல், ராவி சீவுதல், நகாசு செய்தல், தீர்மானித்தல் (பாலிஷ் செய்தல்) ஆகியவை முடிந்த பிறகு இறுதியாகக் கண் திறப்பர். இவ்வாறாகப் பஞ்சலோகச் சிலை உருவாகின்றது.[23] இவ்வாறு செய்யப்படும் சிலைகள் கெட்டியாக இருக்கும். சோழர் காலத்திலிருந்து இன்று வரை தமிழ்நாட்டில் கோயில் களுக்காகச் செய்யப்படும் சிலைகள் கெட்டிச் சிலைகளே.

பொள்ளல் சிலை

முதலில் மண்ணில் உருவச்சிலை செய்து அதன் மீது மெழுகு தடவி மீண்டும் மண்ணைப் பூசுவர். இரண்டு மண் காப்புக்கும் இடையே உலோகக் குழம்பை ஊற்றுவர். மெழுகு கரைந்து வந்துவிடும். உள்ளே உலோகக் குழம்பு படியும். மண்ணைத் தட்டிச் சிலையை எடுப்பர். இந்தச் சிலை இலே சாக இருக்கும். இதனைப் பொள்ளல் சிலை என்பர். இந்த முறையில் தமிழ் நாட்டில் அதிகமாகச் சிலைகள் செய்யப்படுவ தில்லை.

இக்காலச் சிற்பிகளின் திறமை

வார்ப்புச் சிலைகள் செய்வதில் இன்றும் தமிழகச் சிற்பிகள் திறமை மிகுந்தவர்களாக இருக்கிறார்கள், சோழர் காலத்துச் சிவபுரம் நடராஜர் சிலையைக் கடத்தும் போது, அதைப்போலவே இக்காலத்தில் புதிய உலோகச் சிலையைச் செய்து அந்த இடத்தில் வைத்துவிட்டுப் பழைய சிலையைக் கடத்தினர். ஒரு புகழ் பெற்ற சிற்பியை அழைத்து, இந்தச் சிலை, போலிச் சிலைதானா என்று கேட்டபோது, அவர் இன்னொரு சிலையையும் பார்த்து விட்டுத்தான் சொல்லமுடியும் என்றாராம். அந்த அளவுக்கு இக்காலத்துச் செய்த சிலை, சோழர் காலக் கலைநுட்பத்தோடு போட்டி போடுகிறது என்றால், அதைச் செய்த இக்காலச் சிற்பியின் திறமையைப் பாராட்டத்தான் வேண்டும்.

இன்று மாமல்லபுரம், சுவாமிமலை, மாயவரம், கும்ப கோணம், காரைக்குடி, தாம்பரம், கௌரிவாக்கம், குரோம்

---

23. தகவல்; சோ. பூபதி ஸ்தபதி, நாள் 30—7—94

பேட்டை ஆகிய இடங்களில் திருக்கோயில்களுக்குத் தேவை யான பஞ்சலோகச் சிலைகளைச் செய்கிறார்கள். ஆயிரத் திற்கும் மேற்பட்ட கலைஞர்கள் இத்தொழிலில் ஈடுபட் டுள்ளனர். எல்லோருக்கும் நல்ல வருவாய் கிடைக்கிறது. இக்காலத்தில் விநாயகர், நடராஜர், அம்மன் திருவுருவங்கள், பாவை விளக்குகள் ஆகியவையே அதிகம் செய்யப்படுகின்றன. இச்சிலைகளைப் பொது மக்களும் வெளிநாட்டவரும் வாங்கு கின்றனர்.

புதிதாகக் கட்டப்படும் கோயில்களுக்குத் தேவையான உற்சவத் திருமேனிகளைத் தனியாரும், பூம்புகார்க் கைத் தொழில் நிறுவனமும் செய்துதருகின்றன. பூம்புகார் எனப் படும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் பஞ்சலோகச் சிலைகள் செய்யும் பட்டறை சுவாமி மலையில் உள்ளது.

கவசம் செய்தல்

தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் பல்லவர் காலத்திற்கு முன் சுண்ணாம்பு, செங்கல், மரம் இவற்றால் கட்டப்பட்டது என்பதை மகேந்திரவர்மனின் மண்டகப்பட்டுக் கல்வெட்டால் அறிகின்றோம். அக்காலக் கோயில் கருப்பக்கிருக விமானங்கள் மரத்தாலேயே அமைக்கப்பட்டன. இன்றும் கேரளாவில் உள்ள கோயில்களின் கூரைகள் மரத்தாலேயே உள்ளன. சிதம்பரம் நடராஜர் கோயிலின் விமானமும் மரத்தால் ஆனது தான். அதனால் தான் அதற்குச் சோழரும், பாண்டியரும், நாயக்கரும் பலமுறை பொன் வேய்ந்திருக்கிறார்கள். கோயில் களிலுள்ள கொடி மரங்களும் மரத்தால் செய்யப்பட்டவை யாகவே காணப்படுகின்றன.

பழங்காலத்து வண்ணங்கள், ஓவியத்தை அழகுபடுத்தவே பயன்படுத்தப்பட்டன. மரங்களைக் காக்கும் வண்ணம் (Paint) அக்காலத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை. கோயில் கூரைகளும், கொடி மரங்களும் வெய்யிலாலும் மழையாலும், பூச்சிகளாலும் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அக்காலத் தில் செப்புத்தகடு வேய்ந்தார்கள். பின்னர் அதற்குப் பொன் முலாமும் பூசினார்கள்.

திருக்கோயில்களில் திருவிழாக்கள் (பிரம்மோற்சவம்) செய்யத் தொடங்கினார்கள். சிவன் கோயில்களில் பஞ்ச மூர்த்திகளும், திருமால் கோயில்களில் அங்குள்ள உற்சவர் களும் திருவீதியுலாச் செல்லும் போது அவர்களுக்காக வாகனங்களும் மரத்தில் செய்யப்பட்டன. மரத்தேர்களும், விமானங்களும் செய்யப்பட்டன. அவற்றைக் காப்பதற்கும், கவசமாகச் செப்புத் தகடுகள் அடிக்க ஆரம்பித்தார்கள். இவ்வாறாகக் கவசம் செய்யும் தொழில் பல்லவர் காலத்துக்கு முன்பிருந்தே இருந்து வந்திருக்கிறது.

பிற்காலச் சோழர் ஆட்சியில் கோயில்கள் பெருமளவு கட்டப்பட்டபோது இறைவன் திருமேனிகளுக்கும், நிலைப்படி களுக்கும், திருவாசிகளுக்கும், அஷ்டபந்தனத்தைச் சுற்றி யும் கவசம் பொருத்தத் தொடங்கினர். மேலும் அர்த்த மண்டபத்தில் பூஜை சாமான்கள் சோடோபசார சாமான்கள் வைப்பதற்காக மரத்தில் செய்யப்பட்ட உபசார மேடை களுக்கும் தகடு பொருத்தத் தொடங்கினர். அதனால் கவசம் செய்யும் கலை வளர்ந்தது.

திருக்கோயில் தொடர்பான தொழில்களில் முதன்மை இடத்தில், அதிக அளவிலும், ஆயிரக்கணக்கான ஆசாரிகளா லும் அன்று முதல் இன்று வரை செய்யப்பட்டு வருவது கவசம் செய்யும் தொழிலேயாகும். கி. பி. 10ஆம் நூற்றாண் டில், பிற்காலச் சோழர் காலத்தில் திருவீழிமிழலை உடையாற்குப் பொற்கவசம் சாத்தப்பட்ட செய்தியை முதலாம் குலோத்துங்க சோழனின் நான்காம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டால் (கி.பி.1074) அறிய முடிகின்றது. இந்தக் கவசம் திருக்கொள்கை என்னும் சொல்லால் அக் கல் வெட்டில் குறிக்கப்படுகின்றது, இது, இதுவரை நமக்குத் தெரியாத புதிய செய்தியாகும்.

திருவீழிமிழலை உடையாற்குச் சாத்துவதற்குத் திருக் கொள்கை செய்ய, விருதராஜ பயங்கர வளநாட்டு, மேற்கால் நாட்டு, விளந்தையூருடையான், சிற்றம்பலமுடையான் செய்ய பொற்பாதம் என்பவன் இருநூற்றிரு கழஞ்சரையே இரண்டு மஞ்சாடு நாலு மாப் பொன் கொடுத்தான். இதற்கு முன்னர்க் குலோத்துங்க சோழ வளநாட்டுச் செந்தி மங்கலமுடையான் தில்லை நாயகனான வாணாதிராயன் என்பவன் நூற்று நாற் கழிஞ்சே காலே இரண்டு

மஞ்சாடி நாலுமாப் பொன் கொடுத்தான் ஆக மேற் காணும் இருவரும் கொடுத்த பொன் முந்நூற்று முக்கழஞ்சரை யினால் ஒரு திருக்கொள்கை செய்யப்பட்ட செய்தி அக்கல் வெட்டில் கூறப்பட்டுள்ளது.[24]

குறிப்பாகத் 'திருவீழிமிழலை உடையார்க்குச் சாத்தியருள திருக் கொள்கை செய்ய' என்ற ஒரு செய்தி குறிப்பிடப் பட்டுள்ளது. இதில் திருக்கொள்கை என்பது புதிய செய்தி யாக உள்ளது திருக்கொள்கை என்பது கவசமாக இருக்க லாம் என்று ஊகிக்கமுடிகிறது என்று தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் நடன காசிநாதன் கருது கிறார்.[25]

இக் கல்வெட்டால் சோழர் காலத்தில் கவசம் செய்யும் வழக்கம் இருந்ததை அறிகிறோம்.

அண்மைக் காலத்தில் 1973-75 வரை இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் திருப்பணிகள் நடந்தபோது. அங்குள்ள பர்வதவர்த்தனி அம்மனுக்குப் புதிதாகச் சொர்ண பந்தன பத்ம பீடத்திற்குத் தங்கமும், உபசாரமேடைக்கும், நவக்கிரகங்களுக்கும் வெள்ளிக் கவசமும், மூலவரின் கருப்பக்கிருகத்து நிலைப்படிக்கு வெள்ளிக் கவசமும் செய்யப்பட்டன. மேற்கண்ட தங்கம், வெள்ளி வேலைகள் யாவற்றையும் மதுரை முனுசாமி ஆசாரி, அவர் மகன் இராமநாதன் ஆகியோர் மிக்த் திறமையாகச் செய்திருக் கிறார்கள்[26]

காரைக்குடியைச் சேர்ந்த வடிவேலு ஆசாரி 1914 இல் பழனி தண்டாயுதபாணி கோயில் தங்கத் தேருக்குக் கவசம் செய்து பொருத்தியிருக்கிறார். இந்தக் கவசம் செய்யும் தொழிலைப் பரம்பரையாகச் செய்து வருகிறார்கள். இப்போது இத்தொழிலில் புகழ்பெற்று விளங்கும் மயிலாடு துறையைச் சேர்ந்த கலைஞர் எஸ். பழனி ஆசாரி, மயிலாடு துறையிலுள்ள ஏ. ஆர். சி. என்னும் தனியார் நிறுவனத்தில்

---

24. திருவீழிமிழலைக் கல்வெட்டுகள், தொடர் எண் 539/1977.
25. ,, ப.1.
26. இராமேசுவரம் மகா கும்பாபிஷேக சிறப்பு மலர், ப.21.

1973 முதல் 1985 வரை பணிபுரிந்த காலத்தில் 10 தங்கத் தேர்களுக்குக் கவசம் பொருத்தியுள்ளார். அவை திருச்செந்தூர், திருத்தணி, சுவாமிமலை, சமயபுரம் மதுரை மீனாட்சியம்மன் கோயில், சென்னை கந்தசாமி கோயில், வடபழனி முருகன் கோயில், திருவேற்காடு சங்கரன் கோயில், காஞ்சி காமாட்சியம்மன் கோயில் ஆகிய இடங்களில் உள்ளன. இந்தச் சிறிய தேர்கள் 14½- அடி உயரத்திலிருந்து 17 அடி உயரம் வரைசெய்யப்படுகின்றது. ஒரு தேருக்குத் தகடு அடிக்க 6 முதல் 8 மாத காலம் ஆகிறது, முதலில் செப்புத்தகடு அடித்துவிட்டுப் பின்னர்த் தங்கமுலாம் பூசுகின்றனர்

தமிழ் நாட்டிலுள்ள பூம்புகார்க் கைத்திறத் தொழில் நிறுவனம், தமிழ்நாட்டுக் கலைஞர்களைக் கொண்டு 21¼ அடி உயரமுள்ள தங்கத் தேரை 2¼ கோடி ரூபாய் செலவில் திருப்பதிக் கோயிலுக்காகத் தயாரித்து 16 9.94 அன்று கோயிலாரிடம் ஒப்படைத்துள்ளது. 780 கிலோ செப்புத் தகடுகளும், 28 கிலோ தங்கமும் கொண்டு இத்தேர் செய்யப் பட்டுள்ளது.[27]

கவசக் கலைஞர் எஸ். பழனி ஆச்சாரி காஞ்சி காமாட்சியம்மன் கோயில் மூலஸ்தான விமானத்திற்குத் தங்கத்தகடு வேய்ந்துள்ளார். மேலும் திருத்துறைப் பூண்டியில் ரிஷப வாகனத்திற்கு வெள்ளிக் கவசம், திருகண்ணபுரம் யானை வாகனத்திற்கு வெள்ளிக் கவசம், சென்னை கந்தசாமி கோயில் மூலஸ்தான கதவு, நிலைப்படி ஆகியவற்றுக்கு வெள்ளிக்கவசம், திருச்செந்தூர் கோயிலுக்கு இரண்டு சடாமகுடம், ஆகியவைகளைச் செய்துள்ளார். சமயபுரம் மாரியம்மனுக்கு 7 கிலோ எடையில் தங்கக் கவசம், திருத்தணி, வயலூர், முருகன் திருவுருவங்களுக்குத் தங்கக் கவசம் செய்துள்ளார். அண்மையில் இவர் சைதாப்பேட்டை சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் உள்ள பிரதோஷ நாயகர், ரிஷபம் ஆகியவற்றுக்குக் வெள்ளிக் கவசம் செய்து கொடுத்துள்ளார். வெள்ளிக்குடையும் செய்துள்ளார். அவை மிகுந்த வேலைப்பாடோடு அமைந்துள்ளன. இந்தக் கவசம் செய்யும் தொழிலை இவர் தன் உறவினர்கள் ஆறு பேரை வைத்துக் கொண்டு மயிலாடுதுறையில் செய்கின்றார்.

27. தினமலர், 17—9—94.

இவருக்குப் பூர்வீகம் காரைக்குடியாகும். கோயில்களுக்குச் சென்று அங்கேயே தங்கியும் செய்து கொடுக்கிறார். கவசம் செய்வதற்கான கூலியை ஒப்பந்த (Contract) அடிப்படையில் அல்லது எவ்வளவு எடையுள்ள உலோகங்களைப் பொருத்து கிறார்களோ அந்த எடைக்கேற்றபடி உலோகத்திற்கேற்றபடி வாங்குகிறார்.

இவர் 1986-87இல் அமெரிக்கா சென்று அங்குள்ள பிட்ஸ்பர்க்கிலுள்ள சீனிவாசப் பெருமாள் கோயிலில் யானை, சேஷ வாகனங்களுக்கும் விக்கிரங்களுக்கும் கவசங்களையும், மற்றும் சோடச உபசார சமான்களையும் வெள்ளியில் செய்து கொடுத்துள்ளார்.

சிங்கப்பூருக்கு 1991இல் சென்று அங்கு இரண்டு ஆண்டு கள் தங்கி மாரியம்மன் கோயிலுக்கு 360 கிலோ வெள்ளியில் ஒரு தேரும், தோப்பாயா காளி அம்மன் கோயிலுக்கு 100 கிலோ வெள்ளியில் கவசமும், திருவாசியும், கேலாஸ் ஈஸ்ட் அவென்யூ II வில் புதிதாகக் கட்டப்பட்ட சிவன் கோயிலில் வெள்ளிக் கதவு, நிலைப்படி, திருவாசி போன்றவற்றையும் பழனி ஆசாரி செய்து கொடுத்துள்ளார். ஆஸ்திரேலியாவில் உள்ள ஸ்ரீசிவா விஷ்ணு ஆலயத்திற்காக வெள்ளிக் கவசங்கள் செய்துளளார்.

இந்தியாவில் செகந்திராபாத் உஜ்ஜயினி மாகாளி கோயி லில் 2 வெள்ளிக் கதவுகள் செய்துள்ளார். இவர் சிங்கப்பூர் அரசிடமிருந்து பரிசுகளும், பாராட்டுப் பத்திரங்களும் பெற் றுள்ளார்.[28]

காரைக்குடியில் அருணாசல ஆசாரி வாகனப் பட்டறை என்பது 100 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. காரைக்குடியில் மட்டும் பத்துபட்டறைகள் உள்ளன. அவற்றில் ஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிகிறார்கள். கும்பகோணத்தில் 25 பட்டறைகளும், சுவாமிமலையில் பல பட்டறைகளும் உள்ளன. பழனி ஆசாரியினுடைய பாட்ட னார் இராம. கதிர்வேலு ஆச்சாரி, தந்தை கே டி. சண்முக ஆசாரி போன்றவர்கள் கவச வேலையில் பெரும்புகழ் பெற்ற வர்கள். இவர்கள் காரைக்குடியைப் பூர்வீகமாகக் கொண்ட

28. தகவல்: எஸ். பழனி ஆச்சாரி, நாள் 14—8—93

வர்கள். 1970க்குப் பிறகு தமிழ்நாட்டில் கவசம் செய்யும் தொழில் பெருமளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழகத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கோயில் தொடர்பான இத்தொழிலில் ஈடுபட்டுப் புகழும் செல்வமும் பெற்றுச் சிறப்பாக வாழ்கின்றனர். அவர்களுக்கும், இனிமேல் படித்து வருகின்ற தொழிலாளர்களுக்கும் தொடர்ந்து வேலை வாய்ப்பு உள்ளது.

மாமல்லபுரத்திலுள்ள பூபதி ஸ்தபதி தான் செய்யும் பஞ்சலோகச் சிலைகளுக்கு மட்டுமே கவசங்கள் செய்து தருகின்றார்.

பூம்புகார்க் கைத்தொழில் கழகத்தின் கவச வேலைக்கூடம் மதுரையில் உள்ளது. அங்குப் பல கலைஞர்கள், செம்பு, பித்தளை, வெள்ளிக் கவசத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அடையாறு சி.பி டி. செல்லும் வழியிலுள்ள மத்திய கைலாஷ் ஆனந்த விநாயகர் கோயில் துவஜ ஸ்தம்பத்திற்குப் பூம்புகார் நிறுவனம் கவசம் பொருத்திக் கொடுத்திருக்கிறது.

பூம்புகார் என்றழைக்கப்படும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் கழகம், மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலுக்கு ரூ 63 இலட்சம் செலவிலும், தேவி கருமாரியம்மன் கோயிலுக்கு ரூ 35 இலட்சம் செலவிலும், மருதமலை கோயிலுக்கு ரூ 73 இலட்சம் செலவிலும், பெங்களூர் கன்னிகா பரமேஸ்வரி கோயிலுக்கு ரூ 49 இலட்சம் செலவிலும் தங்கத் தேர்களைச் செய்யும பணிகளைப் பெற்றுச் செய்துவருகிறது.[29] இவ்வாறு இன்று தமிழகத்தில் கவசம் செய்யும் தொழில் செழித்து வருகின்றது.

மரத்தச்சுத் தொழில்

திருக்கோயில்களில் கருப்பக்கிருகத்தின் மேலுள்ள விமானங்களின் கூரைகள் ஒருகாலத்தில் மரத்தைக் கொண்டு கட்டப்பட்டிருந்தன பின்னர் அம்முறை வழக்கிழந்துவிட்டது

எல்லாக் கோயில்களுக்கும் இன்றியமையாத ஒன்று கொடி மரமாகும். ஒரே மரத்தில் அதைச் செய்வது வழக்கம். இறைலன் திருவீதி உலாவரும் போது பயன்படுத்தப்படும் வாகனங்

29. தினமலர், 11—3—94

களும், மரத்தால் செய்யப்படுகின்றன. கோயில் தேர்களும், கோயில் கதவுகளும், கோபுர வாசற்படி கதவுகளும் மரத்தால் செய்யப்படுகின்றன. இக்காலத்தில் தங்கத்தேர் என்றும், வெள்ளித்தேர் என்றும் சிறிய தேர்கள் செய்வது வழக்கிலிருக்கிறது. இவை பெரும்பாலும் 14 அடி உயரம் முதல் 21 அடி உயரம் வரை இருக்குமாறு செய்யப்படுகிறது. மிகப் பெரிய தேர்கள் இப்போது செய்யப்படுவதில்லை.

புதிதாகக் கட்டப்படும் கோயில்களுக்குக் கதவுகள், கொடிமரம், வாகனங்கள், சிறிய தேர்கள், சப்பரங்கள் தேவையாயிருப்பதால் மரத்தச்சுத் தொழில் பெரிதும் வளர்ந்துள்ளது. பழைய கோயில்களில் உள்ள வாகனங்கள், சப்பரங்கள், தேர்கள், பல்லக்குகள், கதவுகள் ஆகியவை பழுதடையும் போது அவற்றைச் செப்பனிடுகிறார்கள் ஆண்டு தோறும் தேர்ச்சக்கரங்களைப் பழுதுபார்க்க வேண்டியது அவசியமாகிறது. இதனால் எல்லாக் கோயில்களிலும் பரம்பரையாகத் தச்சுத்தொழில் செய்பவர்கள் இருக்கிறார்கள்.

திருவாரூர்த் தேரினது சிறந்பைச் சொல்ல வேண்டியதில்லை. மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் உள்ள சிற்ப வேலைப்பாடு மிகுந்த கதவுகளும் குறிப்பிடத்தந்தவையாகும். கோயில் தேர்ப்பீடங்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் வேலைப்பாடு மிகுந்தவையாகும்

சுசீந்திரம் கோயிலில் 20க்கும் மேற்பட்ட வாகனங்களும், 16 பல்லக்குகளும், நான்கு தேர்களும் உள்ளன.[30] இராமேஸ்வரத்திலுள்ள அருள்மிகு இராமநாதசுவாமி கோயிலிலும் 20க்கும் மேற்பட்ட வாகனங்கள், வெள்ளித்தேர் ஆகியவை உள்ளன.[31] சென்னைக் கபாலீசுவரர் கோயில், சைதாப்பேட்டைக் காரணீசுவரர் கோயில், சிவசுப்பிரமணிய கோயில் ஆகியவற்றிலும் ஒவ்வொன்றிலும் இருபதுக்கும் மேற்பட்ட வாகனங்கள் உள்ளன.

பிரம்மோற்சவம் நடைபெறும் பத்து நாள்களிலும் இரண்டு வேளைகளிலும் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு நிகழ்வதால் பெரும்பாலும் எல்லாப் பெரிய கோயில்களிலும்

30. K K Pillai, The Sncindram Temple, p. 434.
31. இராமாசுவரம் மகாகும்பாபிஷேக சிறப்பு மலர், ப.19.

இருபதுக்கும் மேற்பட்ட பெரிய வாகனங்களும், அதே அளவு சிறிய வாகனங்களும் உடையனவாயிருக்கின்றன.

இக்காலத்தில் கோயில் தேர் செய்வதில் வல்ல தச்சர்கள் கூவம், தக்கோலம், திருமழிசை ஆகிய ஊர்களில் உள்ளனர். கூவத்தில் வசிக்கும் ஆறுமுக ஆசாரி புதிய தேர்கள் செய்வதில் வல்லவர்.[32]

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மரவேலைப் பிரிவு கள்ளக்குறிச்சியில் உள்ளது. அங்குத் தங்கம், வெள்ளிக் கவசம் பொருத்தத் தகுந்த சிறிய தேர்கள், மற்றும் பெரிய தேர்கள், வாகனங்கள் ஆகியவை செய்யப்படுகின்றன. இந்த அரசு நிறுவனமே இப்போது பெரும்பாலான கோயில் வேலைகளை எடுத்துச் செய்கிறது.

திருமழிசையிலுள்ள தாண்டவராய ஆச்சாரி, தேர்ச் சக்கரங்கள் செய்வதில் வல்லவர். இவருக்கு இது பரம்பரைத் தொழில். திண்ணனூர்க் கோயில், சைதாப்பேட்டையிலுள்ள காரணீசுவரர் கோயில், சௌந்தரீஸ்வரர் கோயில், சிவசுப்பிரமணியசுவாமி கோயில் ஆகிய கோயில்களிலுள்ள தேர்களை ஆண்டுதோறும் பழுது பார்க்கிறார். திருமழிசையிலுள்ள வீற்றிருந்த பெருமாள் கோயிலுக்கு 27 அடி உயரமுள்ள தேரையும், அதற்கு இரண்டு குதிரைகளையும் செய்து கொடுத்துள்ளார். அங்குள்ள ஒத்தாண்டீசுவரர் கோயிலுக்கு 12 அடி உயரமுள்ள தேரையும், அங்குப் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இராஜகோபுர வாயிலுக்கு இரட்டைக் கதவுகளையும் செய்துள்ளார். மேலும் நாக வாகனம், யானை வாகனம், அன்ன வாகனம், பிரதோஷ நாயகருக்கான ரிஷப வாகனம், துவஜஸ்தம்பம் ஆகியவற்றையும் பல கோயில்களுக்குச் செய்து கொடுத்துள்ளார். இவ்வாறு பல மரத்தச்சர்கள் தமிழ்நாட்டில் பரவலாக இருக்கிறார்கள். அவர்கள் இருக்குமிடங்களிலுள்ள கோயில்களில் மரச் சிற்ப வேலை செய்கின்றார்கள்.

கொடிமரம் செய்வதற்கும், தேர் செய்வதற்கும் மரத் தச்சர்கள் தேக்கு மரத்தையும், தேர்ச்சக்கரங்கள் செய்வதற்குக் காட்டுவா மரத்தையும், வாகனங்கள் செய்வதற்கு அத்தி மரம், நுணாமரம் ஆகியவற்றையும், கோயில் கதவுகள்

32. தகவல்; மு. கச்சியப்ப பிள்ளை, நாள் 10—1—94

செய்வதற்குத் தேக்கு, படாக்கு ஆகிய மரங்களையும் பயன் படுத்துகின்றார்கள்.[33]

மரங்களில நுட்பமாகச் சிற்ப வேலைகள் செய்யும்கலைஞர் களும் இருக்கிறார்கள். இவர்கள் கோயில் தேர்களில் பொருத்துவதற்கான சிற்பங்கள், துவஜ ஸ்தம்பத்தில் பொருத்துவதற்கான சிற்பங்கள், கோயில் வாயிற்படிகளில் பொருத்துவதற்கான கஜலட்சுமி போன்ற சிற்பங்கள் ஆகிய வற்றைச் செய்கின்றார்கள்.

திருமழிசையில் உள்ள வி. காளாஸ்திரி ஆச்சாரி என்னும் பொற்கொல்லர், ஆரம்பத்தில் அணிகலன்களையும், கோயில் களுக்கான எந்திரத் தகடுகளையும் செய்து கொண்டிருந்தார். பின்னர் அத்தொழிலை விட்டுவிட்டுச் சந்தன மரத்தில் நுட்பமான சிற்ப வேலைகளைச் செய்யும் தொழிலை மேற் கொண்டிருக்கிறார். இவர் தான் பார்க்கிற எந்த உருவத் தையும் எந்த அளவிலும் செய்யக்கூடிய ஆற்றல் பெற்றவராக இருக்கிறார். மிக முக்கியமாக சிறிய வடிவில் (miniature) பெரிய கோயில்களை வடிப்பதில் வல்லவர். அரிசியிலும் சிற்ப வேலை செய்ததற்காக 1970 இல் தேசிய விருது பெற்றவர். இந்த விருதை இவரும், இவருடைய மகன்கள் டி.கே.மூர்த்தி, டி. கே. பரணி என்னும் இருவரும் மாறி மாறி ஐந்து முறை பெற்றுள்ளனர். இவர்களுக்கு ஒரு சிறு வடிவில் அமைந்த கோயில் அமைப்புடைய சிற்பம் செய்வதற்கு 20நாள் ஆகிறது.

இவர்களுடைய படைப்புகளைப் பூம்புகார் நிறுவனம் வாங்கிக் கோயில்களுக்கு அனுப்புகிறது.

தஞ்சை, காரைக்குடி, போளூர், சென்னை, விழுப்புரம், கடலூர், நாகர்கோயில் ஆகிய இடங்களில் உள்ள திறமை மிகுந்த மரத்தச்சர்கள் கோயில்களுக்கான திருப்பணிகளைச் செய்துவருகிறார்கள்.[34]

சுதை, சிமெண்ட் சிற்பத்தொழில்

கோயில் கோபுரங்களில் பொருத்துவதற்காகப் பொம்மை களைச் சுதையினாலும், சிமெண்ட்டினாலும் செய்கிறார்கள்.

---

33. தகவல் வை. தாண்டவராய ஆச்சாரி, நாள் 15—8—94
34. தகவல் வை. காளாஸ்திரி ஆச்சாரி, நாள் 15—8—94

பலவகையான புராணக் காட்சிகளைச் சித்திரிக்கும் பொம்மைகள் கோயில் கோபுரங்களில் இடம் பெற்றுள்ளன. பரதநாட்டியத்தின் 108 கரணங்களும், தஞ்சைப் பெரிய கோயில் கோபுரத்தில் பொம்மைகளாக இடம்பெற்றுள்ளன. விலங்குகள், பறவைகள், மரங்கள் ஆகிய பொம்மைகளையும் கோபுரங்களில் வைத்துள்ளனர்.

இக்காலத்தில் சுதைக்குப் பதிலாகச் சிமெண்ட் கலவையினால் பொம்மைகளைச் செய்கிறார்கள். இக்காலத்தில் சுதை வேலையில் சிறந்தவராகக் கருதப்படுபவர் தேவக்கோட்டை நாகராஜ ஸ்தபதி என்பவராவர்.[35] சிதம்பரம், விழுப்புரம், திருவதிகை, காஞ்சிபுரம் போன்ற ஊர்களிலும் பரம்பரையாகச் சுதை வேலை செய்துவரும் ஸ்தபதிகள் இருக்கிறார்கள். திருவதிகையில் சரவணன் என்பவரும், விழுப்புரத்தில் இராஜேந்திரன் என்பவரும் இக்கலையில் வல்லவர்களாவர். இவர்களுடைய மேற்பார்வையின் கீழ் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் சுதை, சிமெண்ட்டால், கோயில் கோபுரங்களுக்கான பொம்மைகளைச் செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.[36]

இந்தக் கலையும், வண்ணத்தீட்டும் கலையும் மாமல்லபுரம் சிற்பப் பயிற்சிக் கூடத்தில் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. சுதை, சிமெண்ட் பொம்மைகள் செய்யும் பட்டறையைப் பூம்புகார் நிறுவனம் முன்பு நடத்தி வந்தது. இப்போது அந்தப் பட்டறையை அந்நிறுவனம் மூடிவிட்டது என்று கூறுகிறார்கள்.

வண்ணந் தீட்டுதல்

கோயில் கோபுரங்களிலும், விமானங்களிலும் உள்ள பொம்மைகளுக்கும் தளங்களுக்கும் வண்ணந்தீட்டுவது ஒரு சிறந்த கலையாக விளங்கி வந்தது. பல்வேறு நிறப்பொடிகளில் எண்ணெய் கலந்து, பல நிறங்களில் பொம்மைகளுக்கு வண்ணம் பூசி வந்தனர். பிறகு மேல்நாட்டு வண்ணக் கலவைகளைப் பயன்படுத்தினர். அப்படி அந்த வண்ணங்கள், வெய்யில், மழை, உப்புக்காற்றால் மிக விரைவில் மங்கின,

---

35. தகவல் ச. பழனி ஆச்சாரி, நாள் 14—8—94
36. தகவல் எம். நாகலிங்கம், நாள் 31—7—94.

ஆகவே, இப்போது சிமெண்ட் கலந்த ஸ்நோசெம் வண்ணங்களையும், எனாமல் வண்ணங்களையும் பயன்படுத்துகின்றனர்.

கோயில் உள்பகுதிகளில் உள்ள சுதைச்சிற்பங்களுக்கு, அவ்வவற்றிற்கு ஏற்ற வண்ணங்களைப் பயன்படுத்துகின்றார்கள். பழைய கோயில்களாக இருந்தால் அவற்றின் விமானம், கோபுரம் ஆகியவற்றின் அடித்தளம் கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கும். அவற்றிற்கு வண்ணம் பூசுவதில்லை. புதிய கோயில்கள் சிமெண்ட்டினால் கட்டப்படுவதால் அவற்றின் அடித்தளம், கருங்கல் போன்ற தோற்றத்தை உண்டாக்க வேண்டுமென்பதற்காகக் கருஞ்சாம்பல் நிறத்தில் எனாமல் வண்ணங்களைத் தீட்டுகின்றனர். இவற்றைத் தண்ணீர் பாதிப்பதில்லை. தண்ணீர் மேலேபட்டாலும் தெறித்து விழுந்துவிடும். கோபுரங்களுக்கும் விமானங்களுக்கும் அடர்ந்த சந்தன நிறத்தில் ஸ்நோசெம் என்னும் சிமெண்ட் கலந்த வண்ணத்தைப் பயன்படுத்துகின்றனர். இவற்றின் மீது அழுக்குப் படிந்தால் மழைத்தண்ணீர் பட்டவுடன் அழுக்கு நீங்கிப் பொலிவு பெறுகிறது. வண்ணம் மேலும் இறுகுகிறது.

இந்த முறையில் தான் அடையாறு சி.பி.டி. வளாகத்தின் எல்லையிலுள்ள மத்திய கைலாஷ் கோயில் கோபுரங்களிலும், விமானங்களிலும், திருமழிசை ஒத்தாண்டீசுவரர் இராஜ கோபுரத்திலும் வண்ணங்கள் இப்போது தீட்டப்பட்டுள்ளன.

இப்போது கோயில்களுக்கு எண்ணெய் வண்ணங்கள் (Oil-Painting) சிமெண்ட் வண்ணங்கள் (Snowcem) உப்புக் காற்றால் ஏற்படும் பாதிப்பைத் தடுக்கும் வண்ணங்கள் (Alkaline Resistance Paints) ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

கோயில் அணிகலன்கள் (Temple Jewellary)

தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் விலையுயர்வு காரணமாகவும், பொற்கொல்லர் கோயில் நிருவாகிகளின் நாணயமின்மை காரணமாகவும், பொது மக்கள் அணிகலன்களைச் செய்து கோயில்களுக்குத் தானமாக இக்காலத்தில் அளிப்பதில்லை. அதனால் இக்காலத்தில் கோயில் ஆபரணங்கள் செய்யும் கலை நசிந்து வருகிறது.

ஒரு காலத்தில் சோழர்களும், பாண்டியர்களும், நாய்க்க மன்னர்களும், செல்வர்களும் அள்ளி அள்ளி அணிகலன்களைக் கோயில்களுக்கு அளித்த செய்தியைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன ஆனால் இன்றோ மிகுந்த வருவாயுள்ள பணக்காரக் கோயில்களான திருப்பதி, திருச்செந்தூர், பழனி, திருத்தணி ஆகிய கோயில்களில் தான் இப்போது அணிகலன்கள் செய்யும் பழக்கம் இருக்கிறது. மற்ற கோயில்களில் பழைய நகைகளைக் காப்பாற்றினாலே போதும் என்ற நிலை இப்போது உருவாகியுள்ளது.

அரசக் குடும்பத்து அணிகலன்கள் முன்பு கோயில்களில் இடம் பெற்றன. இப்போது அந்த அணிகலன்கள் மூலாம் பூசப் பட்ட அணிகலன்களாக பரதம் ஆடும் மகளிரின் கைகளையும், கழுத்தையும் இடுப்பையும் அலங்கரித்து வருகின்றன.

நெற்றிச்சுட்டி, தலைப்பில்லை, கழுத்துசசங்கிலி, பதக்கம்' மூக்குத்தி, கம்மல், தோடு, மாட்டல், கொப்பு, காசுமாலை, வளையல், வங்கி, ஒட்டியாணம், மகரகண்டி, கிரீடம், விந்த சரம், தலைச்சூடி, நெக்லஸ், கல்பதித்த மாங்காய் மாலை, நாக வட மாலை முதலிய ஆபரணங்கள் திருஆபரணங்கள் என்னும் பெயர் பெற்று விளங்கியவை இன்று ஆடல் மகளிரையே அழகு செய்கின்றன.[37]

சுக்ரா என்னும் கோயில் நகைகள் தயாரிக்கும் நிறுவனம், சென்னை மயிலாப்பூரில் உள்ளது. கோயில் திருஆபரணங்களின் மாதிரிகளை, நடனமாடும் மங்கையருக்காக, பரம்பரையாகக் கோயில் நகைகள் செய்யும் பொற்கொல்லர்களைக் கொண்டு வெள்ளியில் செய்து, தங்க மூலாம் பூசி விற்பனை செய்கிறார்கள். இந்தக் கலை நசிந்துவிடாமல் இருக்கவும், மக்களுக்கு இந்த நகைகளின் மீது ஆர்வம் ஏற்படுவதற்காகவும் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25, 26, 27 தேதிகளில் சென்னை மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் சிற்றுண்டி விடுதியில் கண்காட்சி ஒன்றை நடத்தினார்கள்.

குமரி மாவட்டத் தலைநகரான நாகர்கோவிலின் ஒரு பகுதியான வடசேரியில் வசித்த நூற்றுக்கணக்கான பொற்கொல்லர் குடும்பங்கள், கோயில் நகைகன் செய்யும்

37. த.வளவன், வையகம் சுற்றும் வடசேரி நகைகள், வணிகமணி, தினமணி, 11—7—94.

தொழிலையே நம்பி வாழ்ந்திருந்தன. இப்போது சுமார் முப்பது குடும்பங்களே இக்கலையைக் காப்பாற்றி வருகின்றன. வடசேரியின் புகழ்பெற்ற கைவினைக் கலைஞர் மாணிக்கம் ஆசாரி, கோயில் நகைகள் தயாரிப்புக்காக 1984ஆம் ஆண்டில் ஜனாதிபதி விருது பெற்றிருக்கிறார்.

பழங்காலத்தில் சொக்கத் தங்கத்தில் திருஆபரணங்கள் செய்து அவற்றில் நவரத்தினக் கற்களைப் பதித்துக் கடவுளர்க்கு அணிவித்தார்கள். தங்கம், நவரத்தினம் விலை அதிகமாகிவிட்டதால் இப்போது வெள்ளியில் தயாரித்து மெழுகு அடைத்துப் பின்னர் தங்கமுலாமிடுகின்றனர். இப்போது போலிக் கற்களையே பதிக்கின்றனர்.

உலகெங்கும் நடத்தப்படும் பரதநாட்டியப் பள்ளிகளுக்கும், சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா மற்றும் சில நாடுகளில் புதிதாகக் கட்டப்படும் இந்துக்கோயில்களுக்கும் வடசேரியிலிருந்தே கோயில் ஆபரணங்கள் அனுப்பப்படுகின்றன. இந்த அரிய கலை அழிந்துவிடாமலிருக்க, அகில இந்தியக் கைத்தொழில் வாரியமும், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் கழகமும் இணைந்து ஆவன செய்ய வேண்டும்.[38]

பட்டுக்குடை செய்தல்

தமிழ்நாட்டில் அரசர் வாழுமிடம் கோயில் என்றழைக்கப்பட்டது. பின்னர்க் கடவுளுக்குக் கட்டப்பட்ட கட்டிடமும் கோயில் எனப்பட்டது. அரசர் வாழ்ந்த முறைமையிலேயே கடவுள் வாழும் கோயில்களையும் அமைத்தனர். அரசனின் கருணை உள்ளத்தை வெண்கொற்றக் குடையாக உருவகித்தனர். தமிழ் இலக்கியங்களும், இலக்கணங்களும் வெண்கொற்றக் குடையைப் பெரிதும் போற்றிப் பேசுகின்றன அக்குடைகள் இறைவன் திருக்கோயில்களிலும் இடம் பெற்றன இறைவன் ஆலயத்து உள்பிரகாரத்திலும், மாடவீதிகளிலும் உலா வரும்போது குடையோடுதான் உலா வருவார். அதற்காகப் பஞ்சமூர்த்திகளுக்கும் குடை செய்யப்பட்டது. தேர் உச்சியின் மீது குடை பொருத்துவது வழக்கம். நாளடைவில் குடைகள் பழுதுபட்ட போது பழுது பார்க்கவும் தொடங்கினர்.

38. த. வள்ளவன். வையகம் சுற்றும் வடசேரி நகைகள், வணிகமணி, தினமணி, 11-7-94.

மேலும், ஒவ்வோர் ஆண்டும் பிரம்மோற்சவத்தின் போது ஒரு புதிய குடையாவது செய்ய வேண்டும் என்ற வழக்கத்தைக் கோயில்களில் ஏற்படுத்தினர் அதனால் குடை செய்யும் தொழில் செழித்தது. காஞ்சி வரதராஜர் கோயிலில் ஆண்டு தோறும் புதிய குடைகள் செய்கிறார்கள். ஆண்டில் 365 நாட்களில் 360 நாட்கள் காஞ்சி வரதராஜசுவாமி கோயிலில் இறைவன் குடையோடு பவனி வருகின்றார்.

இந்தப் பட்டுக் குடைகளை அமெரிக்கா, பிரான்சு, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலுள்ள இந்துக் கோயில்களிலும் பயன்படுத்துகின்றனர். பட்டுத்துணியினால் குடைகள் செய்யும் இத்தொழில் தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்திலும், சென்னைச் சிந்தாதிரிப்பேட்டையிலும் பரம்பரையாகச் சில குடும்பங்களால் செய்யப்பட்டு வருகிறது. இவர்களே கோயில் தேர்களுக்குத் தேவையான கொடிச் சீலைகளையும் தொம்மைகளையும் (துணியினால் நீளமாகக் காற்றடைந்த பலூன் போல இருப்பது) தயாரிக்கின்றனர்.[39]

இறைவன் வாகனத்தின் மீதமர்ந்து திருவீதி உலாவரும் போதும் உள்பிரகாரத்தில் சுற்றி வரும்போதும குடைகளைப் பயன்படுத்துகின்றனர். குடை இல்லையென்றால் திருவீதி உலாத்தோற்றம் முழுமையாகாது. எல்லாக் குடைகளும் பட்டுத்துணியால் செய்யப்பட்டபோதிலும், உள்பிரகாரத்தைச் சுவாமி சுற்றிவரும் போது பயன்படுத்தப்படும் சிறு அலங்காரக் குடையையே பட்டுக்குடை என்று அழைக்கின்றனர்.

குடைகளின் விட்டம் சாண் கணக்கில் வைத்துச் செய்யப்படுகின்றது. 6லிருந்து இரண்டு இரண்டு சாண்கள் கூட்டி 32 சாண் விட்டம் வரையுள்ள குடைகள் செயயப்படுகின்றன.[40]

இப்போது இக்குடை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் குறைந்துவிட்டனர். சென்னைச் சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு குடும்பத்தினரும், காஞ்சிபுரம் கங்கைகொண்டான் மண்டபத்தில் உள்ள ஒரு குடும்பத்தினருமே இப்போது இத்தொழிலைச் செய்து வருகின்றனர்.

39. தகவல் மு. கச்சியப்ப பிள்ளை, 10—1—94.

40. ,,

தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலும் புதிய கோயில்கள் பல கட்டப்படுவதால் குடைகளின் தேவை அதிகரித்துள்ளது. எல்லாக் கோயில்களிலும் பிரம்மோற்சவத்தின் போது புதுக் குடை பயன்படுத்துவது என்னும் வழக்கமும் உள்ளது. இப்போது குடைகளுக்குத் தேவை அதிகமாக இருப்பதால், இந்தக் கலையில் பயிற்சி பெற்று மற்றவர்களும் இத்தொழிலில் ஈடுபடலாம்.

இக்குடைகளை மூங்கில், சாட்டின் அல்லது டஃபேடா துணி, பட்டுநூல், முறுக்குநூல், ஆலமரத்தின் விழுது, பட்டுத் துணி ஆகியவற்றைக் கொண்டு செய்கின்றனர். ஆலம் விழுது குடையைத் தாங்கிப் பிடிக்கும் நடுக்கம்பம் செய்யப் பயன்படுத்தப்படுகிறது.

மூங்கிலைப் பத்தைகளாகத் தேவையான அளவுக்குப் பிரித்து வெட்டி, வேப்ப எண்ணெயில் தோய்த்து வட்டமாக அமைத்து, மேலே பட்டுத்துணியைத் தைக்கிறார்கள். பூச்சிகளால் குடை அரிக்கப்படாமல் நூறாண்டு வரைக்கும் இருப்பதற்கு வேப்பெண்ணெய் உதவுகிறது.

காஞ்சிபுரத்தில் குடை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள திரு. கிருஷ்ணமூர்த்திக்கு மூலப் பொருள்களை வாங்கும் நிதி வசதி இல்லாததால் குடை செய்ய ஆர்டர் கொடுப்பவர்களையே அவற்றை வாங்கித்தரச் சொல்லுகிறார். செய்கூலியாக ஒரு குடைக்கு ரூ3 000/- வாங்குகிறார். 18 சாண் விட்டமுள்ள குடை செய்யக் கூலியோடு ரூ12,000/- ஆகிறது.[41]

பக்தர்கள் இறைவனிடம் குடை சமர்ப்பிப்பதாகவும் வேண்டிக் கொள்கிறார்கள். இவ்வாறு கோயில் நிருவாகத்தாலும் பக்தர்களாலும் குடைக்கான கட்டளைகள் (Order) கிடைக்கின்றன.

கோயில் தொடர்பான இத்தொழில் மேலும் வளர்ச்சியடைவதற்கு வாய்ப்புள்ளது.

பூஜைக்குரிய விளக்குகள் மற்றும் சகல சோடசவுபசாரச் சாமான்கள்

திருக்கோயில்களில் பூசையின் முறையானது சாங்கம், உபாங்கம், ப்ரத்யங்கம் என மூவகைப்படும்.

---

41. The Hindu, The glory of the Temple kudai, *18—6—94*

சாங்கம் என்பது அபிஷேகம், பாத்யம், ஆசமனீயம், அர்க்கியம், வஸ்திரம், ஆபரணம், சந்தனம், புஷ்பம் என எட்டு வகைப்படும்.

உபாங்கம் என்பது தூபம், தீபம், விபூதி அணிவித்தல், குடை, கண்ணாடி, சாமரம், விசிறி, வ்யஜரம், நர்த்தனம், கீத வாத்யம் எனப் பத்து வகைப்படும்.

ப்ரத்யங்கமென்பது நைவேத்யம், பலி போடுதல், ஹோமம் செய்தல், நித்யேத்ஸவம், சுளுக்கோதக தானம், ஸ்வஸ்தி வாசனம் என ஆறு வகைப்படும். இந்த இருபத்து நான்கும் இறைவனுக்குச் செய்யும் சாங்கோ பாங்க ப்ரத்யங்கம் என்ற பூஜை முறையாகும். இவ்வாறு செய்வதையே சோடச உபசாரம் என்பர். (இராமேசுவர கும்பாபிஷேக மலர், ப. 135) (சோடச உபசார விளக்கம், எஸ். சுவாமிநாத சிவாச்சாரியார்). இதற்குப் பயன்படும் பித்தளை, செப்புக் குடங்கள். பாத்திரங்கள், தூப தீபங்கள், குடை, கண்ணாடி, சாமரம் போன்றவற்றைச் சோடச உபசாரச் சாமான்கள் என்பர். எல்லாக் கோயில்களிலும் பூசை செய்வதற்கு இவை தேவை குத்து விளக்குகளும், பாவை விளக்குகளும் கோயில் களில் பயன்படுத்தப்படுகின்றன.

புதிதாகக் கட்டப்படும் கோயில்களில் 1. தூபக்கால் (சாம்பிராணி போன்ற மணப்பொருட்களைப் போடப் பயன் படுவது. 2. தீபக்கால் (ஏக ஹாரத்தி) 3. புஷ்பரத ஹாரத்தி (தேர்த்தட்டு மாதிரி இருப்பது) 4. நட்சத்திர ஹாரத்தி (வட்டத்தட்டில் 27 திரிகள்) 5. பஞ்சதட்டுக்குடம் (ஐந்து தட்டுகள் - ஒரு குடம் - திரிகள் உள்ளது. இதனைப் பூரண குப்ப தீபம் என்பர்.) 6. திமுகம் (இரண்டு திரி) 7. வில்வ ஹாரத்தி (மூன்று திரி) 8. சதுர்ஹாரத்தி (நான்கு திரி) 9. பஞ்ச ஹாரத்தி (ஐந்து திரி) 10. பஸ்பம் (விபூதி கிண்ணம்) 11. தர்ப்பணம் (கண்ணாடி) 12. சத்ரம் (குடை) 13 சாமரம் (வெண்சாமரம்) 14. வியஜனம், 15 விசிறி, 16. துவஜம் (கொடி), 17. கற்பூரக்கலை (5 தட்டு முதல் 11 தட்டுவரை). 18. மணி, 19 தட்டு, 20. விபூதி மடல், 21. குங்கும மடல், 22. அபிஷேகக் கலசம், 23. தூங்கா விளக்கு, 24, அர்க்கிய வட்டில் (தீர்த்தம் இருப்பது) மற்றும் பிரமதாளம், காண்டா மணி, சேமங்கலம் (சேமக்கலம் - எறிமணி) ஆகிய பொருட்கள்

தேவை. இவை செப்பு, பித்தளை, வெண்கலம், வெள்ளி ஆகிய உலோகங்களால் செய்யப்படுகின்றன.[42]

இவை தவிர மகாதீபம் (அலங்கார தீபம்), நாகதீபம், ரிஷப தீபம், புருஷாமிருக தீபம், சூல தீபம், கமட தீபம் (ஆமை), கஜ தீபம், வியாக்ர தீபம் (புலி), சிம்ம தீபம், த்வஜ தீபம் (கொடி), மயூர தீபம், மேரு தீபம் ஆகியவையும் கோயில் பூசைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

மேலே கூறப்பட்ட பூசைக்குரிய சாமான்கள் கும்ப கோணம், நாச்சியார் கோயில் ஆகிய இடங்களில் செய்யப் படுகின்றன. சென்னையில் கந்தகோட்டம் அருகில் உள்ள பட்டறைகளிலும் இவற்றைச் செய்கிறார்கள். தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக்கழகம் நாச்சியார் கோயிலில் ஏற்படுத்தியுள்ள பட்டறையில், பித்தளை விளக்குகள் எல்லா மாதிரிகளிலும் எல்லா அளவுகளிலும் செய்யப்படுகின்றன.

பூசைப் பொருட்கள் செய்யும் இத்தொழிலிலும் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

குங்குமம் செய்தல்

சைவ சமய உலகில் திருநீறு பெற்றிருந்த முதன்மை இடத்தை இந்நூற்றாண்டில் குங்குமம் பெற்று வருகிறது என்று துணிந்து கூறலாம். இக்காலத்தில் சிவ வழிபாடு குறைந்து சக்தி வழிபாடு அதிகரித்து வருவதாலும், திருக் கோயில்களில் வழிபடச் செல்வோரில் ஆடவரைக் காட்டிலும் மகளிரே அதிகமாகச் செல்வதாலும், கோயில்களில் குங்குமப் பிரசாதம் வழங்குவது அதிகரித்து வருகிறது. ஒவ்வாமை மற்றும் பின் விளைவுகள் இல்லாத திருநீற்றின் உபயோகம் குறைந்து, பலருக்கு ஒத்துக்கொள்ளாத குங்குமம் இக்காலத்தில் சமய உலகில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, குங்குமம அதிக அளவில் தயாரிக்கப்படுகிறது. கோயில்களோடு தொடர்புடைய ஒரு தொழிலாகக் குங்குமம் தயாரிப்பதையும் கூறலாம்.

ஒரு கிலோ குண்டு மஞ்சளை அரைத்து அதனுடன் $\frac{1}{4}$கிலோ வெங்காரம், $\frac{1}{4}$ கிலோ படிகாரம், 25 எலுமிச்சம்

42. தகவல் அ. மோகனசுந்தர குருக்கள், 31—7—94

பழங்களின் சாறு, நெய் அல்லது நல்லெண்ணெய் 300 கிராம் ஆகியவற்றைச் சேர்த்துக் குங்குமம் செய்வர். இந்த விகிதப்படி தேவைக்குத் தகுந்த அளவு குங்குமம் செய்து கொள்ளலாம்.

அருள்மிகு மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தில் மஞ்சள் குங்குமம் செய்யும் பேற்றினைப் பரம்பரையாக ஒருசில குடும்பத்தினர் நடத்தி வருகின்றனர்.[43] காஞ்சி சங்கர மடத்தில் அவர்களுக்குத் தேவையான மஞ்சள் குங்குமத்தை அவர்களே தயாரித்துக் கொள்கிறார்கள். மதுரை, மயிலாப்பூர் ஆகிய இடங்களில் தனியார் சிலர் குங்குமம் தயாரித்து கோயில் களுக்கும் மக்களுக்கும் விற்பனை செய்து வருகின்றனர் அரக்கு நிறம், சிவப்பு நிறம் ஆகிய நிறங்களில் குங்குமம் தயாரிக்கப்படு கின்றது காஞ்சி காமாட்சியம்மன் கோயில், மாங்காடு காமாட்சியம்மன் கோயில், திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோயில் ஆகிய கோயில்களிலும் குங்குமம் செய்கின்றார்கள். திருவேற்காடு கருமாரி அம்மன் கோயிலில் பாக்கு நிறத்தில் குங்குமம் தயாரிக்கப்படுகிறது.

தமிழ்நாடு முழுவதிலும் பரவலாகக் குங்குமம் தயாரிக்கப் படுகின்றது. இத்தொழிலில் ஆயிரக்கணக்கானவர் ஈடுபட் டுள்ளனர்.

சந்தனம்

திருக்கோயில்களில் சந்தனத்தின் பயன்பாடு குறைவாகவே உள்ளது. கோயில்களுக்குத் தேவையான சந்தனத்தை அந்தந்தக் கோயில்களிலேயே தயார் செய்து கொள்கின்றனர். சந்தனக் காப்பு செய்யும் பக்தர்கள் வெளியில் விற்கப்படும் சந்தனத்தை வாங்கிக் கோயிலுக்குத் தருகிறார்கள். பக்தர்கள் சந்தனக் காப்பு செய்வதாகப் பெருமளவில் வேண்டிக் கொள்வதால் இக்காலத்தில சந்தனம் தயாரிக்கும் தொழிலும் வளர்ந் துள்ளது.

பந்தல் தொழில்

திருக்கோயிலில் திருவிழாக் காலங்களில் முக்கியமாகப் பிரம்மோற்சவம், வசந்தோற்சவம், பவித்ரோற்சவம், கும்பாபி ஷேகம் மற்றும் சில முக்கிய உற்சவங்கள் நடக்கின்ற காலத்தில்

43. ஆர். ஷண்முக சிகாமணி, உங்கள் சிந்தனைக்கு, திரு மயிலைக் கபாலீச்சரம், கும்பாபிஷேக மலர் 1982

கோயிலுக்கு உள்ளேயும் வெளியே சந்நிதித் தெருவிலும் பெரும் பந்தல்களைப் போடுகின்றனர். இறைவன் திருவீதி உலா வரும் மாடவீதிகளில் ஆங்காங்கே இறைவன் தங்குவதற்காகவும், கந்தர்வர் பூச்சொரிவதற்காகவும் பந்தல் போடுகின்றனர். தமிழ்நாட்டிலுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோயில்களில் சித்திரை முதல் பங்குனி முடிய 12 மாதங்களிலும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன[44] அவற்றிற்காகப் பந்தல் போடும் தொழில் நடைபெற்று வருகிறது. இத்தொழிலிலும் ஆயிரக்கணக்கானோர் ஈடுபட்டுள்ளனர்.

பூமாலை தொடுத்தல்

திருக்கோயில்களில் பூக்களுக்கே முதலிடம். மலர் தூவிப் போற்றுவதையே பூசை என்கிறோம். நாள்தோறும் காலை முதல் அர்த்தசாம பூசைவரை உதிரிப்பூக்களும், மாலைகளும் தேவைப்படுகின்றன. விழாக்காலங்களில் திருவீதியுலாப் புறப்பாட்டின் போது பெரும் தண்டு மாலைகளைச் செய்து கடவுளர்க்குச் சாத்தி மக்கள் மகிழ்கிறார்கள். இதனைச் சாற்றுபடி என்றே சிறப்பிக்கின்றார்கள். சென்னைச் சைதாப் பேட்டையிலுள்ள காரணீசுவரர் கோயிலில் சித்திரை மாதம் நடக்கும் பிரம்மோற்சவத்தின் போது இறைவனுக்கு அணிவிக்கப்படும் மாலைகள் போன்ற பெரிய மாலைகளை எந்தக் கோயிலிலும் பார்க்கமுடியாது முக்கியமாக ஐந்தாம் நாள் ரிஷப வாகனத்தின் மீது எழுந்தருளும் போதும், ஏழாம் நாள் இரவு தேர்ப்படியிலிருந்து திருக்கோயிலுக்குத் திரும்பும் போதும் பிரம்மாண்டமான மாலைகளை அணிவிக்கிறார்கள்.

மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருச்செந்தூர் முருகன் கோயில், காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயில், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில், திருமயிலைக் கபாலீசுவரர் கோயில், வடபழனி முருகன் கோயில், திருவேற்காடு கருமாரியம்மன் கோயில், மாங்காடு காமாட்சியம்மன் கோயில், பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், வைத்தீஸ்வரன் கோயில், சென்னை சென்ன மல்லீசுவரர் கோயில் ஆகிய கோயில்களிலேயும் கோயில்களுக்கு வெளியிலேயும் பூமாலை தொடுக்கும் பணியை ஆயிரக்கணக்

44. ஆனந்த போதினி, பஞ்சாங்கம், சென்னை, 1994

காணவர்கள் செய்கிறார்கள். பூப்பல்லக்கு, பிரபைகளை பூவாலேயே அலங்கரித்தல், புஷ்பாங்கி, புஷ்ப விமானம் என்று பூக்களைக் கொண்டு விந்தையுலகம் படைக்கும் விற்பன்னர் களைக் கொண்டுள்ளது தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள்.

திருநீறு செய்யும் தொழில்

கொங்கு நாட்டுத் திருத்தலங்களில் ஒன்று பழனி. அங்குள்ள பழனி ஆண்டவர் திருக்கோயில் காரணமாக அங்கு இரண்டு தொழில்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் அத்தொழில்களில் ஈடுபட்டுப்பிழைக் கின்றனர். அங்கு முருகன் கோயில் இல்லை எனில் அங்குள்ள வர்களுக்கு வேலை வாயப்பே இல்லை என்று கூறலாம். திருநீறு தயாரித்தலும், பஞ்சாமிர்தம் தயாரித்தலும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

திருநீறு

திருநீற்றின் சிறப்பை ஞானசம்பந்தர் போற்றிப் புகழ்ந் துள்ளார். திலகவதியார் இட்ட திருநீறு திருநாவுக்கரசரின் நோய் தீர்த்தது. திருநீறு எந்தவிதமான ஒவ்வாமையையும் இட்டுக் கொள்பவர்களுக்கு உண்டாக்குவதில்லை. பல சமயத் தலைவர்களும், கடவுள அருள் பெறறவர்களும், திருநீறறைத் தங்களைக் காண வருகின்றவர்களுக்குத் தருகின்றனர். தென்னாட்டுத் திருக்கோயில்களில், குறிப்பாகச் சைவத் திருக்கோயில்களில் இறைவன் பிரசாதம் என்றாலே திருநீறு தான். விநாயகரை, சிவபெருமானை, முருகனை, அம்மனை வணங்க வரும் பக்தர்களுக்கு முதலில் அளிக்கப் பெறுவது திருநீறு.

திருநீறு தயாரித்தல்

சைவர்கள் அணிந்து கொள்ளும் திருநீறு படிப்படியான நிலைகளில் தூய்மையான முறையில் தயாரிக்கப்படுகிறது. பசுவின் சாணத்தையும், சம்பாப்பதரையும் கலந்து அடை போலத் தட்டி வெய்யிலில் காயவைப்பது முதல்நிலை காய்ந்த சம்பாப்பதர் அடைகளைக் கோபுரம் போல அடுக்குதல் இரண்டாம் நிலை. அதன் உச்சியில் கற்பூரம் கொளுத்தி வைத்தல் மூன்றாம் நிலை. நெருப்பு கனன்று அடங்கிய பிறகு

வில்லை வில்லையாக எடுத்தல் நான்காம் நிலை. அவற்றைத் தூளாக்கிச் சல்லடையில் சலித்தல் ஐந்தாம் நிலை. சலித்த தூளை மெல்லிய துணியில் மீண்டும் சலித்தல் ஆறாம் நிலை. அவற்றோடு வாசனை திரவியங்கள் சேர்த்தல் ஏழாம் நிலை. இவ்வாறு தயாரிக்கப்பட்ட திருநீறு காகிதப் பைகளில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வருகிறது.[45] இவ்வாறு தயாரிப்பது பழமையான முறையாகும். பழனிமலை அடிவாரம் மற்றும் சுற்றியுள்ள இடங்களில் வசிக்கும் மக்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

திருக்கோயில்கள் நூற்றுக்கணக்கில் இருப்பதாலும், இந் நூற்றாண்டில் மக்கள் தொகை பெருகிக் கோயிலுக்குச் செல்வோர் எண்ணிக்கை அதிகரித்ததாலும், திருநீற்றின் தேவை அதிகமாயிற்று. பழனிமலை அடிவாரத்தில் உள்ள பழனி பரிமள விலாஸ விபூதி ஸ்டோர் என்னும் நிறுவனம் சித்தனாதன் எனப்வரால் 1920 இல் தொடங்கப் பெற்றுப் பெருமளவில் திருநீற்றைத் தயாரித்து வருகின்றது. இவர்களி டத்தில் 150க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிறுவனத்தைத் தவிர மூன்று நிறுவனங்கள் பெரிய அளவில் திருநீறு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இந்நிறுவனங்களால் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. இப்போது புதிய முறையில் திருநீற்றைத் தயாரிக்கின்றனர். நெல் உமியை மட்டும் டன் கணக்கில் வாங்கி வந்து, அவற்றைக் கொட்டி நெருப்பு வைத்து விடுகின்றனர். அது ஒரு வாரத்திற்குக் குறையாமல் கனன்று இயற்கையாக அணையும், அந்தச் சாம்பலைத் தண்ணீரில் கரைத்து ஓடவிட்டு மூன்று முறை வடிகட்டுகின்றனர், வடிகட்டப் பெற்ற ஈரமான துகளை மூன்று நாள்கள் வெய்யிலில் காய வைக்கின்றனர். பிறகு நறுமணப் பொருள்களைக் கலக்கின்றனர். இவ்வாறு திருநீறு செய்வதற்காகும் கால அளவு 12 நாள்களாகும். 1920க்கு முன் நறுமணமில்லாத திருநீறே விற்கப்பட்டு வந்தது. 1920இல் தான் சித்தனாதன் என்பவர் நறுமணப் பொருள் களைக் கலந்து, மணமுள்ள திருநீற்றை விற்கத் தொடங்கினார். இப்போது காகிதப் பைகளிலும் திருநீற்றை நிறைத்து

45 தகவல் : மு. கச்சியப்ப பிள்ளை, 10—1—94

விற்பனை செய்கின்றனர், மணமூட்டுவதை வணிக ரகசிய மாக வைத்துள்ளார்.[46] எந்த மணத்தைச் சேர்க்கிறார்கள் என்று தெரியவில்லை.

திருநீறு தயாரிக்கும் தொழில் தொழில் திருச்செந்தூர் மற்றும் காளஹஸ்தி ஆகிய இடங்களிலும் நடைபெறுகிறது, ஆனால் அதிக அளவிலும், சிறந்த முறையிலும் பழனியில் தான் தயாரிக்கப்படுகிறது.

பஞ்சாமிர்தம்

திருக்கோயில்களில் கடவுளர் திருமேனிகளுக்குப் பழங் களால் செய்யப்படும் அபிஷேகத்தைப் பஞ்சாமிர்தம் என்று சொல்லுகிறோம். பழனியில் உள்ள முருகர் சிலை போகர் என்னும் சித்தரால் நவபாஷாணத்தில் செய்யப்பெற்றது என்பதும், அதன்மீது பட்ட அபிடேகப் பொருளுக்கு நோய் தீர்க்கும் தன்மை உண்டு என்பதும் காலங்காலமாகவே மக்கள் நம்பி வருகிற செய்தியாகும். பஞ்சாமிர்தத்தால் அபிடேகம் செய்து செய்தே பழனி ஆண்டவன் தேய்ந்துவிட்டார். இப்போது அந்த மூலவருக்கு அபிடேகம் செய்வதில்லை. இருந்தாலும் பழனி பஞ்சாமிர்தத்துக்குப் பெருமை குறைய வில்லை. இன்றும் அங்கே பஞ்சாமிர்தம் தயாரிக்கும் தொழில் பெருமளவில் நடந்து வருகின்றது. பழனி திருக்கோயில் நிருவாகத்தாராலும், மற்றும் நூற்றுக்கணக்கான தனியார் களினாலும் பஞ்சாமிர்தம் தயாரிக்கப்படுகிறது. பஞ்சாமிர்தம் தயாரிக்கும் தொழில் வடபழனி, திருத்தணி, திருச்செந்தூர் ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

மலைப்பழம், முந்திரி, திராட்சை, கற்கண்டு, ஏலக்காய், ஜாதிக்காய், மாசிக்காய், பேரீச்சம்பழம், தேன், நாட்டுச் சர்க்கரை, பச்சைக்கற்பூரம் ஆகியவற்றைக் கலந்து செய்வது தான் பஞ்சாமிர்தமாகும். வணிக நோக்கில் செய்கின்றவர்கள் இதில் சிலமாற்றங்களையும் செய்வர் பஞ்சாமிர்தத்தை முதலில் மண் கலயங்களிலும் பிறகு தகரப்பாட்டில்களிலும் அடைத்து விற்றனர். அதனால் மண் கலயங்கள் தகரப்பாட்டில்கள் தயாரிக்கும் தொழில்கள் விருத்தியடைந்தன. இப்போது பிளாஸ்டிக் பாட்டில்களில் அடைத்து விற்கின்றனர். அதனால்

46. தகவல் : கு. சிவனேசன், நாள் 30-1-94

பிளாஸ்டிக் பாட்டில்கள் தயாரிக்கும் தொழிலும் வளர்ச்சி அடைந்துள்ளது.

பஞ்சாமிர்தம் தயாரிப்பதற்கு ஆகும் கால அளவு 10 நிமிடமாகும். இத்தொழிலில் இங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

பிரசாதம் தயாரித்தல்

திருக்கோயில்களில் இறைவனுக்குத் திருவமுது படைப்பதற்காகவும் யாத்ரிகர்களுக்கும்(தேசாந்திரிகள், கோயிலில் பணிபுரிகின்றவர்களுக்கும் அளிப்பதற்காகவும், சுத்தான்னம், மிளகுப் பொங்கல், புளியோதரை, சர்க்கரைப் பொங்கல், தயிர்ச் சோறு, சுண்டல் போன்ற உணவு வகைகளைச் செய்வதற்காக மடைப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு மடைப் பள்ளியிலும் குறைந்த அளவு மூவர் பணிபுரிவர். இவர்களுக்குப் பரிசாரகர் என்று பெயர். இவர்கள் அர்ச்சகர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்வர். மூலஸ்தானம் தூய்மை செய்தல், பூசைக்குரிய பொருட்கள் எடுத்துத் தருதல், தீபாராதனையின் போது உதவி செய்தல், சந்தனம் அரைத்தல் ஆகிய பணிகளையும் செய்வார்கள். பெரிய கோயில்களில் மூன்றுக்கு மேற்பட்டவர்களும் பரிசாரகர்களாகப் பணிபுரிகிறார்கள் பக்தர்கள் செய்யும் அபிடேகங்கள், கட்டளைகள் ஆகியவற்றின் போது நைவேத்தியத்திற்காக உணவுப்பொருள்கள் செய்யப்படுகின்றன.

பழங்காலத்தில் பிரசாதம் என்றால் திருநீறு, குங்குமம், துளசி ஆகியவையே நினைவுக்கு வரும். இக்காலத்தில் லட்டு, பொங்கல், புளியோதரை போன்றவற்றையும் பிரசாதம் என்னும் சொல் குறிக்கிறது.

வடநாட்டு இனிப்புப் பண்டமான லட்டு இன்று தென்னாட்டுக் கோயில்களில் அளிக்கப்பெறும் பிரசாதங்களில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

ஆந்திர மாநிலத்திலுள்ள திருப்பதி வெங்கடேசப் பெருமாள் கோயில் லட்டும், அதன் சுவையும் பக்தர் உலகில் பெரிதும் பாராட்டிப் பேசப்படுகின்றது. தமிழ்நாட்டில் வடக் கெல்லையிலுள்ள திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக் கோயில் லட்டு தயாரிப்பிலும் விற்பனையிலும் திருப்பதிககு அடுத்தபடியாக இரண்டாம் இடம் வகிக்கிறது. திருப்பதியில்

லட்டு கோயிலிலேயே தயாரிக்கப்படுகிறது. ஆனால், திருத்தணியில் ஏலம் விடப்பட்டு, அதை எடுத்தவர்களால் லட்டு தயாரிக்கப்படுகிறது. இன்று தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான கோயில்களில் லட்டு தயாரிக்கப்பட்டு விற்கப்படுகிறது.

சில கோயில்களில் பிரசாதம் செய்யும் உரிமை அர்ச்சகர்களுக்கே உரியது. சிதம்பரம் நடராஜர் கோயிலிலும், திருப்பெருந்துறை ஆத்மநாதர் கோயிலிலும் அர்ச்சகர்களுக்கே பிரசாதம் தயாரிக்கும் உரிமை உள்ளது.

முறுக்கு, தேன்குழல், அதிரசம், மிளகுஅடை, பருப்பு அடை, மற்ற இனிப்பு வகைகளையும் மடைப்பள்ளியில் செய்து விற்கின்றனர். சின்ன காஞ்சிபுரத்தில் வரதராஜப் பெருமாள் கோயில் மடைப்பள்ளியில் அவிக்கப்படும் காஞ்சிபுரம் இட்லி பெரும்புகழ் பெற்றது. சிதம்பரம் நடராஜர் கோயில் பிரசாதமான கற்கண்டுப் பொங்கல் சுவை மிகுந்ததாகும். சிதம்பரம் கோயிலுக்குரிய மற்றொரு பிரசாதம் சம்பா கொஸ்து என்ற வெண்சோறு. இது நெய்யும் மிளகும் சேர்த்துச் சமைத்ததாகும். இதைக் கத்தரிக்காய்த் துவையலுடன் தருவர். பிள்ளையார்பட்டி மோதகம் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் திருக்கண்ணமுது, ஆழ்வார் திருநகரி வங்காரத் தோசையும் புகழ்பெற்ற பிரசாதங்களாகும்.[47]

மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் கோயிலில் உள்ள மடைப்பள்ளியில் பரிசாரகர்கள் ஐவர் பணிபுரிகின்றனர். இவர்கள் பூஜை வேளையின் போது அர்ச்சகர்களுக்கும் உதவி புரிகின்றனர். இறைவனுக்குப் படைக்கப்படுபவை விற்கப்படுவதில்லை.

இங்குப் பிரசாதக் கடை என்று தனியாக இருக்கிறது. அதை ஆண்டுதோறும் ஏலம் விடுகிறார்கள். அதிகத் தொகைக்கு ஏலம் கேட்டவருக்கு விற்பனை உரிமை அளிக்கப்படுகிறது. பரிசாரகராகப் பணிபுரிவதற்கு உரிய தகுதி பெற்றவர்களே ஏலம் கேட்க முடியும். 1994 – 95 ஆம் ஆண்டிற்கு ஏலத்தொகை ரூ65,000/-க்கு எடுத்திருக்கிறார்கள். ஏலம் எடுத்தவர்கள் கோயிலுக்கு உள்ளேயே அவற்றைச் செய்கிறார்கள்.

48. இராமேசுவரம் மகாகும்பாபிஷேகச் சிறப்பு மலர், பக். 397, 398.

உறவுக்காரர்களான ஐவர் அங்கே பணிபுரிகின்றனர். பிரசாத வகைகளைச் செய்து அவற்றைக் கபாலீசுவரருக்கு நைவேத்யம் செய்த பிறகு விற்பனை செய்கிறார்கள். இங்கு லட்டு, மிளகு வடை, புளியோதரை, அதிரசம் ஆகியவை தயாரிக்கப்படு கின்றன. பிரதோஷ காலங்களிலும், திருவிழாக்காலங்களிலும் இவை அதிகமாக விற்பனையாகின்றன. நாள்தோறும் வரும் வெளியூர் பக்தர்களே அதிக அளவில் வாங்குகின்றனர். [48]

சைதாப்பேட்டை சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் பிர சாதம் செய்வதற்கு ஒரு தொகையைக் கோயிலார், பரிசார கரிடம் கொடுத்து விடுவர். அவர் பொருட்களை வாங்கிப் பிர சாதம் செய்வார். இக்கோயிலில் பிரசாதம் விலைக்கு விற்கப் படுவதில்லை.

சுவாமி நைவேத்யத்திற்கு மட்டும் காலையில் சுத்தான்ன மும், அபிஷேகக் காலங்களில் சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், சுண்டல், புளியோதரை, கேசரி, எலுமிச்சம்சோறு ஆகியவற்றைச் செய்து படைப்பர். இரவில் பள்ளியறைப் பிர சாதமாக மேலே குறிப்பிடப்பட்டவற்றில் ஏதாவதொன்றைச் செய்து படைத்துப் பின் பக்தர்களுக்குக் கொடுப்பர். உச்சிக் காலத்தில் தயிர்ச்சோறு படைத்துப் பட்டை சாதமாகத் தேசாந்திரிகளுக்கும், கோயில் பணியாளர்களுக்கும், ஏழைகளுக் கும் அளிப்பர். [49]

தமிழ்நாட்டிலுள்ள பெரிய கோயில்கள் எல்லாவற்றிலும் பிரசாதக் கடைகளும், மடைப்பள்ளிகளும உள்ளன. இவ் விரண்டிலும சேர்த்து ஒவ்வொரு கோயிலிலும் குறைந்தது பத்து பேர் பணிபுரிகின்றனர். மொத்தத்தில் தமிழ்நாட்டுக் கோயில்களில் ஆயிரக்கணக்கான பரிசாரகர்கள் இதொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

பூம்புகார் என்னும் பெயர், தமிழ்நாட்டுக் கோயில் கலை உலகில் குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகிறது. கோயில்கலை தொடர்பான தொழிற்கூடங்களை ஏற்படுத்தி, பலருக்கு

48. தகவல்: சிவ. ஆத்மநாதன், நாள் 29—7—94
49. தகவல் : டி. சுவாமிநாதன், 31—7—94

வேலைவாய்ப்பளித்தும், கலைஞர்களின் கலைப்பொருள்களை விற்பனை செய்தும் அவர்களுக்கு அந்தத் தொகையை அளித்தும் பெருந்தொண்டாற்றி வருகிறது. திருக்கோயில்களுக்கும், கோயில் கலைத்தொடர்பான கலைஞர்களுக்குமிடையே ஒரு பாலமாகப் பூம்புகார் நிறுவனம் விளங்குகிறது. 1962இல் பூம்புகார்க் கைவினைக்கழகம் என்ற பெயரில் ஆரம்பிக்கப் பட்ட இந்நிறுவனம் இன்று தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் என்ற பெயரில் புகழ்பெற்று விளங்குகிறது.

தமிழ்நாட்டின் பல இடங்களில் தொழிற்கூடங்களை ஏற் படுத்தியும், இந்தியாவெங்கும் விற்பனை நிலையங்களை ஏற்படுத்தியும் கோயில் கலைகளை இந்நிறுவனம் வளர்த்து வரு கிறது. உலகெங்கும் உள்ள இந்துக்கோயில்களுக்குத் தேவை யான கலைப்பொருள்களை இநநிறுவனம் தயாரித்து வழங்கு கிறது.

சுவாமி மலையில் உள்ள பஞ்சலோகச் சிலைகள் செய்யும் பட்டறை, மாமல்லபுரத்தில் உள்ள கருங்கல் சிலைகள் செய்யும் பட்டறை, நாச்சியார் கோயிலிலுள்ள பித்தளை விளக்குகள் செய்யும் பட்டறை, மதுரையிலுள்ள கலசப்பட்டறை, கள்ளக் குறிச்சியிலுள்ள மரச்சிற்பங்கள் செய்யும் பட்டறை ஆகிய பட்டறைகளைப் பூம்புகார் நிறுவனம் நிறுவிச் சிறப்பாக நடத்தி வருகிறது.

பூம்புகார் நிறுவனத்தில் கைதேர்ந்த தலைமைச் சிற்பிகள் பதினைந்து பேருக்கு மேலும் திறமைமிகுந்த தொழிலாளர்கள் இருநூறு பேருக்கு மேலும் பணிபுரிகின்றனர். ஆயிரக்கணக் கான தனிப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகளையும் இந்நிறுவனம் வாங்கி விற்பனை செய்கிறது.

தமிழ்நாட்டில் திருக்கோயில் தொடர்பான தொழில்களில் இலட்சக்கணக்கில் தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள். நல்ல ஊதியம் பெறுகிறார்கள். புதிதாகக் கோயில்கள் நிறைந்த அளவில் கட்டப்படுவதால் எதிர்காலத்திலும் அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. தமிழர் வாழும் வெளிநாடு களிலும் கோயில்கள் கட்டப்படுகின்றன. இதன் காரணமாகத் திருக்கோயில்களுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவும், திருக் கோயில்களுக்கும் தொழில்களுக்கும் இடையே உள்ள உறவும் வலுவடைந்துள்ளன. ★

தொகுப்புரை

இக்காலத்தில் தமிழகத்திலும், தமிழர் வாழும் வெளி மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் நிறையக் கோயில்கள் கட்டப்படுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை கருப்பக் கிருகம் மட்டுமே உள்ள சிறிய கோயில்களாகும்.

கோயில்களுக்குக் கொடை தருவதில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. கிராமம், நிலம், பொன், வீடு இவைகளை இப்போது தானமாகத் தருவதில்லை. பணமாக வங்கிகளில் முதலீடு செய்து அதன் வட்டித் தொகை கோயிலுக்குப் பயன்படுமாறு செய்கிறார்கள்.

கோயில்களின் முக்கிய வருவாய், உண்டியல் வருவாயாக மாறி விட்டது.

தானம் செய்வதை வெளிக்காட்டிக் கொள்ள இக்காலச் செல்வர்கள் அஞ்சுகின்றனர். வருமானவரித் தொல்லை தாங்காமல், ஊர் பேர் தெரியாமல் உண்டியலிலே போட்டு விடுகின்றனர்.

கிராமப் பகுதிகளிலுள்ள பழைய கோயில்கள் வாடுகின்றன. நகரங்களிலுள்ள புதிய கோயில்கள் செழிக்கின்றன.

கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்வது அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் கோயில் சொத்துகளைக் கையாடல், கோயில் நிலங்களை ஆக்ரமித்தல், உற்சவத் திருமேனிகளைக் களவாடல், நல்ல அணிகலன்களை மாற்றிப் போலி அணிகலன்களை வைத்தல் ஆகிய முறைகேடான செயல்கள் அதிகரித்துள்ளன.

வருவாயுள்ள கோயில்களின் அறங்காவலர் பதவிக்குப் பெரும் போட்டிகள் நடைபெறுகின்றன.

கோயில்களில் கடவுளை வழிபடும் முறையில் வருணாசிரம முறை மாறி, புதிய முறை வந்துள்ளது. அந்தணர், ஆளும் கட்சியினர், அதிகாரிகள், செல்வர் ஆகியோரே அருகில் சென்று வழிபட முடிகின்றது.

பொதுவாக மக்களிடையே பக்தி வளர்ந்துள்ளது; ஆனால் பயம் குறைந்துள்ளது.

கோயில் நிருவாகத்தில் கடவுள் பக்தி இல்லாதவர்களும் நம்பிக்கை இல்லாதவர்களும் இடம் பெறுகின்றனர்.

கோயிலுக்கு மகளிர் அதிகமாகச் செல்வது வழக்கமாகி உள்ளது.

கோயில்களுக்குச் சிறிய தேர்கள் (தங்கத்தேர், வெள்ளித் தேர்) செய்யும் வழக்கம் அதிகரித்துள்ளது.

அரசுக் கட்டுப்பாட்டிற்கு அகப்படாத முறையில் அறக் கட்டளைக் கோயில்கள் கட்டப்படுகின்றன.

சிவன் கோயில்களில் சமரச மனப்பான்மை மிகுந்த அளவில் காணப்படுகின்றது.

மாமல்லபுரத்திலும், சுவாமி மலையிலும் தமிழக அரசு ஏற்படுத்திய சிற்பப் பயிற்சிக் கல்லூரிகளாலும், தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் தொழிற் கூடங் களாலும் கோயில் கலைகள் பெரிதும் வளர்ச்சியடைந் துள்ளன.

திருக்கோயில்களோடு சமுதாயத்திற்கு உள்ள உறவும், தொழில் உறவும் பெரிதும் வலுப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக் கலைஞர்களே தமிழகத்திலும், வெளி மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் கோயில் தொடர்பான கலைப் பணிகளைச் செய்வதில் முன்னணியில் இருக்கிறார்கள்.

சிற்பக் கலைஞர்களின் கலைத் திறமை அதிகரித்துள்ளது. சிவபுரம் நடராஜர் சிலை போலவே செய்து, உண்மை இது நகல் இது என்று கண்டு பிடிக்க முடியாதபடி செய்யும் அளவுக் குக் கலைத் திறமை வளர்ந்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சரின் கோயில் நிவாரணத் திட்டம், ஒருகாலப் பூசைத் திட்டம் ஆகியவை பழைய கோயில்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

பிற்காலச் சோழர் காலம் போல, இக்காலம், கோயில் களைப் பொறுத்தவரை பொற்காலமாக விளங்குகிறது.

★

துணைநூற் பட்டியல்

தமிழ் நூல்கள்

.... ஆனந்தபோதினி, பஞ்சாங்கம், சென்னை, 1994.

இராசமாணிக்கம் பிள்ளை, மா., பல்லவர் வரலாறு, கழகம், மறுபதிப்பு, சென்னை, 1977.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரம், கழகம், சென்னை, 1969.

உமாமகேசுவரி, பு.பா., நெல்லையப்பர் கோயில், கழகம், சென்னை, 1990.

கணேசமூர்த்தி, டி.பி., ஆலய விக்கிரக நிர்மாண ஆயாதி சிற்ப இரகசியம், சென்னை, 1960.

சம்பந்த முதலியார், பம்மல், திருமயிலைத் தலபுராணம், சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, சென்னை, 1948.

சாமிநாதையர், உ.வே., (பதி.) பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் ஸ்ரீ தியாகராஜ விலாச வெளியீடு, ஐந்தாம் பதிப்பு சென்னை, 1956.

.... சிலப்பதிகாரம், 1953.

சோமசுந்தரம் பிள்ளை, ஜே.எம்., சோழர் கோயிற் பணிகள், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், நான்காம் பதிப்பு, சென்னை, 1950.

தங்கையா நாடார், வ., தென்னிந்திய தமிழ்ச் சாசனங்கள், கழகம், மறுபதிப்பு, 1967, சென்னை.

திருவள்ளுவர், திருக்குறள் (பரிமேலழகர் உரை), திருக்குறள் அறநிலையம், திருவள்ளுவர் ஆலயம், சென்னை, 1954.

……… திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள், கழக வெளியீடு, சென்னை, 1927.

……… திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரர் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள், கழக வெளியீடு, சென்னை, 1928.

தேவராஜ சுவாமிகள், கந்தர் சஷ்டி கவசம், ஸ்ரீ ஸ்கந்த குரு கவசம், தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை.

நாகசாமி, இரா., (பதி.), சென்னைமாநகர்க் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1970

நாகசாமி, இரா., கல்லும் சொல்லும், சேகர் பதிப்பகம், செனனை, 1977.

நாகசாமி, இரா., சந்திரமூர்த்தி, மா. (பதி.), தமிழகக்கோயிற் கலைகள், தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுத் துறை, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1976.

நாச்சியப்பன், நாகப்பா, திருப்பரங்குன்றம் வேற்கோட்டம், தமயந்தி பதிப்பகம், சென்னை, 1989.

பத்மாவதி, ஆ.(பதி.), திருவீழிமிழலைக் கல்வெட்டுகள், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1994

பரந்தாமனார், அ.கி:, மதுரை நாயக்கர் வரலாறு, பாரி நிலையம், சென்னை, 1960.

பாஸ்கரத் தொண்டைமான் தொ.மு., தமிழ்க் கோயில்கள் தமிழர்

பண்பாடு, எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை பப்ளிஷர்ஸ், திருநெல்வேலி, 1961.

ராமன், மு. கோ. (பதி.), திருமயிலை உலா, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

ராஜசேகரன், ச., திருமயிலைத் திருத்தலம் இலக்கிய வரலாற்றுப் பார்வை, ராஜலட்சுமி பதிப்பகம், சென்னை, 1989.

——— மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயம் தல வரலாறு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு, சென்னை 1993.

வித்யானந்தம், சு., தமிழர் சால்பு, பாரி புத்தகப் பண்ணை, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1671.

இதழ்

வரலாறு, டாக்டர் மா. இராசமாணிக்கனர் வரலாறாய்வு மையம், திருச்சி, ஆகஸ்டு 1993

வரலாறு. டாக்டர் மா இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சி, பிப்ரவரி 1994.

நாள் இதழ்கள்

தினமணி வணிகமணி, ஜூலை 7, 1994

தினமணி, வணிகமணி, ஆகஸ்டு 23, 1984.

தினமலர், மார்ச்சு 11, 1994.

தினமலர், செப்டம்பர் 16, 1994.

தினமலர், செப்டம்பர் 17, 1994.

மலர்கள்

அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் இராமேசுவரம் மகாகும்பாபிஷேகச் சிறப்பு மலர், 5-2-1975.

திருமயிலை கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர், 1992.

பேட்டிகள்

ஆதிமூலம், மு., சிற்பி, மாமல்லபுரம்

9687

ஆதிமநாதன், சிவ., பிரசாதக்கடை ஏலதாரர், கபாலீச் சுவரர்கோயில், திருமயிலை.

கச்சியப்பன், மு,. சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், சைதை.

காளாஸ்திரி, வை., சிற்பி, திருமழிசை.

சிவனேசன், கு., சித்தனாதன் & சன் உரிமையாளர். பழனி

சுப்பிரமணிய முதலியார், சு, அறக்காவலர் குழுத் தலைவர், சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், சைதை.

சுவாமிநாதன், டி., பரிசாரகர், சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், சைதை

தாண்டவராய ஆச்சாரி, மு., திருமழிசை.

தியாகராஜன், வடமொழிப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை,

நாகலிங்கம் எம்., கோபுரப் பொம்மை செய்பவர், சைதை.

நித்தியானந்த ஆச்சாரி, ச., சிற்பி, மாமல்லபுரம்.

பழனி ஆச்சாரி, ச., கவச வேலை செய்பவர், மயிலாடுதுறை.

பூபதி ஸ்தபதி, சோ., சிற்பி, மாமல்லபுரம்.

மோகனசுந்தர குருக்கள், அ., அர்ச்சகர், சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், சைதை.

BOOKS IN ENGLISH

Dayalan, D.,	Early Temples of Tamilnadu, Harman Publishing House, New Delhi, 1992.
Harshananda, Swami.,	All About Hindu Temples, Sri Ramakrishna Ashrama, Second Edition Mysore, 1981
Henry Whitehead, D D.,	The Village Gods of South India, Asian Educational Services, Second Edition, New Delhi, 1983.

Pillay, K.K., The Sucindram Temple, Kalakshetra Publications, Madras, 1953.

Subramanian, S.V. & Rajendran, G (Editores), Heritage of The Tamils, Tempie Arts, International Institute of Tamil studies, Madras, March 1985.

Venkata Ramanayya, V, An Essay on the origin of the south Indian Temple, Methodist Publishing House, Madras, 1930.

News Papers

Tne Hindu, July, 6, 1994.
The Hindu, August 7, 1994
The Hindu, August 9, 1994.
The Hindu, August 24, 1994.
The Hindu. August 25, 1994.
The Hindu, September 16, 1994

★

குறிப்புகளுக்கு

புதிய வெளியீடுகள்

Mysticism of Love in Saiva Tirumurais - Dr. V.C Sasivalli ... 50.00
எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி 2—முனைவர் அன்னி தாமசு ... 30 00
தொல்காப்பியம்-பொருள்-களவியல்—பேரா சிவலிங்கனார் ... 85.00

The Contributions of the Tamils to Indian Culture
Vol. I Language and Literature—Dr K Subbiah Pillai — 18.00
Vol. II Art and Architecture—Dr. K. Bhagavathi ... 30.00
Vol. III Socio Cultural Aspects—Dr M. Valarmathi ... 90 00
Vol. IV Religion and Philosophy Dr. V. C Sasivalli ... 80.00

எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-I—முனைவர் அன்னி தாமசு ... 17.00
சிவகிரி குமர சதகம்—திரு பெய். சந்திரசேகரன் ... 39.00
புதுவூர்ச் சக்ரவர்த்தி அம்மானை—திரு. மொ. மருதமுத்து 27.00
தேரையர் அந்தாதி—மருத்துவர் மா புனிதா ... 33.00
குகலவர் சுவாமி கதை—செல்வி இரா. வசுமதி ... 36.00
குணவாகடம்—முனைவர் வே. நெடுஞ்செழியன் ... 40.00
தோட்டக்காரி கதை—முனைவர் வ அலமேலு ... 28.00
சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள்
முனைவர் சாலினி இளந்திரையன் ... 24.00
உலகத் தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள் அடைவு
முனைவர் தி மகாலட்சுமி ... 35.00

Selected Poems of Bharathidasan — Translation :
Tamil to English Dr V Murugan ... 60.00
Tamil to Malayalam - Dr P.P Thambi & D Ramakrishnan... 60.00
Tamil to Kanada — Mr V. Pasumalai Arasu ... 60.00
Tamil to Telugu — Dr. C. R Sarma ... 60 00

Chieftains of the Sangam Age — Dr K D. Thirunavukkarasu ... 20.00
பாரெலாம் பரந்த தமிழர்—உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ... 25.00
காண்டேகரும் கா. ஸ்ரீ ஸ்ரீ. யும் — முனைவர் மு. வளர்மதி ... 15.00
A Comparative Study ofTamil and Japanese
Dr. Pon Kothandaraman 15.00
தமிழும் பிற துறைகளும்— முனைவர் ந கடிகாசலம் ... 35 00
பெண்ணியம் — முனைவர் இரா. பிரேமா ... 25 00
விலங்கியலும் தமிழியலும்—முனைவா ஏ.த. சோதிநாயகம் ... 10 00
தமிழும் தெலுங்கும் — முனைவர் தா சா. மாணிக்கம் ... 15.00
தமிழ ஆய்வுக் களங்கள் — முனைவர் ந. கடிகாசலம் ... 70 00
வ.உ.சியும் தமிழும் — முனைவர் அ. சங்கரவள்ளிநாயகம் ... 18 00
தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புக்கள்
முனைவர் வீ.ப கா.சுந்தரம் ... 14.00
புதுமைப்பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம்
முனைவர் நா. ஆறுமுகம் ... 20.00
கனகாபிஷேக மாலை — திறனாய்வு —
முனைவர் பீ. டாக்டர் நசீம்தீன் ... 16 00
இருபதின் கவிதைகளில் சமூகநீதிக் கோட்பாடு
முனைவர் து. சீனிச்சாமி ... 20 00
பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்
முனைவர் ச சிவகாமி ... 60 00
தொல்காப்பியம் — பொருள் — பொருளியல்
பேரா. ஆ. சிவலிங்கனார் ... 32.00
அறிவியல்—கட்டுரைகள் முனைவர் மு, வளர்மதி ... 75.00